ஆனரபிள் கோடியாலம் வாஸுதேவ ஐயங்கார்.

மறையவர்தம் மணிவிளக்கே! மதிளரங்கப் பெரும்பதியின் வாழ்வே! இந்தத்
தறையவர்தம் தவப்பயனே! இரவலர்தம் புரவலனுந் தருவே! கல்வித்
துறையவர்தம் புகழ்க்கணியே! யெழில்வாஸு தேவனெனுந் துரையே! சென்னை
யிறையவர்தம் சபைவிளங்கும் ஏறே! என் னுயிர்க்குயிரா யிருந்த நண்பே!

வா. 3. பராபவ௵ வைகாசி௴ ஸ. 14.

ஸ்ரீ ராமானுஜ சரிதம்.

“𑌯𑌦𑌾 𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌗𑍍𑌲𑌾𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤 ।
𑌅𑌭𑍍𑌯𑍁𑌤𑍍𑌥𑌾𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍃𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥”

எந்த எந்த ஸமயத்தில் தர்மத்துக்கு வாட்டமும் அதர்மத்துக்குச் செழிப்பு முண்டாகிறதோ, அப்போது நான் அவதாரம் செய்கிறேன். இது கண்ணபிரானது பிரதிஜ்ஞை.

பற்பல பிறவிகளிற் செய்த புண்ணியங்களின் பெருமையால் அருமையாக மானிட உருவம் பெற்றும் பலர் உண்மை நெறியறியாது, தாங்கள் கடைத்தேற வழிகாணாது மயங்கி யருநரகக் குழியில் வீழுந்து கெட்டுப்போகிறார்கள் என்று அவர்களுக்காக விரிவாகிய வேதாந்த சாஸ்திரத்தைச் சுருக்கி ஸூத்திரமாக இயற்ற வேதவ்யாஸமுனியாக நாராயணனே அவதாரம் செய்தான்.

𑌕𑍃𑌷𑍍𑌣𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌂 𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌂 𑌪𑍍𑌰𑌭𑍁𑌮𑍍 ।

கிருஷ்ணத்வைபாயனரென்னும் வியாஸ முனியை ஸர்வேச்வரனாகிய நாராயணனென்று தெளிவாயாக, என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பிறகு ஸ்ரீபோதாயனர் 'நமது அறிவுக்காக' இவரது உபதேசங்கள் நமக்கு அறிவை வளர்க்குமென்று பெரியோர்கள் கொண்டாடியதால் போதாயனரேன்று பெயர் பெற்ற வ்ருத்திகார ஸ்வாமிகள் பிருஹ்ம ஸூத்திரத்திற்கு வெகு விரிவாய் ஓருரை யெழுதினார்கள். இது லக்ஷம் கிரந்த முடையதென்பார்கள். (கிரந்தமென்பது முப்பத்திரண் டெழுத்துக்களான ஒரு பகுதி) அது இக்காலத்தில் எங்குமே கிடைப்பதில்லை. அதிலுள்ள வாக்கியங்கள் பல அந்தந்த பாஷியங்களில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ சங்கரபாஷியத்தில் பெரும்பாலும் அவை பூர்வபக்ஷத்துக்காதாரமாகவும் ஸ்ரீராமானுஜ பாஷியத்தில் பெரும்பாலும் ஸித்தாந்தார்த்தங்களுக்கு மேற்கோளாகவும் எடுக்கப்பட்டிருப்பதால் போதாயனவ்ருத்தி யென்று பெயர் பெற்ற அவ்வுரை நூல் விசிஷ்டாத்வைதமதச்சார்பாயதென்று ஸ்ரீ வைஷ்ணவர்கள் கூறுகிறார்கள்.

அவ்வுரைநூலை மேற்கோளாகக்கொண்டு த்ரமிடாசார்யரும், ஸ்ரீ குஹதேவஸ்வாமிகளும், (ஹா)பாலருசிகளும், கபர்த்தி ஸ்வாமிகளும் சுருக்கமாக வியாக்கியானங்கள் எழுதினார்கள். டங்காசார்யர் என்னும் பெயர் கொண்ட ஸ்ரீ ப்ருஹ்ம நந்திஸ்வாமிகள் ப்ருஹ்ம ஸூத்திரத்திற்கோருரை யெழுதி அதனால் வாக்கியகாரரென்று பிரஸித்தி பெற்றார். இவர்கள் அனைவரும் செய்த உரை நூல்களெல்லாம் விசிஷ்டாத்வைதமதத்தைச் சார்ந்தவை. இவைகளில் த்ரமிடாசாரியர் செய்த வுரை த்ரமிடபாஷ்யமென்று பிரஸித்தி பெற்றது. இதன் வாக்கியங்கள் சில பின் நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ளன.

காலக்ரமத்தில் மேதாவிகள் பலர் தோன்றித் தங்கள் தங்கள் உபதேசத்தின் வழியே பிருஹ்ம ஸூத்திரங்களுக்குப் பொருள் விளங்க உரை செய்யலானார்கள். ஆகவே உண்மைப் பொருளுக்கும் போலிப் பொருளுக்கும் பேதமறியமாட்டாதது மாத்திரமேயன்றி மதிமயக்கத்தால்போலிப் பொருளில் பெரு நம்பிக்கையும் பிறக்கலாயிற்று. பின்னர் சார்வாகர் ஜைனர் பௌத்தர் முதலாய பலர் வேதங்களைப் பிரமாணமாக ஒப்பாத கூட்டமாகியுலகத்தை மயக்கத்தொடங்கினார்கள்.

‘கா ணாதஸாக்த்ய வாஷண்ட ஜைநாவெளத்தாதிபி:!
த்ருஷ்யாமிநாவஸ்வ விஷ்ணு நாரக்ஷிதா த்ரயீ ‖’

தார்க்கிகர்கள் ஜைனர்கள் பாஷண்டிகள் இவர்களெல்லாருமாக வேதங்களை அலைத்து அதிற்கூறிய தர்மங்களை யழித்துவிட்டதனால் ஸ்ரீமந்நாராயணன் த்ரிதண்டத்தை தரித்துக் கொண்டு (தத்தாத்ரேயராய்) அவதரித்து வேதங்களைக் காத்தருளினான் என்று அத்திரிஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது.

அதுபோலப் பின்காலத்தும் வேத வேதாந்த வாக்கியங்களும் தர்மங்களும் வலிகுலைந்து சீர் கெட்டுப்போகவே அந்த நாராயணனே ஸ்ரீராமானுஜாசாரியராக அவதாரம் செய்தான்.

தத்தாத்ரேயர்போலே ஸ்ரீ ராமானுஜாசாரியரும் ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரமென்பதை யதிராஜ ஸப்ததியில் வேதாந்த தேசிகஸ்வாமிகள்.

‘க்ஷாஷாயேண க்ருஹீதவீதவஸநா தண்டைஸ்த்ரிபி:
மண்டிதா
ஸா மே திஷ்டது சேதஸி யதிபதேர்ஜயதி த்ரய்யந்த ஸம்
ரக்ஷிணீ |’

என்கிற சுலோகத்தால் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இம்மஹா புருஷனது சரித்திர விசேஷங்கள் அமானுஷமாயிருத்தலால் இவரது அவதாரத்தைப் பற்றிப்பல வாறு கூறப்பட்டுளது. அவற்றுள் சில வருமாறு.

“அடையார்கமலத்தலர்மகள்கேள்வன்கையாழியென்னும்
படையோடுநாந்தகமும்படர் தண்டுமொண்சார்ங்கவில்லும்
புடையார்புரிசங்குமிந்தப்பூதலங்காப்பதற்கென்
றிடையேயிராமானுசமுனியாயினவிந்நிலத்தே.”

இஃது இவரது ப்ரசிஷ்யர் (சிஷ்யரது சிஷ்யர்) ஆகிய திருவரங்கத்தமுதனார் பாடிய கலித்துறையந்தாதியில் முப்பத்து மூன்றாவது பாடல். இப்ப்ரபந்தமானது பாட்டுடைத்தலைவனாகிய இராமானுஜாசார்யஸ்வாமிகள் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதாகையால் ஸ்ரீராமபிரான் முன்னே அரங்கேற்றப்பெற்ற வான்மீகி இராமாயணம் போன்ற சிறப்புடையது.

ஸ்ரீய:பதியாகிய நாராயணனுடைய பஞ்சாயுதங்களும் (அவை சக்கிரம், சங்கம், வில், வாள், கதை *என்பனவாம்), இம்மண்ணுலகத்தாரை வாழ்விக்கும் பொருட்டு இராமானுஜாசார்யஸ்வாமியாக அவதரித்தன, என்பது இப்பாடலின் கருத்து.

ஸ்ரீமத்வேதாந்ததேசிகஸ்வாமிகள் இப்பாடலின்பொருளையநுஸரித்து.

“[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥”

*ஸ்ரீமந் நாராயணனது சக்கிரம் ஸுதர்சனமென்றும், சங்கம் பாஞ்சசனியமென்றும், வில் சார்ங்கமென்றும், வாள் நந்தகமென்றும், கதை கௌமோதகீ யென்றும் கூறப்படும்.

என்று ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள்.

எதிரிகளை வென்று தம்மவரைரக்ஷிப்பதினால் பஞ்சாயுதங்களே இவ்வுருவுகொண்ட தென்பது முக்கியாம்சம்.

மற்றோரிடத்தில்

‘𑌨𑌾𑌨𑌾𑌹𑍇𑌤𑍌 𑌤𑌜𑍍𑌜𑌨𑍍𑌮𑌤𑌿𑌸𑍈𑌨𑍍𑌯𑌨𑌾𑌥𑌸𑌂𑌵𑌿𑌯𑌿𑌤𑌸𑍍𑌤𑌾
𑌰𑌕𑍍𑌷𑌾𑌵𑌣𑌂𑌵𑍍𑌯𑌯𑌤𑌿𑌵𑌿𑌹𑌾 𑌰𑌾𑌜𑌿𑌵𑍍𑌯𑍂𑌹𑌹𑍇𑌤𑍋 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌂𑌤𑍍𑌰𑌾𑌤𑌂 𑌵𑌿𑌷𑌯𑌨𑌿𑌯𑌤𑌂𑌵𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑍂𑌹𑌸𑍍𑌤𑍁
𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑍋 𑌯𑌤𑌿𑌪𑌤𑌿𑌰𑌭𑍂𑌦𑍍𑌵𑍇𑌤𑍍𑌰𑌸𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌃 ॥’

என்று ஸ்தோத்ரம் செய்திருக்கிறார்கள். ஸ்ரீமந்நாராயணனது ஸேனாபதியே இவ்வுருவாய்த் தோன்றினார். அவர் கையில் தரிக்கும் பிரம்பு திரிதண்டமாகத் தோன்றிற்றென்பது இதன் முக்கியக் கருத்து.

பருஹ்மஸம்ஹிதை, உபேந்த்ரஸம்ஹிதை, பார்க்கவோப புராணம், ஸ்காந்த புராணத்திலுள்ள பூதபுரீமாஹாத்ம்யம் முதலிய கிரந்தங்களில் இவர் ஆதிசேஷனது அவதாரமேயாகக் கூறப்பட்டது.

யதிராஜவிஜயமென்னும் நாடகத்தில் ‘காஞ்சி கவீந்திரர்’ என்று பிரஸித்தி பெற்ற கடிகாசதகம் அம்மாள் என்னும் வரதாசார்யர் இவர் ஸுதர்சனத்தின் அவதாரமென்று கூறுகிறார். இவ்வரதாசார்யர் இராமானுஜாசார்யஸ்வாமிகளது ப்ரியபாகினேயர் (அன்புள்ள மருமகன்—உடன் பிறந்தாள் குமாரன்) ஆகிய நடாதூராழ்வானது ஆறாவது தலைமுறை.

இதன் உண்மை யெவ்வாறாயினுமாகுக.

“𑌯𑌦𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌮𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍂𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
𑌤𑌤𑍍𑌤𑌦𑍇𑌵𑌾𑌵𑌗𑌚𑍍𑌛 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌮 𑌤𑍇𑌜𑍋𑌽𑌂𑌶𑌸𑌂𑌭𑌵𑌂 ॥”

என்று பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தெளி

வித்த படிக்கு இராமானுஜாசாரியஸ்வாமிகளது திவ்யசரித்திரங்களை யுற்று நோக்கும்போது இம்மஹான் ஸர்வேச்வரனுகிய (பரமாத்மா) கிருஷ்ணமூர்த்தியின் அம்சாவதாரமென்று ஆஸ்திகர்கள் எல்லோருங்கொள்ளவேண்டும்.

ஜகத்வ்யாபாரங்களை நடத்துகிற த்ரிமூர்த்திகளுள் சிவபெருமான் சங்கராசார்யஸ்வாமிகளாகவும், விஷ்ணுவானவர் ராமானுஜாசாரியஸ்வாமிகளாகவும், ப்ருஹ்ம தேவன் மத்வாசார்யஸ்வாமிகளாகவும் அவதரித்து மதஸ்தாபனமும் பாஷியங்களும் செய்து லோகங்களை வாழ்வித்தார்கள் என்பது பொதுவான உண்மைநெறியென்று பக்ஷபாதமில்லாத பண்டிதர்கள் கூறுவார்கள்.

மஹாபுருஷர்களின் தபோபலமும் யோகசக்தியும் தேவதாநுக்கிரஹமும் இக்காலத்திய மேதாவிகளுக்கு நம்பிக்கையை விளைவிப்பதில்லை. ஆனதுபற்றியே யவர்கள் பெரியோர்களின் பெருமையை நன்ருய் அறிந்துகொள்ளுகிருர்களில்லை. அன்றியும் தங்களது யுக்திகளை யங்கும் உபயோகித்துத் தூஷணையில் இறங்கித் தாங்களும் நரகத்துக் காளாகிருர்கள். அப்படி இவர்கள் கெடுதி பெற இடமுண்டாகாதபடி நம்மாலியன்ற வரையில் நாம் உபகாரம் செய்கிறதாய் நினைக்கிறேம்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் விசுவரூபம் காட்டியதை துர்யோதனன் இந்திரஜாலமென்றும் மாயையென்றும் வஞ்சனையென்றும் இகழவில்லையோ? அவரவர் ஜன்மாந்தர புண்ய பாபவாஸனையின்படியவரவர் நினைத்து அதற்கேற்ற பலனைப் புஜிக்கிருர்கள்.

இனி நாம் அவரது சரித்திரத்தை வரிசையாய்க் கூறத்தொடங்குவோம்.

ஸ்ரீ வைஷ்ணவஸமயாசாரியர்களுள் மிகப் பிரவலித்தி பெற்ற ஆளவந்தார்[1] என்னும் யாமுனேயாசார்யரது [2]பௌத்திரராகிய பெரியதிருமலை நம்பியென்பவர் தமது

1. இவர் பாலியத்தில் மஹாபாஷ்யபட்டர் என்பவரிடம் வாசித்துக் கொண்டிருந்தார். சோழராஜனது ஆச்ரயபலம் பெற்ற ஆக்கியாழ்வான் வித்வஜ்ஜன கோலாஹலன் என்னும் பண்டிதன் கையில் ஓலை பிடித்தாரெல்லாரிடத்திலும் ஏடுவரி யென்று ஓர்வரி வாங்கி வந்தான். வரிக்காகத் தூதர் வந்தபோது, பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் யாருமில்லாமல் இவர் ஒருவர் மாத்திரம் முறை விகிதப்படி காவலிருந்தார். உபாத்தியாயரும் போஜனத்துக்குப் போயிருந்தார். இவர் தூதுவர்கொண்டுவந்த உத்திரவைக் கிழித்தெறிந்துவிட்டு ஆக்கியாழ்வானை வாதஞ் செய்து ஜயித்தாலல்லது வரி செலுத்தப்படாதென்று கூறியனுப்பினார். ஆக்கியாழ்வானதைக் கேட்டுக் கோபித்து அரசன் முகமாய் இவரை சபைக்கு வரும்படி, கட்டளையனுப்புவித்தான். அதையும் இவர் மறுத்தார். அரசனது பத்னி கூறியபடி அரசனால் அனுப்பப்பட்ட விருதுகளோடு சிவிகையேறி இராஜசபை சேர்ந்தார். வாதுதொடங்குமுன்னே நீர் கூறுவதை நான் மறுத்துரைக்கிறேன், அல்லது நான் கூறுவதை நீர் மறுத்துரையுமென்று கூறினார். ஆக்கியாழ்வான் ஒப்புக் கொண்டபடி இவர் 'உன்தாய் மலடியல்லள், இவ்வரசன் பாபமில்லாதவன், இவ்விராஜாவின் மனைவிக்கு ஒரே பர்த்தா' 'என்று மூன்று வாக்கியங்கள் கூறி இதை நீர் மறுத்துரைத்தால் உமக்குப் பெயரும் வரியும் நிலை பெறுமென்றார். ஆக்கியாழ்வான் பதில் கூறமாட்டாது தியங்கினான். இதை மறுப்பதெப்படி? என் தாய் மலடி யென்று எவ்வாறு ஒருவன் ஸ்தாபிக்கக் கூடும், அரசன் பாபமுடையவனென்றாவது இராணிக்குப் பல பர்த்தாக்களென்றாவது கூற யாருக்குத்துணிவு பிறக்கும். இதனால் ஆக்கியாழ்வான் தோல்வியடைந்து விட்டான். பின்னர் அரசன் வேண்டுகோளால் இவரே அம் மூன்றையும் ப்ரமாணம் முன்னிலையில் மறுத்துரைத்து மேலும் சாஸ்திரவாதத்திலும் ஆக்கியாழ்வானைவென்று மதத்தையடக்கினார். வாது தொடங்கு முன்னே இவர் ஜயித்தால் அரசன் இவருக்குப் பாதியிராஜ்யம் கொடுப்பது என்றும் இவர் தோல்வியடைந்தால் இராணி ஒரு வருஷகாலம் தாஸியாய் வேலை செய்கிறதென்றும் பிரதிஜ்ஞை செய்யப்பட்டிருந்தது. தான் தாஸியாகாதபடி செய்தாரென்பதைக் கொண்டு இராணி 'நீர் என்னை யாளவந்தீரே' என்றிவரை வாழ்த்தினதால் இவருக்கு 'ஆளவந்தார்' என்று பெயர் ஆயிற்று. அவ்வரசனால் கொடுக்கப்பட்ட பாதியிராஜ்யத்தைச்சிறிது காலம் பரிபாலித்து மணக்கால் நம்பி

உடன் பிறந்த பெண்கள் இருவர்களோடு, திருவேங்கட மலை (திருப்பதிமலை) மேல் நித்யவாஸம் செய்துகொண்டு திருவேங்கடமுடையானுக்கு (ஸ்ரீநிவாஸனுக்கு) [3]திருமஞ்சன கைங்கர்யம் முதலியது செய்துகொண்டிருந்தார். அப்பெண்கள் இருவருக்கும் விவாஹத்துக் குரியபருவம் வந்த உடனே அவர்களில் மூத்தவளாகிய காந்திமதி யென்று [4]பெயர் பெற்ற பூமிப்பிராட்டியாரை ஸ்ரீ பெரும்பூதூர் ஆஸூரி கேசவஸோமயாஜியாருக்கும் இளையவளாகிய லக்ஷ்மீயென்கிற பெரியபிராட்டியாரை [5]மதுரமங்கலம் வட்டமணி கமலநயனபட்டருக்கும் விதி முறைப்படி பெரியதிருமலைநம்பி கன்னிகாதானம் செய்துகொடுத்தார். இம்மணவாளப் பிள்ளைகள் இருவரும் பெரிய

யென்னும் குருவிடம் தத்வோபதேசம் பெற்று விரக்தராய் ஸன்யாஸம் பெற்று ஸ்ரீரங்கத்தில் வாஸம் செய்து வந்தார்.

2. இவருக்கு நான்கு புத்திரர்கள் 1சொட்டை நம்பி. 2-தெய்வத்துக்கரசு நம்பி. 3-பிள்ளையரசு நம்பி. 4-திருவரங்கப் பெருமாளரையர். இவர்களில் இரண்டாவரது புத்திரர்.

3. இவர் தினந்தோறும் ஆகாசகங்கையிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வருவதற்கு ஸந்தோஷித்து ஸ்ரீநிவாஸன் ஒருநாள் இவர் எதிரே ஒரு பிள்ளைபோல் வந்து 'தா தா' என்று அழைத்து தீர்த்தம் கேட்டுவாங்கிச் சாப்பிட்டார். அதனால் இவர் வம்சத்தார் அனைவரும் தாதாசார்யர்கள் என்று குடிப் பெயர் பெற்றவர்கள்.

4. இவர் ஹரித கோத்ரம். ஹரிதரதுப்ரபாவம் பூதபுரீமாஹாத்ம்யத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஹரிதர் அர்சனையிருந்து இங்கே யாகம் செய்தமையாலும் தபோபலத்தாலும் ஸ்ரீமந்நாராயணனது அநுக்கிரஹத்தாலும் பருஷமருஷியானார். விசுவாமித்ரர் சரித்திரத்தோடு ஒப்பிடுக.

5. இம்மதுரமங்கலம் காஞ்சீபுரத்துக்கு வடகிழக்கு 10 மயில் தூரத்தில் உள்ளது, ஸ்ரீபெரும்புதூருக்கு வடமேற்கு 10 மயில். இதற்கு மழலை மங்கலமென்றும் ஒரு பெயருண்டு. ஸ்ரீபெரும்பூதூர், மதுரமங்கலம் இரண்டு கிராமங்களும் செங்கற்பட்டு ஜில்லா காஞ்சீபுரம் தாலூகாவைச் சேர்ந்தவைகள்.

திருமலை நம்பியிடத்தில் [6]பஞ்சஸம்ஸ்காரம் பெற்றவர்கள்.

இம்மஹாபுருஷன் அவதரித்தபோது உலகத்திற்கு க்ஷேமம் என்று தெரிவிக்கக்கூடிய பற்பல நல்ல நிமித்தங்கள் உண்டாயின. ஆபஸ்தம்ப ஸூத்ரவிதிப்படி ஜாதகர்மம் நடத்தப்பட்டது. இவரது மாமாவாகிய பெரிய திருமலைநம்பி இவ்விருத்தாந்தத்தைக் கேட்ட உடனே ஸ்ரீபெரும்புதூருக்கு வந்து பன்னிரண்டாவது நாள் வைஷ்ணவ விசிஷ்டபரம தர்மசாஸ்த்திரத்திற்கூறிய முறையாய் இவருக்குத் தப்தசக்கிராங்கனம் செய்து ஸூத்ரவிதிப்படி நாமகரணம் செய்தார்கள்.

'𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌿𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃'

என்று ஸ்ரீவால்மீகிராமாயணத்தில் லக்ஷ்மணன் மகா தேஜஸ்வியாய் இருந்தாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவரை ஒத்தவராக இக்குழந்தை விளங்கினமையால் இக்குழந்தைக்கும் அப்பெயரே இடப்பட்டது. ஸ்ரீராமனுக்குப்பின் பிறந்தவர் என்னும் பொருள்கொண்ட '𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜' இராமானுஜ என்பதும் (𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣) லக்ஷ்மண என்பதும் இவர் பெயராம். வைஷ்ணவர்கள் லக்ஷ்மணரை இளைய பெருமாள் என்றும் வியவஹரிப்பார்கள். ஆனதுபற்றி இவருக்கு இளையாழ்வார் என்றும் பெயர் கூறுவதுண்டு.

ஸ்ரீராம கிருஷ்ணாதிகளான அவதாரம்போலே இவ்வவதாரத்திலும் மனுஷ்யாபிநயம் நடத்தப்பட்டது. குழந்

---

6. பஞ்சஸம்ஸ்காரமென்பது வைஷ்ணவ ஸமயதீக்ஷை.

1—தப்தமுத்ராங்கனம்.

2—புண்ட்ரதாரணம்.

3—தாஸ்யநாமம்.

4—மந்தரோபதேசம்.

5—திருவாராதனோபதேசம்.

இவ்வைந்தும் பஞ்சஸம்ஸ்காரமெனப்படும்.

தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டு கிருஹ்யஸூத்ர முறைப்படி அன்னப்ராசனம் சௌளம் உபநயனம் இவைகள் அந்தந்தக்காலத்தில் செய்யப்பெற்று பெரும் தேஜஸ்ஸு கொண்டு விளங்கியது. பின்னர் வேதாப்பியாஸமும் ஸாஹித்யாலங்கார தர்க்கவ்யாகரண மீமாம்ஸாதிகளான சாஸ்திரங்களின் அப்பியாஸமும்செய்து தக்ககுலத்தில் முறைப்படி ஒரு கன்னிகையைப் பெரியோர்கள் கல்யாணம்செய்விக்க மணம்புணர்ந்து தர்மசாஸ்திரமுறைப்படி தாய்தந்தையர்களுக்குப் பணிவிடை செய்துவந்தார்.

இவரது தகப்பனாராகிய கேசவஸோமயாஜிகள் நிலையிலா உடம்பை நீக்கிப் புகழுடம்பை இம்மண்ணுலகத்தில் நிலை நிறுத்திவிட்டுப் பரமபதம் சேர்ந்தபோது இராமானுஜாசாரிய ஸ்வாமிகள் விதிப்படி அவருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முடித்துக்காலத்தில் சாஸ்திரங்கள் எல்லாமோதி முடிந்துவிட்டபடியால் வேதாந்த பாகத்தில் பூர்வபக்ஷம் வாசிக்கவேண்டுமென்று கருத்துடையவரானார். பூர்வ பக்ஷிகள் சொல்லும் விஷயம் இப்படிப்பட்டதென்று விளக்கமாய் அறிந்தாலல்லது அதைக்கண்டனம் செய்ய ஸுலபமாய் முடியாதகையால் தம்மதமாகிய விசிஷ்டாத்வைதத்துக்குப் பூர்வபக்ஷமாகிய அத்வைதத்தை வாசிக்கவேண்டியது இவருக்கு அவசியமாயிற்று*.

---

* இவர் ஒருவரிடமும் வாசியாமலே எல்லா விஷயங்களையும் தாமேயறிந்துகொள்ளக் கூடுமாயினும் 'எதுவும் குருமுகமாகக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற சாஸ்திரார்த்தத்தை எல்லாருக்கும் மூதரிக்க வேண்டி உபாத்தியாயரைத் தேடினார்போலும். பெரியோர் நடந்தபடி அயலாரும் நடப்பார்களாகையால் லோகஸங்க்ரஹத்துக்காக இந்த பாவனை செய்யவேண்டியது கடமையாம்.

காஞ்சிபுரத்திற்கு மேற்கே ஏழு மைல் தூரத்தில் திருப்புட்குழி யென்றொருஸ்தலமுண்டு. அங்கே 'யாதவப்ராகாசர்' என்ற ஸந்யாஸி ஒருவர் அனேக சிஷ்யர்களுக்கு வேதாந்த பாடம் சொல்லிவந்தார். இவர்பேர்பெற்ற பண்டிதர். இவரது மதம் அத்வைதமதமே. ஆனாலும் சங்கராசார்யர் கொள்கைக்கும் இவரது கொள்கைக்கும் பல வேறுபாடுகளுண்டு. இவர் மஹா மந்தரவாதி. அனேக அரசர்களால் பெருமைப்படுத்தப்பட்டவர். இவர் சிகாயஜ்ஞோபவீதங்களைத் துறந்து ஏகதண்டம் தரித்த ஸந்யாஸி யென்று சிலரும், கோபிசந்தனத்தால் ஊர்த்துவபுண்ட்ரமும் திரிதண்டமும் தரித்து சிகாயஜ்ஞோபவீதங்களுடன் ஸந்யாஸியாய்ப்பலநாள் இருந்து பிறகு யஜ்ஞோபவீதத்தைத்தரிப்பது பிசகென்று பிரமித்து அதையறுத்தெறிந்துசில நாள் இருந்து மறுபடி ஆலோசித்துப்பார்த்ததில் பூணூலையறுத்தெறிந்தது சாஸ்திர விரோதமென்று தெரிந்து காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாளது வைகாசி யுற்சவத்திற்குத் திரண்டு வந்திருந்த புலவர்களை யிதற்குப் பிராயச்சித்தமென்னவென்று வினவி அவர்கள் கூறிய பிராயச்சித்தத்தைச் செய்துகொண்டாரென்று சிலரும் கூறுவார்கள்.

இராமானுஜாசாரிய ஸ்வாமிகள் இவரது பாண்டித்தியத்தின் பெருமையைக் கேட்டுத் தாயாரனுமதிபெற்று ஸ்ரீபெரும்புதூர்விட்டுக் காஞ்சிபுரம் வந்து யாதவப்ரகாச யதீச்வரரிடம் வேதாந்தம் வாசிக்கத்தொடங்கினர்கள். யதீசுவரரும் பெரும்பாலும் காஞ்சிபுரத்திலேயே வந்திருந்து வேதாந்த பாடம் சொல்லிவந்தார்.

ㅇ

(இன்னும் வரும்.)

ஸ்ரீச்யாமதேசிக திருமலைதாதாசாரியார்.

கீழ் நாடு மேல் நாடு.

"ओंकारध्याने सर्वार्थसिद्धिः" 'ஓங்காரத்யானே ஸர்வார்த்த ஸித்தி:' "ஓங்காரத்தியானத்தினால் ஸர்வஸித்தியும் உண்டாகிறது" "हरिनामे सर्वपापनाशः" 'ஹரிநாமத்தைச் சொன்னமாத்திரத்தில் ஸர்வ பாவங்களும் அழிந்துபோகும்' "शरणागतस्य सर्वप्राप्तिः" "சரணாகதஸ்ய ஸர்வப்பிராப்தி:" "சரணமடைந்தவனுக்கு ஸகலமும் கைகூடும்" இந்த சமஸ்த சாஸ்திரவாக்கியங்களும் ஸாதுவாக்கியங்களும் பரம சத்தியந்தான். ஆனால் நமக்குள் எத்தனையோ லக்ஷம்பேர் ஜீவகாலம் முழுவதும் ஓங்காரத்தியானம் செய்வதிலும், ஹரிநாமஸ்மரணை செய்வதிலுமே கழிப்பவராய் "ஸ்வாமி! உன்னையே நம்பினோம், உன் திருவுள்ளப்படியே எல்லாம் நடக்கட்டும், எங்களாலாவது ஒன்றுமில்லை" என்று கதறுகிறார்களே. அவர்களுக்கு ஏதாவது கிடைத்ததா? ஒன்றுமில்லையே. இதனால் நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால், யார் உள்ளபடியே தியானம் செய்தல்கூடும்? யார் உண்மையாக சரணாகதியடையக்கூடும், எவர் செய்யும் ஹரிநாமஸ்மரணமானது வஜ்ராயுதம் போல அமோகசக்தியுடன் கூடியிருக்கும்? எவர் கர்மஞ்செய்து சித்தசுத்தியடைந்திருக்கின்றனரோ, அதாவது எவர் தார்மிகரோ, அவர்களே மேற்சொல்லியவற்றையெல்லாம் செய்து முடிக்கக் கூடும்.

ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு சக்தியை வெளிப்படுத்துவதற்கேற்ற கேந்திர (நடு) ஸ்தானமாயிருக்கிறான். அந்த சக்தியானது பூர்வ ஜென்மங்களில் செய்த கர்மங்களின் பல ரூபமாய்த்திரண்டிருக்கிறது. அந்தத் திரண்ட (ஸஞ்சித) கர்மத்துடன் நாம் ஜன்மமெடுக்கிறோம். அந்தச்சக்தி காரியரூபமாய்வெளிப்பட்டு செலவாகிப் போகாதிருக்கும் வரையில், செயலற்று நிச்சலமாயிருப்

பதற்கும் உலகத்தைத் துறப்பதற்கும் யாவராலும் முடியாது. அது வரையிலும் ஒவ்வொருவனும் போகத்தை அநுபவித்தே தீரவேண்டும். சுகபோகங்களையும் கர்மத்தையும் விட்டிருக்க முடியாதவரையிலும், கெட்ட கர்மத்தைச் செய்வதைவிட நல்ல கர்மத்தைச் செய்வது மேலானதல்லவா? துக்கமனுபவித்துக்கொண்டிருப்பதைவிட சுகமனுபவிப்பது நன்றல்லவா? ஸ்ரீராமப்பிரசாதரும் அப்படித்தானே சொல்லுகிறார் "நன்மை தீமை என்கிற இரண்டினுள் நன்மையைச் செய்வதே நன்று."

இனி நன்மையாவது யாது? முக்திகாமனது நன்மை வேறு, தர்மகாமனது நன்மைவேறு. இந்த தத்துவத்தைத்தான் பகவான் கீதையிலே அவ்வளவு சிறப்பாய் எடுத்துக் காட்டியிருக்கிறார். இந்த மேலான உண்மையின் ஆதாரத்தின்மேல்தான் ஹிந்துக்களின் வர்ணாசிரமதர்மங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

"निर्वैरः सर्वभूतानां मैत्रः करुण एव च" நிர்வைர: ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவது ஸர்வபூதங்களினிடத்தும் பகையற்றிருத்தல், நட்பு, அருள் முதலிய பகவத் வாக்கியங்கள் மோக்ஷகாமனின் பொருட்டு எழுந்தவை. இனி "क्लैब्यं मास्म गमः पार्थ" "तस्मात् त्वं उत्तिष्ठ यशो लभस्व" "க்லைப்யம் மாஸ்மகம: பார்த" (அர்ஜுன! பேடித்தன்மைக்குள்ளாகாதே) "தஸ்மாத் த்வம் உத்திஷ்ட யஶோ லஹஸ்வ" ("ஆகையால் நீ எழுந்திரு, புகழடைவாய்) முதலிய வாக்கியங்களால் தர்மலாபத்துக்கு உபாயத்தைப் பகவான் காட்டுகிறார். கர்மஞ் செய்கிறதென்றால் அதில் நன்மையும் இருக்கும் தீமையும் இருக்கும். ஆகவே கர்மஞ் செய்கிறவன் சுருக்கமாயாவது பெருக்கமாயாவது பாவஞ் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால் அதனால் யாதொரு தோஷமும் இல்லை. ஒன்றும் செய்யாதிருத்தலைவிட ஏதோ கொஞ்சம் செய்வது சிறந்ததல்லவா? யாதொன்றுஞ் செய்யாமல் சோம்பலாயும் கல்லைப்போல் ஜடமாயும் இருத்தலைவிட, ஏதோ ஒரு கருமத்தை—அதில் நன்மை தீமைகள் கலந்திருப்பினும்—செய்வது நன்றல்லவா? பசுவானது ஒருகாலும் பொய் சொல்வதில்லை; கல்லானது ஒருகாலும் திருடுவதில்லை. ஆனால் அவை எப்பொழுதும் பசுவும் கல்லுமாகவேதான் இருக்கின்றன. மனிதனே பொய் சொல்லுகின்றான், திருடுகிறான்;

மருப்டியும் அந்த மனிதன்தான் தேவஸ்வரூபமாகிறான். ஸத்துவ குணம் மேலிட்டிருக்கும் நிலையில் மனிதன் செயலொழிந்து பரம தியான நிலையையடைகின்றான்; ரஜோ குணம் மேலிட்டிருக்கும் பொழுது, மனிதன் நல்வினையும் தீவினையும் கலந்து செய்கிறான்; தமோகுணம் மேலிட்டிருந்தால் அவன் மறுபடியும் செயலன்றி ஜடம்போல் இருக்கின்றான். ஆகவே வெளிநோக்காய்ப் பார்க்குமிடத்து இவன் ஸத்வகுணப் பிரதானனோ; அல்லது தமோகுணப் பிராதானனோ என்பது எவ்வாறு புலப்படும்? நாம் சுகதுக்கங்களைக் கடந்து செயலற்று சாந்தஸ்வரூபமாய் ஸத்துவநிலையில் இருக்கிறோமா, அல்லது உயிரற்று, ஜடம்போல் அசைவற்று, சக்தியின்மையால் செயலற்று, மஹா தாமஸிக அவஸ்தையில் விழுந்து உள்ளுக்குள்ளேயே தன்பாட்டில் அழுகிப்போகிறோமா? இன்னதென்று சொல்லுங்கள். இதை உங்கள் மனதிலேயே யோசித்து உண்மையை அறியுங்கள். உங்கள் பதிலுக்கு நான் காத்திருப்பானேன்?—फलेन परिचीयते—பலேநபரிசீயதே—மரத்தின் குணம் பழத்தில் தெரிகிறது. ஸத்துவகுணம் நிறைந்தவன் செயலற்று சாந்தமூர்த்தியாயிருக்கிறான். அந்தச் செயலின்மையோ மஹாசக்திகள் ஓரிடத்தில் திரண்டு விளங்கும் கேந்திரஸ்தானம். அந்த சாந்தியும் அமோகமான மஹாவீர்யத்தைக் கர்ப்பத்தில் அடக்கியுள்ளதாம். அத்தகைய மஹாபுருஷன் சிறிதேனும் நம்மைப்போல் கைகால்களின் உதவியைக்கொண்டு யாதொன்றும் செய்யவேண்டுவதில்லை; அவன் நினைத்தமாத்திரத்தில், ஸர்வகாரியங்களும் அவலீலையாய் நிறைவேறிவிடுகின்றன. அவன்தான் ஸத்துவகுணம் நிறைந்த பிராஹ்மணன், ஸர்வலோகபூஜ்யன். “எனைப்பூஜை செய், எனைப் பூஜை செய்” என்று அவன் வீடுவீடாய்ப் போய் யாசிக்கவேண்டிய அவசியமில்லை. ஜகதம்பாளே தன் சொந்த கையால் அவன் நெற்றியில் ‘இந்த மஹா புருஷனை எல்லோரும் பூஜியுங்கள்’ என்று பொன்னெழுத்துக்களால் எழுதியிருக்கிறாள். உலகமும் அதைத் தலைவணங்கிக் கேட்கிறது. அந்தப்புருஷனுக்கல்லவோ (நிர்வைர: ஸர்வபூதேஷு மைத்ர: கருண ஏவச) எவ்வுயிரிடத்தும் பகையின்மையும் அன்பும் அருளும் உண்மையாய் இருக்கின்றன. அப்படிக்கின்றி, ஓரெழுத்து சொல்வதற்குமுன் ஒன்பது தடவை தெத்துவோனும் இருந்தவிடத்தைவிட்டு நகரவும் திராணியற்று,

ஒங்கியுதைத்தால் ஒரு காதத்துக்கப்பால் போய்விழுவோனுமாயிருப்பவன் இழிந்த தமோகுணம் நிறைந்தவனல்லவா? அவன் முகத்தில் மிருத்யு பிரஸந்நமாயிருக்கிறது. அது ஸத்துவமாகுமோ. அஃதவ்வளவும் அழுகலும் துர்க்கந்தமுமாம். அர்ஜுநன் அப்படிப்பட்டவர் கூட்டத்தில் போய் விழுந்துவிடுவதற்கிருந்தான். அதற்காகவே பகவான் கீதையிலே அவனுக்கு அவ்வளவு ஜாக்கிரதையாய் தர்மத்தை எடுத்து உபதேசிக்கிறார். எடுத்தவுடனே பகவான் திருவாக்கினின்றும் வெளிப்பட்ட வசனங்களை நோக்குங்கள். "க்லைப்யம் மாஸ்மகம: பார்த்த"—அர்ஜுநா! பேடித்தனங் கொள்ளாதே—பிறகு— "தஸ்மாத்வம் உத்திஷ்ட யசோலபஸ்வ" "ஆதலால் நீ எழுந்திரு, புகழைப்பெறு." ஜைனபௌத்தாதிகளைப் போல் நாமும் இப்போழுது இந்தத் தாமஸிகர்களின் கூட்டத்தில் விழுந்துவிட்டோம். சென்ற ஆயிர வருஷங்களாக, தேசமுழுவதும் ஹரிஹரி என்று கதறுகிறது. பகவானைக்கூவி ஒலமிடுகிறது. இட்டும் என்ன, அவர்கேட்டதைக்காணேம். அவர் ஏன் கேட்கவேண்டும்? முட்டாள்கள் கத்துவதை மனிதனே கேளானென்றால் பகவான் கேட்பரோ? ஆனால் அதற்கு உபாயம் எப்படி? கீதையிலே பகவான் சொல்வதைக் கேளுங்கள்—"அர்ஜுநா, பேடித்தனம் கொள்ளாதே, ஆகையால் எழுந்து பெயரும் புகழும் பெறு" 'क्लैब्यं मास्म गमः पार्थ,' 'तस्मात् त्वं उत्तिष्ठ यशो लभस्व' இங்கேதான் மேல்நாட்டுக்கும் கீழ்நாட்டுக்கும் உள்ள வேற்றுமை. முதலில் ஒரு 'தமாஷா' பாருங்கள். ஐரோப்பியரின் சுவாமியாகிய யேசுகிறிஸ்து—"ஒருவரையும் பகையாதே, உன்னை யாரேனும் வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு இன்னொரு கன்னத்தையும் திருப்பிக்காட்டு; எல்லா காரியங்களையும் நிறுத்திவிட்டு, உலகம் முடியப்போகிறது. அதற்குத்தயாராயிரு. அப்பொழுது நான் மறுபடியும் வருவேன். இந்தத் தலைமுறையழிந்துபோவதற்குள்ளாகவே நான் வந்துவிடுவேன்" என்று உபதேசிக்கிறார். நமது ஸ்வாமியோ கீதையிலே, "எப்பொழுதும் அதிக உற்சாகத்தோடு உழை, உன் சத்துருக்களை அழி, அழித்து உலகத்தை அனுபவி" என்று உபதேசிக்கிறார். ஐரோப்பியர்களோ யேசுவின் வார்த்தையைச் சிறிதும் லக்ஷியம் செய்தார்களில்லை. எப்பொழுதும் காரியகாரர்களாய், மஹாராஜஸிகர்களாய் விளங்கும் அவர்கள் உலகத்தின்

தேசதேசாந்தரங்களிலிருந்து அங்கங்குள்ள சுகபோகங்களை அதிக உற்சாகத்துடன் சேகரித்து யதேஷ்டமாய்ப் போகிக்கிறார்கள். நாமோ ஒரு மூலையில் இருந்துகொண்டு உலகம் முடியப்போவதற்குத்தயாராய் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு இரவும் பகலும் 'நளினீ தள கத ஜல மதிதரளம், தத்ஜ்ஜீவி தமதிசய சபலம்' (नलिनीदलगतजलमतितरलंतद्वज्जीवितमतिशयचपलं) 'தாமரை யிலையின் நடுவில் விழுந்த ஜலம் மிகவும் சஞ்சலமாய்த் தத்தளிப்பது போல் வாழ்க்கையும் நிலையற்றது' என்று பாடிக்கொண்டு அதன் காரணமாக மரணம் வந்துவிடும் என்ற யமபயத்தினால் ஒளி குன்றி வலி யிழந்து நிற்கிறோம். எமனும் இதுதான் சமயமென்று ப்ளேக், மலேரியா முதலிய பலவகை விபரீத வியாதிகளை இந்நாட்டிற்கு அனுப்பியிருக்கிறான். கீதையில் சொன்ன உபதேசத்தின்படி யார் நடக்கிறார்கள்?—ஐரோப்பியர்களுள் யேசுகிறிஸ்துவின் உபதேசத்தை யார் நிறைவேற்றுகிறார்கள்?—ஸ்ரீகிருஷ்ணனது சந்ததி!!! இதை முதலில் அறியவேண்டும். முக்திக்கு வழியை முதலில் அறிந்து உபதேசித்தவை வேதங்களே. பிறகு புத்தனும் கிறிஸ்துவும் மற்றுமுள்ளவர்களும் எது உபதேசித்திருந்தாலும் அஃதெல்லாம் அந்த வேதத்திலிருந்துதான் எடுக்கப்பட்டது. அவர்கள் துறவிகளாயிருந்தமையால் 'நிர்வைர: ஸர்வபூதாநாம் மைத்ர: கருண ஏவ்வ' என்னுங்குணங்கள் அவர்களிடத்தில் இருந்தன. அவர்களுக்கு அது சரிதான். ஆனால் எல்லா ஜனங்களையும் அதே வழியை அனுசரிக்கவேண்டும்படி என் நிர்ப்பந்தப்படுத்தவேண்டும்? ஒருவனுக்கு மோக்ஷத்தில் விருப்பமில்லை, அதைப் பெறுவதற்கு வேண்டிய யோக்கியதையும் அவனுக்கில்லை. அப்படிப்பட்டவனுக்குக் கிறிஸ்துவாவது புத்தனாவது உபதேசிப்பது என்ன? ஒன்றுமேயில்லை. நீ மோக்ஷமாவது அடையவேண்டும் அல்லது வேறுவழியின்றி அழிந்தாவது போகவேண்டும். இந்த இரண்டு சங்கதிதான் அவர்கள் சொல்வது. மூன்றும் வழி கிடையாது. மோக்ஷத்தைத் தவிர வேறெதற்கும் நீங்கள் முயல்வதற்கில்லை. உங்கள் கையும் காலும் கட்டப்பட்டிருக்கிறது. இந்த உலகத்தில் கொஞ்சம் சுகமனுபவிக்கலாமென்றால் அதற்கு வழி கிடையாது. அதைக்கூடாதென்று தடுக்கும் பிரதிபந்தங்களோ அனந்தம். வைதிகமதமொன்றுதான் தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்களென்னும்

சதுர்வர்க்கத்தின் சாதனத்துக்கு உபாயமாய் இருக்கிறது. புத்த முனி நம்மைக்கெடுத்தார். கிறிஸ்துநாதர் ரோமகர்களைக் கெடுத்தார்!!! அதன் பிறகு, ஐரோப்பியர்கள் ப்ரோடெஸ்டண்டு மதஸ்தராகிக் கிறிஸ்துவின் உபதேசங்களை உபேக்ஷை செய்தலும், சுதந்திரமடைந்து சுயேச்சையாய் அபிவிர்த்தியடையத் தொடங்கினர். இந்தியாவிலும் குமாரிலபட்டர் கேவலம் கர்ம மார்க்கத்தை மீண்டும் உபதேசித்தார். பிறகு சங்கரரும் ராமாநுஜரும் தர்மார்த்த காம மோக்ஷமென்னும் சதுர்வர்க்கத்தின் ஸமந்வய ரூபமான ஸநாதன வைதிக தர்மத்தைப் பிரவர்த்திப்பித்தனர். இவ்வாறாக இத்தேசத்தின் போன பிராணன் மறுபடியும் வந்தது. ஆனால் இந்தியாவில் உள்ள ஜனங்களோ 30 கோடி. இத்தனை பெயருக்கும் பிராணதாரணம் உண்டாகவேண்டும். அஃது ஒரு நாளில் ஆய்விடுமா.

பௌத்த தர்மத்தின் உத்தேசியமும் வைதிக தர்மத்தின் உத்தேசியமும் இரண்டும் ஒன்றுதான். ஆனால் பௌத்தமதம் கைக்கொண்ட சாதனோபாயங்கள் சரியானவையல்ல. அதன் வழிமாத்திரம் சரியாயிருக்குமாயின் நமக்கேன் இந்த அதோகதி வந்து சம்பவித்தது? அது காலத்தின் கோலம் என்று சொல்லும் சமாதானம் பொருந்தாது. காலமானது காரணகாரிய முறைகளின் சம்பந்தங்களை மீறி நடக்கக்கூடியதோ?

ஆகவே உத்தேசியம் ஒன்றாயிருந்தும், கைக்கொண்ட உபாயம் சரியாயில்லாமையால் பௌத்தமதம் பரதகண்டத்தை நிர்மூலம் செய்துவிட்டது. நான் சொல்வது ஒருவேளை நமது பௌத்த சகோதரர்களுக்கு மனவருத்தமாயிருக்கக்கூடும். ஆனால் உண்மையை ஒளிக்காமல் சொல்லவேண்டுமாகையால் அதனால் விளையும் பயனைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. வேதங்களிலே சொல்லியுள்ள உபாயமே சரியான உபாயம். அது ஜாதிதர்மமென்றும், ஸ்வதர்மமென்றும் சொல்லப்படுவது. அவரவருடைய சக்திக்கும் அந்தஸ்துக்கும் தக்கவாறு ஏற்படுத்தப்பட்டுள்ள மேற்கூறிய வர்ணாசிரம தர்மங்களே வைதிக மதத்துக்கும், வைதிக ஸமாஜத்துக்கும் ஆதாரபூதமானவை. இதனால் நான் என் சொந்த நாட்டாரை ஸ்தோத்திரம் பண்ணுவதாக எண்ணக்கூடாது. ஏனெனில், அவர்கள் சுபாவத்தை நான் நன்றாய் அறிந்திருக்கிறேன். அதனால்,

அவர்களை முகஸ்துதி செய்வதால் யாதொரு பயனும் உண்டாகா தென்று எனக்கு நன்ருய்த்தெரியும். இந்த ஸ்வதர்மமும் ஜாதிதர் மமும் தான் பிரதிதேசத்திலுமுள்ள ஜனசமாஜங்களின் க்ஷேமத்து க்கு ஹேதுவாயும் முக்திக்குப் படியாயும் இருப்பது. இந்த ஸ்வதர் மமும் ஜாதிதர்மமும் எப்போ அழிந்ததோ அப்போதே நம் தேசத் தின் அதோகதியும் ஆரம்பித்துவிட்டது. ஆனல் இப்போ நமக்குள் வழங்கிவரும் ஜாதிபேதம் நமக்குள்ள நூதன விபத்துக்களில் ஒன் ரும். ஒவ்வொருவனும் தன் சொந்த கிராமத்தில் வழங்கிவரும் ஆசா ரத்தையே நித்தியமான வைதிகாசாரமென்று நினைத்துவிடுகிருன். குணத்தால் ஏற்பட்ட ஜாதியைப்பற்றி நான் இப்போது பிரஸ்தாப ஞ்செய்யவில்லை. வம்சக்கிரமமாய் வரும் ஜாதியைப்பற்றியே பேசு கிறேன்; ஜன்மத்தை யொட்டிவரும் ஜாதியைப்பற்றியே பேசுகின் றேன். குணத்தால் ஏற்பட்ட ஜாதிதான் ஆதியானது; ஆனல் அந்த ஜாதி இரண்டு தலைமுறையில் வம்ச பரம்பரியமாய்ப் போய் விடுகிறது. நம்தேசத்தின் உயிர்நிலை போலுள்ள அத்தகைய ஜாதி தர்மத்துக்குத்தான் ஆபத்து உண்டாய்விட்டது. இல்லாவிட்டால், இப்படிப்பட்ட ஹீனஸ்திதிக்கு நாம் வருவானேன்? கீதையில் என்ன செல்லுகிருர் பகவான்? ஸங்கரஸ்ய ‌ஊ கர்த்தாஹம் உபஹந் யாம் இமா: ப்ரஜா: (सङ्करस्यचकर्त्ताहिं उपहन्यां इमाः प्रजाः) ‘ஜாதிக் கலப்பையுண்டாக்கி இந்த ஜனங்களை அழித்துவிடுவேன்’ இந்த வர்ண ஸாங்கர்யம் (ஜாதிக்கலப்பு) எப்படி நேர்ந் தது? வெள்ளைநிறம் (வர்ணம்) கறுப்பு நிறமாய்விட்டதற்குக் கார ணமென்ன? ஸத்துவ குணமானது ரஜோகுணப்பிரதானமான தமோகுணமாய்விட்டதற்குக் காரணமென்ன? அவையெல்லாம் இப்போது சொல்வதென்ருல் ஒரு ராமாயணமாகும். மற்றொரு சமயம் அதைச் சொல்லுகிறேன். இப்போது நாம் தெரிந்துகொள்ள வேண்டியதாவது: இந்த ஜாதிதர்மத்தை மாத்திரம் நாம் சரிவர நடத்திவரும்பக்ஷத்தில், தேசமானது எக்காலத்திலும் க்ஷீணதசை க்கு வராது. இப்போது நாம் க்ஷீணதசை அடைந்திருப்பதே நமது ஜாதிதர்மம் குன்றிப்போய்விட்டதற்குச் சிறந்த திருஷ்டாந்தம். இப்பொழுது நாம் ஜாதி ஜாதியென்று சொல்லிவரும் ஏற்பாடு உண் மை ஜாதிக்கு முற்றும் விரோதமானது. முதலில் புராணங்களைப்ப டித்துப்பாருங்கள். அப்பொழுது தெரியவரும் சாஸ்திரத்தில் கூறப்

படும் ஜாதிதர்மம் ஸர்வத்ர லோபமடைந்துவிட்டதென்பது. இப்பொழுது நிஜமான ஜாதிதர்மத்தை மீண்டும் கொண்டுவர முயலுங்கள். அப்பொழுது அது தேசத்துக்குப் பரமோபகாரமென்று நிச்சயமாகும். நான் கற்றுத் தெரிந்துகொண்டதை உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் மூடாசாரங்களைப் புகழ்ந்து கொண்டாடுவதற்கும் அவற்றிற்கெல்லாம் மேல்நாட்டு 'ஸயன்ஸ்' (விஞ்ஞான நூல்) படி ரஹஸ்யார்த்தங்கள் கல்பிப்பதற்கும் அயல்நாட்டிலிருந்து வந்தவனல்லன் நான். அயல் நாட்டு நண்பர்கள் அவ்வாறு செய்யத் தகும். அவர்கள் சொல்வதைக்கேட்டு நீங்களும் பேஷ், பேஷ், 'வஹவா' என்று அவர்களைக் கொண்டாடி மெச்சுகிறீர்கள். அதோடு காரியம் முடிகிறது. நீங்கள்தான் ஏமாந்த சோணகிரிகளாகிறீர்களே, உங்களோடு நானும் ஆகவேண்டுமோ? அதற்கென்ன சொல்லுகிறீர்களையா?

(இன்னும் வரும்.)

மைசூர்.

இப்படியிருக்கும் தருணத்தில் மைசூரில் சாமராஜன் 1775ம் ஆண்டிலிறக்க, பட்டத்துக்கு யார் வருவதென விவாதமுண்டாயிற்று. சாமராஜன்தான் அவனுடைய வம்சத்துக்குக் கடைசியானவன். அதிகாரமெல்லாம் தானே வைத்துக்கொண்டிருந்தாலும் பேருக்கு ஒரு அரசனிருக்கவேண்டுமென்பது ஹைதருடைய துணிபு. உடனே அரச வம்சத்தைச் சேர்ந்த சிறு குழந்தைகளையெல்லாம் வரவழைத்து அவர்களினின்றும் ஒருவனைத் தேர்ந்து எடுத்தான். அவ்விதம் வருமாறு;—ஒரு மண்டபத்தில் அனேக விளையாட்டுச் சாமான்களையும், பழங்களையும், தின்பண்டங்களையும், புத்தகங்களையும், ஆயுதங்களையும், பணப்பைகளையும், நகைகளையும் நிரப்பி அதில் அச்சிறு குழந்தைகளைச் செல்லவிடுத்து யார் யாருக்கு என்ன என்ன வேண்டுமோ அவைகளை எடுத்துக்கொள்ளச் சொன்னான். உடனே அனேகங் குழந்தைகள் விளையா

ட்டுச் சாமான்களையும் தின்பண்டங்களையும் தூக்கிக்கொண்டனர். ஆனால் ஒரு குழந்தை மாத்திரம் பிரகாசமாயிருந்த ஓர் கத்தியைக் கண்ணுற்று அதைத்தன் வலக்கையில் எடுத்துக்கொண்டு இன்னொரு கையில் ஆங்கிருந்த ஓர் எலுமிச்சபழத்தை எடுத்துக்கொண்டு நின்றதைப் பார்த்து, ஹைதர் 'இவன்தான் ராஜா' என்று சொல்லி சிங்காதனத்தில் ஏற்றினான். இவன் பேரும் சாமராஜன் தான்.

தனக்கு ஒத்தாசை செய்யாததற்காகக் கோபங்கொண்டு ஹைதர் ஆங்கிலேயரோடு போர் தொடங்கி, கண்ட கண்ட விடமெல்லாம் அவர்களை ஜயித்துச் சிற்சில விடங்களில் தோல்வியடைந்தும் பின்வாங்காமல் சண்டைசெய்து வருகையில் தன் மகன் மேற்குத்தேசத்தில் சண்டை செய்துகொண்டிருக்கையில் ஹைதர் சித்தூரில் 1782-ம் வருஷம் டிசம்பர் மீ 7௳ (முதுகில் ராஜப்பொறையினால்) இறந்தான். உடனே ஹைதருடைய சேனையில் முக்கியமான உத்தியோகஸ்தர்கள் டிப்புவுக்குச் செய்தியனுப்பி அவன் வருகிறவரையில் தங்களால் கூடியமட்டும் இச்சங்கதி இரண்டாம் பேருக்குத் தெரியாமல் மூடிவைக்கும்படி பார்த்தார்கள். ஸகல காரியங்களும் வழக்கம்போலவே நடந்து கொண்டுவந்தன. ஹைதருடைய பிரேதம் நல்ல வாசனையுள்ள தைலங்களால் பதமிடப்பட்டது. யுத்தத்துக்கு போகும்போதெல்லாம் அதை ஒரு மூடுபல்லக்கில் வைத்து ஸுல்தான் வியாதியாயிருக்கிறானென்று சொல்லிக்கொண்டு சென்றனர். ஆகிலும் அது ரகசியமாயிராமல் ஒரு கலகம் ஆரம்பிக்க அது உடனே நிறுத்தப்பட்டது. சண்டையில்தான் ஹைதர் முதலில் முன்னுக்கு வந்தான். சண்டையில்தான் இறந்தான். சண்டையே அவனுக்குப் பிரதானம். ஒரு சண்டை ஓய்ந்து மற்றொன்று ஆரம்ப

மாகும் வரையில், முன்சண்டையில் இழந்ததைத் திரும்பிப் பெறுவதற்கும், வரும் சண்டைக்குப் பிரயத்தனம் செய்வதற்குமே காலம் சரியாயிருந்தது. எழுதப்படிக்கத் தெரியாதவனும் குலமேன்மையுமற்று, ஒரு பெரிய ராஜ்யத்துக்கு அரசனுகி அதைச்சீருடன் ஆண்டுவருவது மேலான காரியமல்லவா? ஹைதருக்கு, கன்னடம், மஹாராஷ்டிரம், தமிழ், தெலுங்கு இந்த நான்கு பாஷைகளைப் பேசத்தெரியும். கையெழுத்துக்கூடப்போடத் தெரியாத இவன் உருவத்தில் கரிய நிறமும், தேக வன்மையும் சிறிய கண்களும் கூறிய மூக்குமுள்ளவன். குதிரையேறுவதிலும் கத்தி விளையாட்டிலும் தேர்ந்தவன். அவனுக்கு அறுநூறு ஸ்திரீகள் இருந்தபோதிலும் தன் ராஜாங்க விஷயத்தை மறக்கிறதில்லை. சூரியவுதயமுதல் மத்தியானம் வரையில் ராஜ்ய விசாரம் செய்வான். பிறகு சாப்பிட்டுவிட்டு இரண்டு மணி நேரம் தூங்கிச் சாயங்காலமானவுடன் குதிரையேறிப்போனுலும் போவான், அல்லது ராஜ்ய விஷயங்களுக்கு மறுபடியும் திரும்பினுலும் திரும்புவான். இரவெல்லாம் பாட்டும் கூத்துமாய்த்தானிருக்கும். இரண்டாம்தரம் சாப்பாடு நள்ளிரவில். பிறகு நன்ருய்க் குடித்துவிட்டுத் தூங்கச் செல்வான். அவன் காலத்தில் தண்டனை சவுக்கடிதான். தன் மகனுனுலும் சரி, தாழ்ந்த வேலைக்காரனுனுலும்சரி ஒரேமருந்துதான்—சவுக்கடி. கடிதம் எழுதும் வேளைகளில், ஒருவன் கடிதம் எழுதுவான், மற்ருெரு உத்தியோகஸ்தன் அதைப்படிப்பான். ஞாபக சக்தி மிகுந்த ஹைதர் கடிதங்களில் ஏதாவது பிழைகளிருந்தால் அப்பிழை யாராலுண்டானவையெனத் தெரிந்து தகுந்த தண்டனை விதிப்பான். ஒவ்வொருவரையும் தனக்கு இஷ்டமான மதத்தை அனுஷ்டிக்கும்படி விட்டுவிட்டான். அவனுட்டில் குடிகள் மிகவும்

இன்பமாய் வாழ்ந்தார்கள். குற்றஞ்செய்தால் மூக்குப் போய்விடும் காது போய்விடும். ஆயினும் தீர விசாரியாமல் தண்டிக்கிறவன் ஹைதர் அல்ல. தன்னாட்டுக்குடிகள் ஸுகமாய் வாழவேண்டுமென்பது அவன் கருத்து.

ஹைதர் இறந்த சமாசாரத்தை மேல்புறத்திலிருந்த டிப்பவுக்கு ஒரு தூதன் 100 மைல் நாள் ஒன்றுக்குச் செல்லத்தக்க ஓர் ஒட்டகத்தின்மேல் ஏறிப்போய் நான்கு நாளில் சென்று சொன்னான். கேட்டதும் உடனே புறப்பட்டு, கோலாருக்குக் கொண்டுவந்திருந்த தன் தகப்பனுடைய பிரேதத்தைப் புதைத்துவிட்டுச் சண்டைக்குப் புறப்பட்டுவிட்டான். கலகம் நேரிடாமல் காத்துக்கொண்டிருந்த மந்திரி பூர்ணய்யாவுக்கு வந்தனஞ் சொல்லி, 88,000 படை வீரர் பொருந்திய சேனையையும், மூன்று கோடி ரூபாயும் அனேக நகைகளுமடங்கிய கஜானாவையும் யாதொரு சந்தடியுமில்லாமல் கைப்பற்றிக்கொண்டான். உடனே மேற்குக் கரையிலுள்ள சில நகரங்களைப் பிடித்து அவைகளிலுள்ள சேனைகளைக் கைதியாக்கினான். ஆங்கிலேயர் சமாதானத்துக்குக் கேட்கவே டிப்புவும் ஸம்மதித்து உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி முன்னே அவரவர்களுக்கு இருந்த நாடுகள் அவரவர்களே வைத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. இது ஆனதும் தனது சேனையை பலப்படுத்திக்கொண்டு கன்னட தேசத்துக் கிறிஸ்தவர்களை மஹம்மதியராகும்படி பலவந்தப் படுத்தினான். குடகுநாட்டைப் பிடித்து அதினின்றும் எழுபதினாயிரம் பேரைச் சிறைப்படுத்தி ஸ்ரீரங்கபட்டணத்துக்குக் கொண்டுவந்து மஹம்மதியராக்கினான். மலையாளத்திலும்போய் இம்மாதிரியாரம்பிக்க, அவர்களில் சிலர் உயிரிழந்தனர்; சிலர் ஓடி யுய்ந்தனர்; மற்றுஞ் சிலர் திருவாங்கூரிற் போய்த்தங்கினர். உடனே டிப்பு திருவா

ங்கூர்மேற் படைபெடுத்துப்போய் அந்நாட்டு மதிலையிடித்துத் தகர்த்து அந்நாட்டைப் பாழாக்கினான். திருவாங்கூர் அரசன் ஆங்கிலேயருக்கு நண்பனானபடியால் அவனைக்காக்க ஆங்கிலேயர் டிப்புவுடன் சண்டைக்கு ஆயத்தமாயினர். பெருத்த துணையுடன் சண்டைக்குப்போய் ஸ்ரீரங்கபட்டணத்துக்கு முன்சென்றவுடன், டிப்பு சமாதானத்துக்கு உடன்பட்டனன். அதன்படி டிப்பு தன் ராஜ்யத்தில் பாதி ஆங்கிலேயருக்கும் அவர் துணைவருக்கும் கொடுக்க வேண்டுமென்றும் சண்டைச் செலவுக்காக மூன்று கோடியே முப்பது லக்ஷம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்றும், கைதிகள் எல்லாரும் விடப்படவேண்டுமென்றும் இந்த உடன்படிக்கை நிறைவேறும்வரையில் டிப்புவின் குமாரரில் இருவர் ஆங்கிலேயரிடமிருக்க வேண்டுமென்றும் ஏற்பட்டன. டிப்புவும் சம்மதித்தான்.

இந்த சமயத்தில் பேருக்கு மாத்திரம் அரசனாயிருந்த சாமராஜனும் இறந்துபோனான். வாழ்நாள் முழுவதும் அரண்மனையிலேயே சிறைவைக்கப்பட்டிருந்த சாமராஜனிறக்கவும், டிப்பு இனிமேல் அப்படிப்பட்ட அரசர்களை வைத்துக்கொள்ள எண்ணமில்லாதவனாய், சாமராஜன் விட்டுப்போன இரண்டு வயதுக் குழந்தையையும் அதன் தாயையும் ஊரைவிட்டுத் துரத்தி ஓர் குடிசையிலிருக்கச்செய்து அரண்மனைப்பொருள்களையெல்லாம் கொள்ளையடித்தான்.

ஆங்கிலேயருடன் இழிவான சமாதானம் செய்துகொண்டதற்கு மனம் வெட்கி. அடங்காத ஆணவத்தோடு கொடிய சண்டைக்கு எத்தனங்கள் செய்துகொண்டிருந்தான். அவனைச்சூழ அனேகம் பிராஞ்சுக்காரரிருந்து தாங்கள் கற்றிருந்த போர்த்தொழிற் கல்வியையவனுக்கு உபயோகப்படுத்தினார்கள். இவனுக்கும் நெப்போலியனு

க்கும் கடிதவரத்துப்போக்குகளிருந்தன. இவைகளினால் அவன் தனது சேனைகளைப் பலப்படுத்திக்கொண்டிருந்தான். ஸ்ரீரங்கபட்டணத்து மதில்களைப்பழுது பார்த்துப் பலப்படுத்தி ஆங்கிலேயரை ஜயிப்பதற்கு வேண்டிய சகல சாமக்கிரியைகளையும் சம்பாதிக்கப் பிரயாசப்பட்டான்.

இதையெல்லாமறிந்த ஆங்கிலேயரும் பெரிய சேனையொன்றைத் திரட்டிக்கொண்டு ஸ்ரீரங்கபட்டணத்தை நோக்கிச் சென்றனர். இரண்டு மூன்று தட்வை, டிப்புவின் படைகள் தோற்றுப்போகவே, கொஞ்சநேரத்திற்குள்ளாக ஸ்ரீரங்கபட்டணக் கோட்டையின் நான்கு திசையிலும் ஆங்கிலேயருடைய படைகள் சூழ்ந்துகொண்டன. முற்றுகை ஒரு மாதம் வரையிலும் நின்றது. கடைசியில் அலங்கத்தில் ஓரிடம் இடிய, அதின் வழியாக ஏறி, கோட்டையை யிடிக்கிறதெனத் தீர்மானித்து, குறிப்பு காட்டும் வரையில் ஆங்கிலேய வீரர்கள் அகழியில் பதுங்கிக் கொள்ளவேண்டியதென்றும் உத்தரவாயிற்று. அப்போது உச்சி உருமம். கோட்டைக்குள் சப்தமில்லாமலிருந்தது. டிப்புவோ, தன் கோட்டைக்குள் ஆங்கிலேயர் பிரவேசிக்கமாட்டார்களென்று எண்ணி விசாரமற்று அரண்மனையில் படுத்துக்கொண்டு நண்பர்கள் சொல்லையும் கேளாதிருந்தான். திடீரென்று ஆங்கிலப்படை அலங்கத்து இடிதலின் வழிவாய்ப் போய்த் தாக்கத்துருக்கர்கள் திடுக்கிட்டு, அலங்கத்தைக் காக்கவர, பட்டணமெல்லாம் அமளியாகி, டிப்புவும் அவ்விடம் வந்தான். வந்தும் பயனிலாமற்போயிற்று. முதல் அலங்கத்தை ஆங்கிலேயர் தாண்டிவிட்டனர். உள் நுழைந்த ஒரு பாகத்தை வளைத்துக்கொண்டு டிப்புஸுல்தான் நேரே வந்து சண்டைசெய்தான். அவனுடைய வீரர்களும் வெறிகொண்டு சண்டை செய்தும் ஆங்கிலேயருக்குப் பின்னிட்டு ஓடவேண்டியதாயிற்று.

இப்படிக்குரூரமாகச் சண்டை நடந்துகொண்டிருக்கையில், இனி ஒன்றும் ஆவதில்லையெனக் கண்டு டிப்புவும் தன்னரண்மனைக்குத் திரும்பிப்போகும் வழியில் இருபக்கத்தாரும் கொரேமாய்ச் சண்டை செய்துகொண்டிருந்த ஒரு இருட்டு வாசல்வழியாய்ப் போகும்போது, காயப்பட்டு உதிரம் சொரிந்ததினால் அவன் சோர்வடைந்தான். அந்நேரத்தில் அவன் வேலைக்காரர், தனது பிராணன் தப்பும் பொருட்டுத் தன்னுமத்தை வெளியிடும்படி அவனை வேண்ட, அவன் பயத்தினாலோ, செருக்கினாலோ அப்படிச் செய்யாமல் இன்னும் முன் செல்லும்படி போராடிக்கொண்டிருக்கும்போது, அவனிடுப்பிற் போட்டுக் கொண்டிருந்த ஓர் தங்க ஒட்டியாணம் ஓர் ஆங்கிலேயனுடைய பேராசையைக் கிளப்பிவிட, அவன் அதை எட்டிப் பிடிக்கவந்தான். அதைக் கண்டு டிப்புதன் கத்தியை ஓங்கி அவ்வாங்கிலேயனை வெட்டப்போகுமுன்னமே, அவ்வாங்கிலேயன் டிப்புவைச் சுட, அதுவே அவனுக்கு இறுதியாக, பயங்கரமான அந்தக் கோட்டைவாயிலில் செத்தவர்களும், சாக விழுகிறவர்களும் கால் கை முதலிய அங்கங்கள் போனவர்களுமாய்க் கிடந்த அந்தப் பிணங்கள் நடுவே அரசனென்கிற பேதமில்லாமல் விழுந்து மடிந்து வீர சொர்க்கமடைந்தான். அவனுக்கு அப்போது வயது நாற்பத்தேழு. அதில் பதினேழு வருஷம் அரசனாயிருந்தான்.

ஸ்ரீரங்கபட்டணம் கைக்கு வந்ததும் அதை ஒழுங்குபடுத்தி டிப்புவின் சவத்தைத் தேடிப்பிடித்து அடக்கஞ் செய்வித்ததன் மேல் மைசூர் ராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொண்டனர், ஆங்கிலேயரும் அவருக்கு உதவி செய்தோரும்.

ஹைதர் ராஜ்யத்தை உண்டாக்கப் பிறந்தனன். டிப்புவோ, அதை யிழக்கப் பிறந்தனன். குணத்திலும், புத்

தியிலும் தன் தகப்பனுக்குப் பலவிதத்திலும் தாழ்ந்தவனான டிப்பு மிகுதியும் உயரமில்லாமல் தடித்த சரீரத்துடன் கருமையாயிருந்தான். ஓடியாடுவதில் களைக்காதவன். எழுதுவதிலோ மிகவும் தேர்ந்தவன். கண்டவர்களையெல்லாம் நெருக்கராதும்படி கட்டாயஞ் செய்வது மாத்திரம் ஒரு துர்க்குணம் அவனிடமிருந்தது.

ஜயித்த ராஜ்யத்தை பூர்வம் ஆண்ட அரசவம்சத்தானுக்கு ஓர் பாகத்தைக் கொடுக்கிறதென்றும் பாக்கியை நிஜாமும் ஆங்கிலேயரும் மகாராஷ்டிரர்களும் பங்கிட்டுக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மகாராஷ்டிரர்கள் வேண்டாமென்று சொன்னதும் அவர்களுக்காக வைக்கப்பட்டிருந்ததை மற்றைய இருவரும் பகிர்ந்தனர். டிப்புவின் குமாரர்கள் எல்லாரும் தகுந்த திரவியங்களுடன் வேலூருக்கு அனுப்பப்பட்டார்கள். ராஜ்யத்திலிருந்த முக்கிய உத்தியோகஸ்தர்கள் எல்லாருக்கும் உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டன. பூர்ணய்யா என்பவர் மாத்திரம் இப்போதும் வேலை பார்க்க இஷ்டமுள்ளவராயிருந்ததுபற்றிப்புதிய அரசனுக்கு திவானாக நியமிக்கப்பட்டார்.

தாயாருடன் ஒரு குடிசையில் இருந்த கிருஷ்ணராஜவுடையாருக்கு இப்போது ஆறுவயது. அவரைக்கொண்டுவந்து தகுந்த மரியாதைகளுடன், சிங்காதனத்தில் வைத்து முடிசூட்டினர். அவரும் தகுந்த உத்தியோகஸ்தர் வழிகாட்டச் செம்மையாக ஆண்டுவந்து 1811-ம் வருஷத்தில் சில துர்ப்போதனைகளால் தாமே ஸர்வாதிகாரமும் நடத்த வெண்ணங்கொண்டு தன்பேரில் திவான் பூர்ணய்யா வேலையைவிட்டு நீங்கிவிட்டார்.

கோயம்புத்தூரிற் பிறந்து வளர்ந்த மாத்வப் பிராமணரான இந்தப் பூர்ணய்யாவின் குணாதிசயங்களை ஹைதர் அறிந்து, அவரைத்தன்னுடைய திரவியமந்திரி யாக்கி

னன். அவருடைய ஸாமார்த்தியத்துக்கு வியந்து ஹைஹதர் அவருக்கு மருஹள்ளி என்னும் கிராமத்தை இனமாகக்கொடுத்தான். ஹைஹதர் இறந்தபிறகு டிப்பு வந்து அவன் தகப்பனுடைய ஆஸ்தியை அடையும் வரையில் இவர் மிகுந்த ஜாக்கிரதையோடு காத்துக்கொண்டிருந்தது வியக்கற்பாலதேயாம். டிப்புவிடத்திலும் மிகுந்த செல்வாக்குடனேயேயிருந்து வந்தார். ஆனாலும் குரூரனான டிப்பு எந்த சமயத்தில் என்ன செய்வானோ என்று பயந்து ஜாக்கிரதையாய் நடந்து வந்தனர். ஒரு நாள் டிப்பு அவரை துருக்கனாகும்படி சொன்னான். அதற்கு அவர் 'நான் தங்களுடைய அடிமை" யென்றுசொல்லி வந்துவிட்டார். இந்தச் சங்கதி டிப்புவின் தாயாருக்கு எட்ட, அவள் தன் மகனுடன் அவன் செய்யவெண்ணிய காரியம் பிசகானது என்று வற்புறுத்தவும், அவன,தன் பின்பு ஒன்றும் சொல்லாமலும் செய்யாமலுமிருந்துவிட்டான். டிப்புவிடத்தில் மிகுந்த தர்மசங்கடத்துடன் வேலை பார்த்துவந்தனரெனத் தெரிகின்றது. ஆங்கிலேயர் ஸ்ரீரங்கபட்டணத்தைப் பிடித்ததும், சந்தோஷத்துடன் அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தனர். பிறகு புது அரசனுக்கு திவானாகி ஆண்டுகொண்டிருக்கையில் 1807-ல் அவர் ஏலந்தூர் என்னும் பூமியை ஜாகிராகப்பெற்று 1811-ல் மந்திரிஸ்தானத்தினின்றும் நீங்கி ஸ்ரீரங்கபட்டணத்துக்குச் சென்று அங்கேயே 1812-ம் ௵ மார்ச்சு ௴ 28௳ தேகவியோகமாயினர். அவர் ராஜ்யத்தைவிட்டு நீங்கியபோது அரண்மனைக்கஜானாவில் இரண்டுகோடி ரூபாய் சேர்த்து வைத்திருந்தனர்.

புது அரசன் மைசூரைத் தலைநகராக்கிக்கொண்டு பூர்ணய்யா சேர்த்துவைத்த திரவியத்தையெல்லாம் ஒரு நொடியில் பாழாக்கிவிட்டனன். சேனைகளெல்லாம் சம

பளங்களைப் பெருமல் கலகத்துக்கு ஆரம்பிக்கும் தருணத்திலிருந்தன. கண்டகண்ட பேர்களெல்லாம் அரசனுக்குத் துணைவராயினர். அரசனும் ராஜ்ய விஷயங்களில் மனதைச்செலுத்தாமல் இன்பத்திலேயே சிந்தையுடையவனுயிருந்தான். பெரிய பதவிகளெல்லாம் உயர்ந்த விலைக்கு விற்கப்பட்டன. குடிகள் ஏழைகளாகித் தவித்தனர். நீதியில்லாமற்போகவே கைதிகளும் அதிகமாயினர். சிறைச்சாலைகள் நிரம்பிப்போயின. கலகங்கள் ஆங்காங்கு உண்டாயின. அவைகளெல்லாம் ஒருவாறு அடங்கினவுடன், இந்தியா கவர்ன்மெண்டார், மைசூரின் நிலைமையைக் கண்டு, உடனே தீரவிசாரித்து ராஜாவைத் தள்ளிவிடவேண்டுமென்று எண்ணி தகுந்த ஏற்பாடு செய்தனர். வில்லியம்பென்டிங்க் பிரபு கவர்னர்ஜனரலாயிருந்தபோது மைசூர் மகாராஜாவுக்கு ஒரு கடிதம் எழுதி ராஜ்யத்தை ஆங்கிலேயக் கமிஷணர்களிடம் ஒப்பிவித்துவிடவேண்டுமென ஏற்பாடு செய்தார். அரசனும் மிகுந்த வணக்கத்துடன் அவ்வாறே செய்து, வருஷமொன்றுக்கு $3\frac{1}{2}$ லக்ஷம் ரூபாயுடன் மைசூரில் அரண்மனையிலேயே வசித்துவந்தான். கமிஷணர்கள் ஆண்டுவந்தபோதும் சிற்சில சமயங்களில் இடைஞ்சல்கள் ஏற்பட்டபடியால் ஒரே கமிஷணர்தான் வேலை பார்க்கவேண்டுமெனத் தீர்த்து இந்தியா கவர்ன்மெண்டார் கர்னல் மாரிஸனை 1834-மவருஷத்தில் மைசூருக்குக் கமிஷணராக அனுப்பினுர்கள். அவரும் சில திருத்தங்களைச் செய்து 1861-ம் வருஷத்தில் ஜெனரல் கப்பனுக்கு அதிகாரத்தைக்கொடுத்துச் சென்றனர். இவர் காலத்தில் வருமபடி அதிகரித்தது. கல்யாணம், ஜனனம், ஜாதகர்மம், சௌளம் முதலிய சடங்குகள் நடக்கும்போதெல்லாம் ஜனங்கள் கட்டவேண்டிய வரிகளைத் தள்ளிவிட்டார்.

பென்ஷன் மகாராஜாவுக்கு ஜி. ஸி. எஸ். ஐ. பட்டம்

கொடுத்ததும், பிள்ளையில்லாமற் போனதினால் தன் குலத்தானொரு பையனைச் சுவீகாரம் செய்துகொள்ள, அதைக் கவர்ன்மெண்டார் அங்கீகரித்தனர். 1868-ம் ஆண்டில் மகாராஜா கிருஷ்னராஜவுடையார் காலமானதும், அவருடைய சுவீகாரப் புத்திரனான ஆறு வயதுள்ள சாமராஜேந்திரவுடையாரை ஆறுமாதத்திற்குப் பிறகு அரசனாக்கி முடிசூட்டினர். ஆனால் அவர் மைனராயிருக்கும் காலம் வரையில் முன்போலவே ஆங்கிலேயர் ஆண்டுவருவாரென்றும், தகுந்த வயது வந்து சக்தியும் வந்தால் ராஜ்யம் அவர் கையில் ஒப்புவிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. உடனே தகுந்தபடி அரசனுக்கு வித்தை கற்பிக்க ஏற்பாடுகள் செய்ய, அவரும் முழுமனதுடன் கல்விகற்பாராயினர். 1877ம் ஆண்டில் மாக்ஷிமை பொருந்திய மகாராணியார் இந்திய சக்கரவர்த்தினி என்னும் பட்டம் பூண்டபோது இவ்வரசர் டில்லிக்குச் சென்று திரும்புகையில் தம்நாடு கொடிய பஞ்சத்தால் வருந்துவதைக் கண்டார். மூன்று வருஷமாக மழை பெய்யாமற்போகவே ஜனங்கள் உண்ண ஆகாரமின்றி வருந்தினர். வெளிப்பிரதேசங்களும் அவ்வாறேயிருந்தபடியால் உணவு வருவதற்கும் வழியில்லாதிருந்தது. அரசனும், கவர்னர் ஜனரலும் தங்களாலான வரையில் பாடுபட்டார்கள். கடைசியாக மழை பொழியப் பஞ்சம் கொஞ்சம் தணிந்தது. என்றாலும் ஜனங்கள் ஆயிரக்கணக்காயிறந்தனர். பஞ்சம் தணிந்த பிறகு அரசனும் ராஜ்யத்தைத் தாமே நேரே ஆளவேண்டிய காலம் வந்தமையின், நாடு முழுமையும் சுற்றிப் பார்த்துவர வாரம்பித்தனர். கடைசியாக 1881-ம் வருஷத்தில் மார்ச்சுமீ 25உ மகாராஜா சாமராஜேந்திரவுடையாருக்குப் பதினெட்டாவது பிராயம் வந்தபடியால் ஸர்வாதிகாரமும் அவருக்கே ஆங்கிலேயர் கொடுத்துவிட்டனர். ஆனால், மைசூர் மகாராஜாவுடன்பட்டிருக்கிற நிபந்தனைக



மைசூர் மஹாராஜா
காலஞ்சென்ற
சாமராஜேந்திரவுடையார்.

பரோடா மஹாராஜா
ஸயாஜிராவ் கய்க்வார்.

ளாவன:—(1) வருஷமொன்றுக்கு முப்பத்தைந்துலக்ஷம் ரூபாய் கப்பங்கட்டவேண்டும். (2) ஆங்கிலேயருத்திரவின்றி கோட்டைகளைக்கட்டுதலாவது, இடிந்த கோட்டைகளைப் பழுதுபார்ப்பதாவது, யுத்த ஆயுதங்கள் வரவழைப்பதாவது கூடாது. (3) ஆங்கிலப்படை எங்கெங்கே வேண்டுமென்று கவர்னர் ஜனரலுக்குத் தோன்றுகிறதோ அங்கங்கே வைக்கப்படவேண்டும். (4) ஆங்கிலேயர் ஏற்படுத்தியுள்ள அளவுக்கு மேற்பட்டுச் சேனைகளை வைத்துக்கொள்ளக்கூடாது. (5) மற்றைச்சுதேச அரசர்களோடு எவ்விதமான சம்பந்தமும், ஆங்கிலேயராலன்றி, கூடாது. (6) இந்தியாவில் பிறந்து வளர்ந்தவரல்லாதவரை, ஆங்கிலேயருத்தரவின்றி வேலையில் வைக்கக்கூடாது. (7) தனியாக நாணயங்கள் வைத்துக்கொள்ளக்கூடாது (8) ரெயில் வழிகளுக்கும் தந்தி மார்க்கத்துக்கும் நிலங்கள் கொடுக்கவேண்டும். (9) குற்றவாளிகளை காட்டிக்கொடுக்கவேண்டும். (10). உப்பு, அபின் முதலிய பொருள்களை உண்டாக்குவதிலும் நிறுத்துவதிலும் கவர்னர்ஜனரலுடைய இஷ்டப்படி நடக்கவேண்டும். (11) சட்டதிட்டங்களின்படி நடக்கவேண்டும். (12) ஆங்கிலேயருடைய உத்தரவின்றி ராஜ்யவிஷயத்தில் மாறுதல்கள் செய்யக்கூடாது. (13). பூர்வீக பாத்தியங்களைப் பாதுகாக்கவேண்டும். (14) புத்திமதிகளைக் கேட்கவேண்டும். (15) ஆங்கிலேயரால் ஒப்புக்கொள்ளப்பட்டாலொழிய, ராஜ்யத்துக்கு ஒருவருக்குப் பின் ஒருவர் அங்கீகரிக்கப்படமாட்டார். இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, 1881 வருஷம்முதல் மைசூர் ராஜ்யம் சுதேச அரசர்கள் வசமிருந்து வருகிறது. பெரிய ராஜ்யமொன்றை அதிலுள்ள அனேகமாயிரம் ஜனங்களோடும் உலகியலறிவு தெரியாத ஒரு பையன் கையில் கொடுப்பதனால் தீங்குகள் வருமோ எனப்பயந்தனர் பலர்.

ஆனல் சாமராஜேந்திரவுடையார் ஞானத்தில் சிறந்த வராதலால் மிகுந்த ஜாக்கிரதையுடன் ஆண்டுவந்தனர். மைசூர் ராஜ்யம் முதன்மையான ஸ்திதிக்கு வந்துவிட்டது. நாகரீகத்திலும், மற்றுமுள்ள ஜனஸௌக்கியத்திலும் மேலானதாயிற்று. அரண்மனைப் பொக்கிஷங்களிலும் பணம் சேரலாயிற்று. இவைகளுக்கெல்லாம் காரணம் மஹாராஜாவின் சக்தியும் அவருக்குப் பலவிதத்திலும் உதவி செய்த அறிவு நிறைந்த மந்திரிகளின் சக்தியுந்தான். ரங்காசார்லு,* சேஷாத்திரி ஐயர்§ முதலியோர் நாட்டை நல்ல ஸ்திதிக்குக்கொண்டுவந்தனர். ஜனங்களெல்லாம் ஆனந்தத்துடனும், திருப்தியுடனும் வாழ்கின்றனர். மஹாராஜாவும், எல்லா இலாகாவையும் சீர்திருத்த வாரம்பித்தார் இப்படிப்பட்ட மந்திரிகளை வைத்துக்கொண்டு என்

---

* ரங்காசார்லு.—காஞ்சீபுரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஓர் ஸ்ரீ வைஷ்ணவப் பிராம்மணர். சென்னை ராஜதானியில் டிப்டிகலெக்டராயிருந்து இறும் விஷயத்தில் வேலைப்பார்த்துப்புகழடைந்தார். 1868-ம் ஆண்டில் மைசூர் அரசனிறந்ததும், அவனுடைய கடன்களைத் தீர்க்கவும், மற்றுமுள்ள விஷயங்களைச் சீர்திருத்தவும், பௌரிங்துரை ரங்காசார்லுவை மைசூருக்கு அழைத்துக்கொண்டுபோனர். பிறகு அவர் அரண்மனை ஸ்தானீகராக நியமிக்கப்பட்டார். 1879-ல் கமிஷணருக்கு ரிவினியூ ஸெகரேடரியாகவும் ஆனர். 1878ல் ஸி. ஐ. இ. பட்டம் பெற்றார். 1883-ல் காலஞ்சென்று விட்டார்.

§ சேஷாத்திரி ஐயர்.—ரங்காசார்லு இறந்தவுடன் மந்திரிஸ்தானத்துக்கு வந்த இவர் பாலக்காட்டுதேசத்து ஸ்மார்த்தப் பிராம்மணர். பி. ஏ. பீ. எல். பரீக்ஷைகள் கொடுத்தவர். 1868-ல் மைசூரில் நியாயசிரஸ்தேதாராகி 1879-ல் டிப்டி கமிஷணரானர். இவரும் அரண்மனஸ்தானீகர், ஸெஷன்ஸ் நியாயாதிபதி முதலிய பெரிய பதவிகளிலிருந்து வேலைபார்த்தவர். 1887-ல் ஸி. எஸ். ஐ. பட்டமும், 1893-ல் கே. ஸி. எஸ். ஐ. பட்டமும் பெற்றனர். ஸர். வில்லியம் ஹன்டர் இவரைப்பற்றிச் சொல்லுவதாவது:— "இவர் தம்மனதைப் பரப்பிரம்மதுக்கும், அறிவை ஹெர்பர்ட்ஸ்பென்ஸருக்கும் அர்ப்பணம் பண்ணினவர்" இவர் 1901-ல் இறந்தார்.

ன காரியந்தான் செய்யமுடியாது? இருப்புப் பாதைகளி ஞல் போக்குவரவு இலகுப்பட்டது. கைத்தொழில்கள் விருத்தியடைந்தன. பிராணபயம் பொருட்பயமில்லாமற் போயிற்று. குளங்கள் முதலிய நீர் நிலைகளெல்லாம் சரி யாக்கப்பட்டன. பெண்கல்விக்காக மஹாராஜா செய்த ஏற்பாட்டுக்கு அளவில்லை. உயர் குலப்பெண்களுக்கு ஒரு பெண் கல்விச்சாலை மஹாராணியார் ஸ்தாபித்தது இந்நாட்டில் இணையில்லாதது. இப்போது மைசூரில் வருஷமொருமுறை கூடும் பிரதிநிதிச்சபைக்கு இந்த மஹாராஜாதான் மூலகாரணம்.

இவ்வாறு ஜனஸௌக்கியத்தைத் தேடிவந்த மகா ராஜா, குதிரையேற்றம், வேட்டையாடுதல் முதலிய தேக ப்பயிற்சியிற் சிறந்தவர். நாடுகளில் சிறந்ததெனப் பேர்வா ங்கிய மைசூர் ராஜ்யத்துக்கு 1894-ல் ஒரு பெருந்துயரம் வந்தது. தம்முடைய குடும்பசகிதமாய் குளிர்காலத் தில் மஹாராஜா வடதேசத்துக்குப் பிரயாணம் போயிருந் தார். கல்கத்தாவுக்குச் சென்றதும், கொஞ்ச நாளாயி ருந்த இருமல் முதலிய வியாதிகள் மேலிட்டு அவைகளி ஞல் திடீரென்று டிஸம்பர் மீ 28உ இறந்துவிட்டார். அவருக்குப்பிறகு, அவருடைய ஜேஷ்ட குமாரரான மகா ராஜா கிருஷ்ணராஜவுடையாரை, மைசூரில் 1895 ஷு பிப்பரவரி மீ 1உ அரசனுக்கி முடிசூட்டினர்கள். அப் போது இவருக்கு வயது பத்து. இவருடைய தாயார் இவருக்குப் பிரதியாய் ஆண்டுவருவதென்று தீர்மானிக் கப்பட்டது. திவான் ஸ்ரீ. கே. சேஷாத்திரி ஐயர் மந்திரி யாயிருந்து ஆண்டுவந்தனர். இரண்டு வருஷத்துக்கு முன்தான் மகாராஜாவுக்குத் தகுந்த பருவம் வந்தபடி யால் ராஜ்யமுழுவதும் அவர் கையிலேயே ஒப்புவிக்கப்ப ட்டது. தம் தகப்பனரைப்போலவே இவரும் குடிகளிட

த்துப் பக்ஷமும் நாட்டின்மேல் விசுவாசமும் உள்ளவர். வயது அதிகமாகவில்லையாயினும் ஆளுந்திறமை வாய்ந்து குடிகளைப்பாது காப்பதில் வல்லவரென எண்ணப்படுகின்றனர்.

மைசூர் மகாராஜாவுக்குத் தம்குடிகளுக்கு மரணதண்டனை விதிக்கவும் மரணதண்டனையை மாற்றவும் அதிகாரமும், 21 குண்டு மரியாதையும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இருப்பிடம், அரண்மனை, மைசூர்; அரண்மனை பெங்களூர், தென்னிந்தியா.

THE GRAMOPHONE.

கிராமோபோன்.

பேசும் பாடும் யந்திரங்கள் பல மாதிரி உண்டு, ஆனால்

“ கிராமோபோன் ” என்னும் பேர்கொண்ட ஒரு யந்திரமட்டுமே— மற்றவைகளைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தது மட்டுமல்லாமல்; தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் சமஸ்கிருதம் முதலிய அநேக இனிமையான இராகங்களுள்ள பலகைகள், தென் இந்தியாவிலுள்ள பேர்போன பாகவதர்களாலும், தாசிகளாலும்பாடப்பட்டு, அடியிற்கண்ட மேல்விலாசத்திற்கு வந்திருக்கிறது.

கிராமோபோன் யந்திரம், யாவரும் வாங்கிபாடக் கேட்டு சந்தோஷமடையக்கூடியதாய், பல விலைகளிலும் இவ்விடத்தில் அகப்படும்.

No. 5 கிராமோபோன் புதியமாதிரி ரூபா 89—4—0

☞ காட்லாக்குகளுக்கும், விவரங்களுக்கும் அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜே. எச். பார்க்கர்,

199. மௌண்டுரோட்,

மதராஸ்.

கிராமொமபோன்.

பாட்டுப்பலகைகள்,

அநேகம் உண்டு. எல்லாவற்றையும் இங்கே சொல்லமுடியாது.

அவற்றில் சிலது:—

சேலம் கோதாவரி.

அருமருந்தோரு

இது நான்வர யின்னும்

வஞ்சியுன் மேல்

அறியானை—தேவாரம்

எப்போதுலேயும்

சேலம் பாப்பா.

கண்மணியே என்சாமி

இதைவிட இன்னும்

காஞ்சிபுரம் தனக்கோடி

மோகப்பகட்டுக்காரி

இன்னமுதுகனிபாகு

கற்கண்டு

சேலம் அம்மாக்கண்ணு

என்னடிமெத்த

அப்பனே பழனியப்பனே

விகடகவி.

ரெயில்வண்டி

பட்டணத்துஜட்காவண்டிக்காரன் சண்டை

இன்னும் அநேகம். கேட்லாக்குகளுக்கு அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜெ. எச். பார்க்கர்,

199 மௌண்ட் ரோட்,

மதராஸ்.

தாதாவின் தந்திரம்.

ஒரு நாள் தன்மரணபுரத்திலிருந்து சென்னைக்குப் புறப்படுகிற இரவு ரயில்வண்டியில் சுமார் 55 வயதுள்ள ஒரு விருத்த பிராமணரையும் அவர் பக்கத்தில் சுமார் 14 வயதுக்கு மதிக்கக்கூடிய ஒரு சுந்தரமான பெண்ணையும் கண்டோம். பெண் பெரியவரைப்பார்த்து:—

"எங்கே டிக்கட்டு வாங்கியிருக்கிறீர்?"

"எங்கே இருந்து புறப்பட்டோமோ, அங்கேதான்."

"அது எனக்குத்தெரியும், எந்த ஊருக்கு?"

"போனால் தெரிகிறது."

"சொல்லப்படாதோ?"

"எந்த ஊருக்கென்றாலென்ன, உன்னைத் தகுந்தவிடத்தில் சேர்த்துவிட்டு வரவேண்டுமென்றுதானே ஒருவருக்கும் தெரியாமல் புறப்பட்டது."

"தெரியாமலே போய்விடுமா?"

"நான் இந்த ஐந்துவருஷகாலமாய், அதாவது உன் புருஷன் இறந்தானென்று தெரியவந்த பிறகு உன்னைக் கூட்டிக்கொண்டு காசியாத்திரை போக உத்தேசித்திருக்கிறேனென்று, வந்தவன் போனவன்கூடவெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தேன். நம்மிருவரையும் காணாவிட்டால் காசியாத்திரைபோய்விட்டார்களென்று தீர்மானித்துவிடுகிறார்கள். தவிர, நம்மைப்பற்றி யாருக்கு

கவில்லே? புருஷனைக் காணவில்லையே, பெண் எங்கேயோ போய் விட்டாளே என்று வியாகூலப்பட உன் தாயாரா இருக்கா!"

"அப்பா! இது என்ன ஸ்டேஷன்? எத்தனைக்கெத்தனை தூரம்!"

"இதில் நாமும் இறங்கவேண்டுமோ, என்னவோ தெரியவில்லையே! ஜோலார்பேட்டையாகத் தானிருக்கவேண்டும்."

இருவரும் வண்டியை விட்டிறங்கி பெங்களூருக்குச் செல்லுகிற வண்டியில் ஏறினர்கள். பெண்ணின்பேரில் விசேஷ நகைகள் ஒன்றும் காணப்படவில்லை. இயற்கையாகவே கூடியவரையில் அழகாயும், பேச்சு வார்த்தைகள் இனிமையாயுமிருந்தது. வயோதிகர் வைதீக ஆசாரமுள்ளவர்போல காணப்பட்டாலும் லௌகீக ஸம்பிரதாயமாய் ஒரு சட்டையும் அணிந்துகொண்டிருந்தனர்.

"அண்ணு காசியும் விசாரிக்காமலா இருந்துவிடுவான்."

"விசாரிக்கட்டுமே, காசிக்குதானே எழுதுவானென்று சொல்லுகிருய். காசி எந்த மூலே. நாம் போகிறது எந்த மூலே."

"அந்த மூலேயைத்தான் கேட்கிறேன், சொல்லுமே."

"உனக்கு ஊரின் பெயர் தெரிந்தாகவேண்டியதென்ன? இங்கிலீஷ்காரர்களால் ஆளப்படுகிற ஊர்களைப்போலவே, அல்லது அதைவிட சற்று திருப்திகரமாகவே ஒரு மஹாராஜாவால் ஆளப்படுகிற இராஜ்யம். ஜல கஷ்டமென்பதையே ஜனங்கள் தெரியாவண்ணம் ராஜ்யமானது பல ஏரிகளாலும், குளங்களாலும் நிறைந்து வளம் பெற்ற பூமி. ஜனங்கள் வியாபாரத்திலும், கைத்தொழில் முயற்சியிலும், கல்வியறிவிலும் தேர்ந்து கீர்த்தியடைந்தவர்கள். பெண்கள் எப்.ஏ. பீ.ஏ. பரீக்ஷைக்குப் படிக்கத் தகுந்த பாடசாலே இத்தேசத்திற்கு இவ்வூரிலுள்ள பெண்பாடசாலேயே முற்பட்டதாகும். ஸகல வளமும் பொருந்திய இந்த நகரத்திலே உனக்குத்தகுந்த விடம் கிடைக்கவேண்டுமென்பதே எனதுகோரிக்கை."

"தகுந்த விடமென்ருலென்ன?"

"உனக்கு சௌக்கியமாயிருக்கத்தானேவேண்டும்."

"ஆமாம், அதற்கு என்ன செய்யப்போகிறீர்."

"இந்த ஊரில் சுமார் 28 அல்லது 30 வயதுள்ள ஒருவர் இருக்கிருர். அவர் நம்ம ஜாதியே அல்லவாயினும் கன்னட பாஷையே

பேசப்பட்டவர். இதற்குமுன் மூன்று தடவை விவாகம் நடந்து மனைவிகளை மாளக்கண்டவர். நல்ல தர்மகுணமும், தயையும், தாக்ஷிண்யமுமுள்ளவர். குறைந்தது அறுபதினாயிரத்திற்கு ரொக்கமாகக் கையிலுண்டு. அவருக்கு மனைவிகள் நிலைப்பதில்லை என்ற எண்ணத்தினால் ஒருவரும் பெண் கொடுக்க முந்தவில்லை. கடைசி மனைவி இறந்துபோய் இரண்டு வருஷமாயும், இவராக பலரை தனக்கு விவாகஞ் செய்துவைக்கும்படி கேட்டும், பெண்ணைக்கொடுக்க ஒருவரும் முந்தவில்லை. மனவெருப்படைந்த இவரும் தமது வேலையை ராஜீநாமாக் கொடுத்துவிட்டு வடதேசயாத்திரை சென்று சன்னியாசியாகத் தீர்மானித்திருப்பதாகத் தோற்றுகிறது. அவரிடகிரகத்திற்கு உன்னை ரகசியமாக அழைத்துக்கொண்டுபோய், உனக்குமுன் சேர்ந்துள்ள ஸங்கதிகளைக்கூறாமல் விவாகத்தைச் செய்துவைத்துவிடுகிறேன். அதிர்ஷ்டமிருந்து பிழைத்திருந்தால் ஸுகப்படுவாய் என்பதில் தடையில்லை. அவருடைய முந்திய மனைவிகளுக்கு நேர்ந்த கதியே உனக்கும் நேருமானால், உன்னை உலகத்தார் விதவை என்று கூறமாட்டார்கள். யானும் அவரிடத்தில் ஏதாவது இவ்விஷயமாகப் பெற்றுக்கொண்டு காசிக்குச் சென்றுவிடுகிறேன். உனது கருத்தென்ன? கூறுவாய்."

"அவரிடத்திலா என்னை விடப்போகிறீர்! நல்லது; அவருடைய லக்ஷணமென்ன? அவருடைய உத்தியோகம் யாது?"

"அவருடைய வயதைப்பற்றி உனக்கு இப்பொழுதுதான் சொன்னேனே. மேலும் அவர் அதிக உயரமும் இல்லை. குள்ளருமல்ல. மாநிறமாய் நல்ல இலக்ஷணமாயிருப்பார். மாதம் 300 ரூபாய் கிடைக்கிறது. ஜில்லா கோர்ட்டு முனிசீப் என்று சொல்லுவார்கள். அவர் இஷ்டப்பட்டு உன்னை விவாகம் செய்துகொள்ள வேண்டுமே என்று ஸதா மதுரை மீனாக்ஷியை பிரார்த்தித்துக்கொண்டு வருகிறேன்."

"நீர் சொல்லுவது ஸரிதான். ஜாதகம் பார்க்கவேண்டாமோ? பொருத்தங்கள் சரியாயில்லாவிட்டால், நீர் நினைத்திருப்பது எப்படி ஸாத்தியம்?"

"பொருத்தம் பார்ப்பதென்றால் ஜாதகங்களை வைத்துக்கொண்டு ஊரிலுள்ள ஜோசியர்களையெல்லாம் கூட்டம் போட்டு பார்ப்பதில் பிரயோஜனமென்ன?"

"பெண்ணுக்கு மாப்பிளை ஆகாரத்திலும், இலக்ஷணத்திலும், குணத்திலும், பொருந்தியிருக்கிறதாவென்று நாம் பார்க்கவேண்டியதே முக்கியமானது. இந்த விஷயம் ஜாதகத்தில் என்ன தெரிகிறது? இரண்டு கண்ணுமில்லாத பிரவிக்குருடனுடைய ஜாதகமொன்றை நம்ம சின்னப்பாஜோசியரிடம் காட்டியபொழுது திவ்விய ஜாதகம், ஜாதகன் மன்மதனைப்போல் இலக்ஷணமாயிருப்பான். பி. ஏ. வரையில் படிப்பு ஏறும். டிப்டி கலெக்டராக 35வது வயதில் ஜாதகனை பார்ப்பீரென்று சொன்னார். இப்படி நம்முடைய ஜோசியர்களுடைய ஸாமர்த்தியமிருக்கும்பொழுது ஜாதகப்பொருத்தம் பார்ப்பதில் பிரயோஜனம் யாது?"

"நீர் இப்படி நிரீச்வரவாதம் செய்தே என்னை பணக்காரர்கள் வீடு என்பதாக தள்ளினீர். ஜாதகபொருத்தங்கள் பார்த்து செய்யவேண்டுமென்று நீர் உறுதிகொண்டிருந்தால், நான் இந்த சிறிய வயதில் மொட்டிலறுத்து மூலையில் குந்தியிருக்க நேர்ந்திராதே."

"நான் உன் ஜாதகத்தையும் மச்சுவீடு ராமச்சந்திர ராயர் குமாரன் ஜாதகத்தையும் பார்க்கவில்லையென்று கூறுகிறாய். அந்த விஷயத்தில் நான் பட்டகஷ்டத்திற்கும் செய்த செலவுக்கும் கணக்கு வழக்குண்டா? உனக்கு அதிர்ஷ்டமில்லை. நான் செய்வது என்ன?"

"நீர் இப்பொழுதுசொன்னதுமிகவும்சரி.சின்னப்பாஜோசியர் வீட்டுக்கு நூறு தடவைக்கு அதிகமாக நடந்திருப்பீர். என் ஜாதகத்தை மாண்டுபோனகடன்காரன் ஜாதகத்திற்குப் பொருத்தம் செய்யும் விஷயத்தில் பல ஜோசியர்களுக்கு சில்லரையாக 100 ரூபாயும், சின்னப்பா ஜோசியருக்கு மட்டும் 100 ரூபாயும் கொடுத்தீரென்பது எனக்குத்தெரியாததல்லவே. நீர் பட்ட பாடும் செய்த செலவும் என் தலையில் துணியைப்போடத்தானே! ஜாதகத்தை ஸரியாய்ப்பார்த்துப் பொருந்தியிராவிட்டால் ஜாதகம் பொருந்துகிற ஒரு பரமதரித்திரனுக்கு என்னை விவாகஞ்செய்து கொடுத்திருந்தாலும், நான் தாலியும் கழுத்துமாய்ப் பிச்சை எடுத்தாவது ஜீவனஞ்செய்துக்கொண்டுஸந்தோஷமாயிருப்பேனன்றோ! (கண்களில் நீர் ததும்ப) இப்பொழுதும் ஜாதகங்களைப் பாராமல் என்னை ஒரு முனிசீப் வீட்டில் தள்ள எண்ணியிருக்கிறீர். அப்படி நீர் செய்ய

வும் செய்வீர். என் அதிர்ஷ்டமெப்படியோ! அவருக்கு முந்திய மூன்று மனைவிகள் இறந்துபோனது போல நானுமாகக்கடவுளுக்கு எண்ணமிருக்குமா? இருந்தால் நான் அதிர்ஷ்டசாலிதான். எனக்குமுந்தியவர்காலம் கழியுமாஞல் மறுபடியும் என் கதி என்ன?"

"மச்சுவீட்டார்மேல் நாளையதினம் ஒரு ஜீவனும்சபிராது போடுவேனுஞல், மாதம் 50 ரூபாய் தீர்ப்புக்கிடைக்கும். ராமச்சந்திர ராயருக்கு இப்பொழுது வயது சுமார் அறுபதிருக்கலாம். இரண்டு மூன்று வருஷத்திற்குள் தொலைந்து போவரென்பதில் தடையில்லை. பிறகு சுமார் லகாரத்திற்கு அதிகமாயுள்ள சொத்துக்கும் நீயே எஜமானியாய்விடுவாய். உன் இஷ்டம்போல் உனது தமயன் காசிராவின் குமாரர்களில் ஒருவனை ஸ்வீகாரஞ்செய்துகொண்டு ஸுகமாயிருக்கலாம். உனக்கு அது இஷ்டமில்லையென்றே இவ்விதம் யோஜித்து அழைத்துக்கொண்டு புறப்பட்டேன். உன் கருத்தென்ன? சொல்."

"அப்பா, உன் மனதுக்கு விரோதமின்றி நடக்கவேண்டுமென்பதே எனது கருத்து. நம்முடைய அதிர்ஷ்டம் இவ்விதமானதென்று நமக்கு அறியும் சக்தியில்லை. ஆயினும் நமது ஜாதகங்களைப் பார்த்தால் ஆயிஸுப்பிரமாணங்களையாவது ஒருவாறு ஜோசியர்களாலறியலாம். நீர் பணமே ஸகல ஸுகங்களையும் கொடுக்கக்கூடியதென்று நினைக்கிறீர். அது எனது கருத்தன்று."

"உனது கருத்தை யறிந்துதானே நான் இவ்வாறு செய்ய உத்தேசித்து, லக்ஷம் ரூபாயை அலக்ஷியமாக எண்ணிப் புறப்பட்டிருக்கிறேன். ஒரு சமயம் உன்னை யாராவது கேட்டால் முந்திய விவாக சங்கதிகளைக் கூறிவிடாதே. குலம் கோத்திரம் விசாரித்தால் இவ்விதம் சொல்லு. மறந்துவிடாதே. நாம் இறங்கவேண்டிய ஸ்டேஷன் ஸமீபித்துவிட்டது.

பத்மாவதி (தனக்குள்).—ஈசா! உனது கருத்துக்களையறிய வல்லார் யார்? அவற்றை புறகணிக்கத் துணிந்தவருமுண்டோ? துணிந்து வென்றவருமுண்டோ?

இட்டமுடனென்றலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவனுஞ் செத்துவிட்டானே—முட்ட முட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

தமயந்திக்கும் நளசக்கிரவர்த்திக்கும் நேர்ந்த விவாகமும், சீதைக்கும் இராமருக்கும் நடந்த கல்யாணமும், துரோபதைக்கும் பஞ்சபாண்டவர்களுக்கு முண்டான ஸம்பந்தமும் ஜாதகங்கள் பார்க்கப்பட்டா செய்யப்பட்டன? ஒவ்வொன்றும் பூர்வஜன்மபலனை அனுஸரித்தே நிகழ்கின்றன. ஞானயோகிகளுக்கும் பிராரப்தத்தையகற்றுவது ஸாத்தியமானதல்லவென்றால் பேதமைக்கிருப்பிடமாகிய என்னால் யாது செய்யமுடியும்? மூலைவீட்டு சீதாலக்ஷ்மி புருஷனுடைய ஹிம்ஸைக்கு ஸகியாதவளாய் பிராணனை மாய்த்துக்கொள்ள ஆழமான கிணற்றில் அர்த்தராத்திரியில் பாய்ந்தாள். அது ஈச்வரருக்கு ஸம்மதமில்லைபோலும். கிணற்றில் கல்லைக்கட்டிக்கொண்டு விழுந்தும் தேகத்தில் பல காயங்களுண்டாயிற்றேயன்றி பிராணன் போகவில்லை. காயங்கள் ஆற நான்குமாதம் சென்றது. அபவாதமும் அதிகரித்தது. விதியை விலக்க நமக்கு சக்தியில்லாதபொழுது நாம் செய்வதென்ன? ஈசா! உனது கருத்துப்படியேயாகுக."

தாதா.—"பத்து! மூட்டையை ஜாக்கிரதையாய் எடுத்துக்கொண்டு இறங்கு. இந்த ஸ்டேஷனில்தான் நாம் இறங்கவேண்டும். நீ என்னவோ பிரமை பிடித்தவள் போல் யோஜனை செய்கிறாய். தைரியமாயிரு. உனக்கு நான் கெடுதிசெய்யேனென்பதை நம்பு."

இருவரும் ஒரு பிரம்மாண்டமான ஸ்டேஷனில் இறங்கி ஒரு ஜட்காவண்டியை வைத்துக்கொண்டு பெத்தபேட்டாவென்ற விடம் சேர்ந்து ஒரு விசாலமான மெத்தை வீட்டண்டையிறங்கி அவ்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார்கள்.

"அப்பா! இந்த ஊரில் இந்த மனிதர் இவ்வித ஸ்திதியிலிருக்கிறாரென்று நீர் எப்படித் தெரிந்துகொண்டீர். இந்த வீடு அவருடைய சொந்தமா?"

"இவற்றையெல்லாம் நான் விசாரித்தறியாமலா உன்னையழைத்துக்கொண்டு இவ்வளவுதூரம் வருவேன்? இவ்வீடு யாருடையதோ தெரியவில்லை. அவர் வீடு இத்தெருவில்தானிருக்கவேண்டும். சற்று பொறு, விசாரித்துப் பார்ப்போம்."

தெருவில் செல்லுகிற ஒருவரைக் கேட்டுத் தெரிந்துகொண்டு இருவருமாக முனிசீப் வீட்டை நாடிச்சென்று தெருத்திண்ணையில்

பெண்ணை உட்காரவைத்துவிட்டுத் தாதா உள்ளேசென்றார். அதி காலை மணி ஐந்திருக்கலாம். முனிசீப் எழுந்திருக்கவில்லை. சமை யல்காரன் வந்து யார் என்று கேட்க தாதா அவனை வெகு ஜாக்கி ரதையாய் விசுவாசஞ்செய்துகொண்டு, தன்னை முன்சீப் அவர்க ளின் நெருங்கிய பந்துவென்று சொல்லிக்கொண்டார். முனிசீப் எழுந்த உடன் யார் வெளியிலென்று கேட்டார். சமையல்கார குப்புராவ், தங்கள் பந்து ஒருவர் வந்திருக்கிறார் என்று கூறினன். முனிசீப் லக்ஷ்மிநரசிங்கராவ் படுக்கையை விட்டு எழுந்த வுடன் ஜன்னல் வழியாக வெளியே பார்க்கக் கண்களுக்கு ரூபலாவண் யமுள்ள ஒரு கன்னிகை தென்பட்டாள். இப்படி யொருபெண் தனக்குக் கிடைத்தால் போதுமென்று நினைத்து, யார் உள்ளே வாருங்கோ என்று கூவினர். தாதாவும் 'ஹரி' என்று உள்ளே சென்று மரியாதையாக முனிசீபால் உபசரிக்கப்பட்டு ஒரு ஆஸனத் தில் அமர்ந்தனர்.

"நான் இருப்பது சுந்தரபுரம். தங்களுடைய உத்தியோகம், சம்பளம், யோக்கியதை, பெயர் முதலியவைகளை யறிந்திருக்கிற தன்றியில் தங்களுக்கு மூன்று விவாகங்கள் நடந்து மூன்றும் தப் பிப்போயிருப்பதையும் தெரிந்திருக்கிறேன். தங்களுடைய கோத் திரம் ஒன்று தான் தெரியவில்லை" யென்றவுடன் முனிசீப் "பாரத் தவாஜ கோத்திர" மென்றனர். "ஆ! ஆ!! ரொம்ப சரி, எங் களுக்கு வசிஷ்ட கோத்திரம். எனக்கு (வெளியில் கையைக் காட்டி) இந்த ஒரே பெண், அவளைத் தங்களுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று எண்ணிக் கூட்டிக்கொண்டுவந்துவிட்டேன்." என்றவுடன் முனிசீப் பெண்ணை உள்ளே யழைக்கும்படி சொன் னார். தாதாவே வெளியே சென்று பெண்ணை உள்ளே கூட்டிக் கொண்டு வந்தார். முனிசீப் பெண்ணை சற்றுநேரம் உற்றுப் பார்த்து, "உன் பெயரென்ன" வென்று கேட்டனர். பெண் தனது இனிய குரலால் பத்மாவதி என்று கூறி இவர் முகத்தையும பார் த்து நாணியவளாய்த் தலை குனிந்து நின்றாள். முனிசீப் மிஸ்டர் ராவ்ஜி படுக்கையை விட்டு எழுந்து கம்பீரமான நடையுடன் வீட் டின் பின்கட்டுக்குச்சென்று சமையல்காரனிடத்தில் என்ன சமை யலென்று விசாரித்து, இருவருக்கு அதிகமாகச் சமையல் செய்யும் படி கட்டளையிட்டனர். பிறகு உடனே காலபிரவர்த்திக்குச்

சென்று திரும்பி, பல் தேய்த்து, ஸ்நானஞ்செய்து, மடிதரித்துக் கொண்டு பூஜைக்கு உட்கார்ந்தவுடன், தாதாவையும் பெண்ணையும் ஸ்நானஞ்செய்து மடிகட்டிக்கொள்ளும்படி சொன்னார். பூஜை செய்யும்பொழுதே யோஜனை செய்து இன்ன விதமாகக் கல்யாணத்தை நிறைவேற்றவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். நாம் இன்று எழுந்த உடன் இந்தப் பெண்ணின் முகத்தில் விழித்திருக்கிறோம். இன்றையதினபலத்தைப்பார்க்கவேண்டும். விசேஷ இலாபமில்லாவிட்டாலும், யாதொரு கெடுதியும் ஸம்பவிக்காவிட்டால் நாளையதினமே பம்பரய்க்கு இவர்களை நேராகக் கூட்டிக்கொண்டு போய் விவாகத்தை நடத்திக்கொண்டு திரும்பிவிடுகிறது. 15 நாள் ரஜாவிருந்தால் போதுமானது. இன்று கோர்ட்டுக்குச் சென்று கேசுகளுக்கெல்லாம் வேறு வாய்தா போட்டுவிட்டு, ஜட்ஜியை நேரில் பார்த்து ரஜா கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார். மூன்று பெயருக்கும் இலை போடப்பட்டு பரிமாறப்பட்டது. பெண் அவர்களுடன் உட்கார்ந்து சாப்பிடத் தயங்கினாளென்றாலும், தாதாவின் உத்திரவாலும், முனிசீப் அவர்களின் வற்புறுத்தலாலும் கூடவே உட்கார்ந்து போஜனஞ் செய்தாள். சாப்பாடான பிறகு முனிசீப் ராயர் நல்ல உடுப்புகளைத் தரித்துக்கொண்டு, கண்ணாடியில் தன்னுருவத்தைப் பலதடவை பார்த்து, தன்னுடைய இலக்ஷணத்தை அப்பெண் பார்த்து ஸந்தோஷப்படவேண்டுமென்பதாகப் பின்கட்டுக்குச் சென்று சமையல்காரனையழைத்து, இந்தப்பெண்ணுக்கு இடைப்பகலில் ஏதாவது செய்துகொடுக்க மறந்துவிடாதே, எனக்கு இன்று டிபன் கச்சேரிக்குக் கொண்டுவரவேண்டாம். நானே மூன்று மணிக்குத் திரும்பி வந்துவிடுகிறேனென்று சொல்லிவிட்டு, பெண்ணின் சமீபத்தில் சென்று கச்சேரிக்குப் போய்விட்டு வருகிறேன். இரண்டு மணிக்கு ஏதாவது பலகாரம் செய்து கொடுக்கும்படி சொல்லியிருக்கிறேன், சாப்பிடு, வரட்டுமா? என்று கேட்டார். அந்தப் பெண் சிரித்த முகத்துடன் 'நல்லது' என்றனள்.

அவ்வார்த்தையைக்கேட்ட ராயர் அதிக குதூஹலமாய் தாதாவிடத்திலும் உத்திரவு பெற்றுக்கொண்டு, வெளியில் எங்கும் போகவேண்டாமென்றும், விவாக ஸங்கதி ஒருவருக்கும் தெரியக்கூடாதென்றும், மெதுவாய்க் கூறிவிட்டு, வண்டியேறி கோர்ட்டுக்குச்

சென்றார். குறிக்கப்பட்டிருந்த ஒன்பது நம்பர்களில் ஒன்றைமட்டும் விசாரித்து தீர்ப்பு அடுத்த மாதத்தில் கூறப்படுமென்பதாகச் சொல்லி, மற்ற நம்பர்களை வேறு தேதிகளுக்கு மாற்றியிருப்பதாக உத்திரவிட்டு, இரண்டு மணி சுமாருக்கு ஜட்ஜி கோர்ட்டுக்குச் சென்றார். அப்பொழுதுதான் ஜட்ஜி தன் கோர்ட்டை டிபனுக்காக கலைத்துவிட்டு தனது அறையில் சென்றிருந்தார். சிற்றுண்டிகளை சாப்பிட்ட பிறகு அந்தரங்க அறையில் ஜட்ஜி உட்கார்ந்து சில கடிதங்களுக்குக் கையெழுத்துப் போட்டானதை யறிந்துகொண்டு, உள்ளே பிரவேசித்து, தனக்கு ரஜா அவஸரமாய் வேண்டியிருப்பதை தெரிவித்தார். ஜட்ஜ் ரஜா கொடுக்க ஒத்துக்கொண்டாராயினும் நான்கு தினத்திற்குப் பிந்தித்தான் போகவேண்டுமென்று கூறினர். இவர் வீட்டுக்குத் திரும்பி வரும்பொழுது ஒரு தபால் சேவகன் ஓர் தந்தி சமாசாரக் கடிதத்தை இவர் கையில் கொடுத்தான். அதை இவர் திறந்து பார்க்க பயந்தவராய், இது என்ன சங்கதியோ தெரியவில்லையே! யார் இறந்துபோயினரோ! நமது விவாகத்திற்கு என்ன தடை நேர்ந்திருக்கிறதோ! திறந்து பாராமலே இருந்து விடலாமா? என்று பலதடவை தந்திக்கடிதத்தை திருப்பிப்பார்த்து ஒன்றும் தோற்றாதவராய், ஜேப்பில் போட்டுக்கொண்டார். மறுபடியும் எடுத்துப் பார்த்தார். “மகா-ா-ா-ஸ்ரீ இலக்ஷ்மிநரசிங்க ராவ் அவர்கள், முனிசீப், நகரம்” என்று எழுதியிருப்பதைப் படித்துப்பார்த்தார். மறுபடியும் ஜேப்பில் போட்டுக்கொண்டார். வண்டி வீடு சேரவே வண்டியை விட்டிறங்கி உள்ளே பிரவேசித்தார். டபேதார் கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு உள்ளே வந்து மேஜையின் பேரில் வைத்துவிட்டு ராயர் உத்திரவுக்கு எதிர் பார்த்துக்கொண்டு நின்றான். தாதா ஒரு அறையில் படுத்துறங்கிக்கொண்டிருந்தார். பத்மாவதி இவருடைய வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்து அவர் வந்தபின் அவருடைய பேச்சுக்களையே கவனித்துக்கொண்டிருந்தனள். சமையல்காரன் முனிசீபுக்கு வேண்டியவைகளைச் செய்து வைத்துவிட்டு பிரவடைத் திண்ணையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். ராயர் தமது உடுப்புகளைக் களைந்துவிட்டு ஒரு குடுத்துணியுடன் வெளியில் வந்தார். டபேதார், “என்ன மகராஜ் தந்தி” என்று கேட்டான்.

“உச், ஒன்றும் விசேஷமில்லை.”

"எஜமான் வந்து இன்னும் மூன்று வருஷம்கூட வாகவில்லை. அதற்குள்ளாக மாத்தமாட்டாங்கோ, பிரமோஷனுகத்தானிருக்க வேண்டும் மஹாராஜ்."

"(ராயர் சிரித்துக்கொண்டு) நல்லது, நீ சாயந்திரம் இங்கே வா. துரைக்கு ஒரு கடிதம் கொடுக்கிறேன்."

"நல்லது மஹாராஜ். சாப்சலாம்."

டபேதார் போனபிறகு ராயர் இரண்டாங்கட்டுக்குப்போய் பத்மாவதி தனித்திருப்பதைக் கண்டு கேட்கிறார்.

"பத்மாவதி நீ இடைப்பகல் ஏதாவது சாப்பிட்டாயா?"

(சற்றுத் தாமதத்ததின்பேரில்) "இல்லை?"

"மணி மூன்றாய்விட்டதே, என் இன்னும் சாப்பிடவில்லை."

"நீங்கள் சாப்பிடவில்லையே."

"ஆனால் எனக்குக் கொடுத்துவிட்டு நீ சாப்பிடுகிறாயா, நல்லது, இலைபோடு, எடுத்துவை; டீயையும் கொண்டுவா."

ராயர் கால் கை கழுவிக்கொண்டு வந்து உட்காரவே பத்மாவதி ஒரு இலையில் நாலைந்து பாண்லிதோசைகளை வைத்துக் கொண்டு வந்து அவர் சமீபத்தில் வைத்து, டீசெய்துவைத்திருந்த கூஜா செம்பையும் அவர் பக்கத்தில் வைத்துவிட்டு கதவினோரமாக சற்றுவிலகி நின்றாள்.

ராயர் "பிரவடைபுறத்தில் யார்,? என்ன சப்தம்?"

"ஒருவருமில்லை."

"இன்று எழுந்தவுடன் உன் முகத்தில் விழித்தேன். உன்னுடைய கவனமே மேலிட்டு யாதொரு வேலையும் செய்யச் சித்தமில்லாதவனாய், இன்றைய பலனைப்பார்த்துக்கொண்டு, விவாகத்திற்கு உறுதிப்படுத்தலாமென்று நினைத்தேன். மூன்று மணிவரையில் என் மனம் நிர்மலமாகவேயிருந்தது. பிறகு ஒரு தந்தி கிடைத்தபடியால், வயது சென்றதகப்பனோ, தாயோ காலஞ்சென்றிருக்க வேண்டுமெனக்கருதி வந்ததந்தியை உடைக்க மனம் வாாமல் வைத்திருக்கின்றேன். நான் நினைக்கிறபடி தாயோ, தகப்பனோ மாணமடைந்திருந்தால் ஜட்ஜியிடம் சென்று கல்யாணத்திற்காகக் கேட்டுபெற்றுக்கொண்டாஜாவை கர்மாந்தரங்கள் செய்ய உபயோகப்படுத்த நேருமே என்ற விசாரமொருபக்கம்: உன்னை விவாகம்

செய்துகொள்ளவேண்டுமென்று நினைத்த தினத்திலேயே இந்த சமாசாரம் எனக்குக் கிடைத்திருப்பதைப் பார்க்க, விவாகம் செய்த பிறகு என்ன தீங்குகள் ஸம்பவிக்குமோ என்ற வியாகூலம் மற்றொரு பக்கம்; ஆகவே தேள்கொட்டிய திருடன்போல் யாதும்தோற்ரு மல் மயங்குகின்றேன்."

பத்மாவதி (சற்று தயங்கி, தனது இயல்பான இனிமைக் குரலால்) "வந்த தந்தியை உடைத்துப் பாராமலிருப்பதால் பிரயோ ஜனமென்ன. என்னையே தாங்கள் இன்று விழித்தவுடன் பார்த் திருக்கிறீர்களன்ரோ? இத்தினத்திலேயே நல்ல சுபசமாசாரங்களைக் காணுவிட்டாலும், கேட்காவிட்டாலும், அசுபமும் அமங்களமுமான சமாசாரமில்லாதிருக்கவேண்டாமோ? நீங்கள் நினைக்கிறபடி யாராவது இறந்து போயிருந்தால் எனது ஸம்பந்தத்தை யகற்றுவது தங்களுக்கு அஸாத்தியமோ? என்னை விவாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்ற பிடிவாதம் தங்களுக்கிருக்க நியாயமில்லையே. அப்படியிருந்தாலும், தந்தி சமாசாரத்தை வெளிப்படுத்தாமல் மனத் திலடைத்துக் காரியத்தை முடிப்பதற்கு தங்களால் முடியாதோ? இதற்காகக் கவலையேன்? தந்தி என்ரால் மரணமென்றே தான் கரு தவேண்டுமோ? தங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் யாராவது பி. ஏ., எம். ஏ., பரீக்ஷையில் தேறியிருந்தால் ஸந்தோஷமாக தந்தி கொடுப்பது ஸகஜந்தானே!"

"நீ சொல்லுகிறபடி யிருந்தாலு மிருக்கும். அதோ அந்த லாங்கோட் ஜேப்பில் தந்தியிருக்கிறது. எடுத்து வந்து உன்கை யால் உடை, பார்க்கலாம். உன்னுடைய வார்த்தையால் எனக் கும் தைரியம் வந்துவிட்டது. இதற்காகத் தான் இல்லறவாழ்க்கைக் க்கு இல்லாள் அவசியமென்று யாவரும் கருதுகிருர்கள்."

பத்மாவதி சரேலென்று போய் தந்திக் கடிதத்தை எடுத்து வந்து தன்கையால் உறையைக் கிழித்து உள்ளேயிருக்கும் கடிதத் தை எடுத்து விரித்துப் படிக்கிறவள்போல் பார்த்துவிட்டு அவர் பக் கத்தில் வைத்தாள். ராயர் சங்கதியைப்படித்துப்பார்த்து முகமம லர்ந்தவராய் (இடதுகையை துடையில் அடித்து) உனக்குப் படிக் கத் தெரியுமோ? என்றனர். "என் படிப்பு அச்சுப் புஸ்தகத்தோடு தான் நின்றிருக்கிறது. இந்தத் தந்தி சங்கதியும் என் அதிர்ஷ்ட வசத்தால் நல்லதாயிருந்து, மற்றதும் நேர்ந்தால்" கை எழுத்துப்

படிக்கக்கற்பது எனக்கு அஸாத்தியமன்றென நினைக்கின்றேன். அபாயகரமான சங்கதியொன்றுமில்லையே, அதைச் சொல்லுங்கோ." என்றனள்.

வெளியே படுத்துறங்கிக்கொண்டிருந்த தாதா மெல்ல எழுந்து உட்கார்ந்து, பத்மாவதியின் குரலைக்கவனித்து, சமையல்காரனிடம் பேசுவதாக எண்ணி, பத்து! பத்து! என்று கூவினர். உடனே பத்மாவதி பின் கட்டிலிருந்து வெளிவந்து "ஏனப்பா"! வென்றனள். தாதா, "இன்னும் அவர் கச்சேரியிலிருந்து வரவில்லையே" என்றனர். பத்மாவதி. (பின்புறத்தில் கையைக்காட்டி, அதிக மெதுவாக) "அவர் வந்து உள்ளே டீபன் சாப்பிடுகிறார்" என்றனள். தாதா, "கிருஷ்ணு, கோவிந்தா," வென்று சொல்லிக்கொண்டு எழுந்து ராயரிருக்கும் அறையில் சென்று "எனக்கு நேற்று இரவெல்லாம் தூக்கமில்லாததால் படுத்தவனுக்கு தாங்கள் வந்தது கூடத் தெரியவில்லை. நன்றாய்த் தூங்கினேன். பக்கத்தில் என்ன தந்தி கடிதம்போல் காணப்படுகிறது. எல்லாம் க்ஷேமந்தானே?"

"கேட்பானேன். எனக்குத் தங்களைப்போன்ற பெரியவாளநுக்கிரகம் பூர்ணமாயிருக்கும்பொழுது இந்தத் தந்தியை உடைக்க வெகுதூரம் யோஜித்தேன். கடைசியில் ஒரே தைரியமாய் உடைத்துப் பார்த்ததில் சந்தோஷமாகவே யிருந்தது. யாருடைய அதிர்ஷ்டத்தை யார் கண்டார்கள்?"

"சங்கதி என்ன?"

"எனக்கு இத்தனை நாளாய் சம்பளம் 300 ரூ இன்று முதல் 400 ஆயிருக்கிறது. அதுவும் தங்கள் குமாரத்தியின் பாக்கியமே. இன்றைய தினபலனைப்பார்த்துக்கொண்டு திங்கட்கிழமை புறப்பட்டு பம்பாய்க்குச் சென்று விவாகத்தை முடித்துக்கொண்டு வரலாமென்று நினைத்திருந்தேன். தெய்வச்செயலாய் அனுகூலமான பலனுகவேயிருக்கிறது. இன்று எழுந்தவுடன் தங்கள் பெண்ணின் முகத்தில் விழித்தேன். அவள் நல்ல அதிர்ஷ்டசாலி என்று தெரிந்தது. நீங்கள் எதாவது கொஞ்சம் ஆகாரம் செய்துகொள்ளலாமே. பகல் பத்து மணிக்குத்தானே போஜனம் செய்தீர்கள்."

"அதற்கென்ன? நல்லது."

தந்தி சங்கதியையறிந்தவுடன் ராயருக்குண்டான சந்தோஷத்திற்களவில்லை. பத்மாவதியின் தைரியமான வார்த்தைகளைப்

பற்றி அடிக்கடி சிந்தித்துக்கொண்டே யிருந்தார். தாதா பிரவடை யிற்செல்லவே சமையல்காரனும் திடுக்கிட்டு எழுந்து எஜமான் வந்தனரோ என்று கேட்டான். ஆம் என்று சொல்லிவிட்டுக் கிணற்றண்டை போனவர் யோஜிக்கிறார். நமது பத்து அவரிடந்தான் பேசியிருக்கவேண்டும். இவள்தா னவருக்கு டிபன் முதலியவைகள் கொடுத்திருக்கவேண்டும். சமையல்காரனே இந்நேரம் தூங்கியிருக்கிறான். அவருக்கு நம்ம பத்துமேல் அதிக பிரியம் ஜனித்துவிட்டதென்பதில் தடையில்லை. திங்கட்கிழமை புறப்பட்டு பம்பாய்க்குச் சென்று அவ்விடத்தில் வெள்ளிக்கிழமை விவாகத்தை முடிக்கவேண்டு மென்கிறார். இன்னும் இரண்டு நாளிருக்கிறது. இவ்விடத்தில் கல்யாணத்தை நடத்த அவருக்கிஷ்டமில்லாதிருப்பது நமக்கும் நல்லதே. நம்ம குமாரன் காசிக்கு, நாம் தன்மரணபுறத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்விட்டதை யாராவது தெரிவிப்பார்கள். அவன் ஒரு ஜில்லா அதிகாரியின்கீழ் டிப்டி கலெக்டரென்கிற பெரும் உத்தியோகத்தை வஹிப்பவனுனபடியால் நம்மைப்பற்றிப் பலவிடங்களுக்குக் கடிதமெழுதி விசாரிப்பான். டிப்டி கலெக்டர் காசிராவ் என்றால் யாரும் பிரீதியாய் விசாரிப்பார்களென்பதில் தடையில்லை. நாம் படாதபாடும்பட்டு சம்பாதித்து அவனைப் படிக்கவைத்ததை மறந்துவிடப்பட்டவனுமல்ல. அதிக மானியான படியால் நம்முடைய கருத்தையும் நாமிவ்விடம் வந்திருப்பதையும் தெரிந்தால் பிராணத்தியாகம் செய்துகொள்ள அஞ்சான். புனர்விவாகத்தை, படித்தவர்கள் பலரும் ஒப்புக்கொண்டு அது விஷயமாய் தர்க்கம் செய்யப்பட்டவர்களை வார்த்தையில் மடக்கியடித்தாலும், பட்டதாரிகளான ஒருவராவது ஒரு இளம் விதவையை மணந்துகொள்ள இசைகிறதில்லை. திவான் முதலிய பெரும் பதவிகளிலிருந்து விதவாவிவாஹம் எவ்வளவும் தகுந்ததென்று கூக்குரலிடும் மேதாவிகளும் தமது குமாரத்திகளாகிய இளம்விதவைகளுக்கு மனந்துணிந்து புனர்விவாகஞ் செய்திலர். நமக்கு வந்த தைரியமோ அவர்களுடையதைவிட அதிகமாகவே இருக்கிறது. துணிந்த பின், பின்வாங்குவது சரியல்ல. பலர் நமது செய்கையை இகழ்ந்தாலும் சிலரேனும் புகழ்வாரென்பதில் தடையில்லை. வந்தது வரட்டும்.'' என்று நினைத்துக்கொண்டே பிரவிடைக்குச் சென்று காரியங்களைத் தீர்த்துக்கொண்டு உள்ளே வந்தார்.

இரண்டு தினமும் இன்னவிதமாய் விவாகத்தை நடத்தவேண்டு மென்பதைப் பற்றி யோஜனை நடந்தது. முனிசிப் ராயருக்கு ரஜா உத்திரவும் கிடைத்து பதலியும் வந்து சார்ஜ் ஒப்பிவைக்கப் பட்டது. முனிசிப் தன் பந்துக்களொருவருக்கும் கடிதம் எழுத வில்லை. பம்பாய் சென்ற பின்பு யோஜித்துக்கொள்ளலாமென்றிருந்துவிட்டார். திங்கட்கிழமை சாயந்திரம் புறப்படுகிற ரயில் வண்டியில் சங்கரராவ் தாதாவும், அவர் குமாரத்தி பத்மாவதியும், முனிசிப் ராயரும் புறப்பட்டு வழியில் எங்கும் தங்காமல் புதன்கிழமை காலையில் பம்பாய் போய்ச்சேர்ந்தார்கள். ராயரை யழைத்துக் கொண்டு போகும்படி சிலர் ஸ்டேஷன் மேடைக்கு வந்திருந்தார்கள். இவர்கள் இரண்டு கோச்வண்டிகளில் ஏறிக்கொண்டுபோய் ஒரு பெரிய மெத்தை வீட்டிலிறங்கினர்கள். ராயர் ஒவ்வொருவரிடத்திலும் ஆங்கிலத்திலேயே பேசியபடியாலும், அவ்விடத்திய பாஷை நமது தாதாவிற்கும் பத்மாவதிக்கும் தெரியாததாலும், இன்ன சங்கதி இன்னத்திற்காகப் பேசப்படுகிறதென்பது இவர்களிருவருக்கும் தெரியவில்லை. வியாழக்கிழமை விவாகத்திற்கு வேண்டிய பல சாமான்கள் வந்து சேர்ந்தன. தென்தேச வைதிகர்கள் போன்ற இரண்டு குஜராத்தி பிராமணர்களும் மற்றும் சில உத்தியோகஸ்தர்களும் வரவும் போகவுமிருந்தார்கள். இரண்டு மகராஷ்டிர பிராமணர்கள் சமையலுக்கு எற்படுத்தப்பட்டார்கள். அவர்களில் ஒருவனுக்குக் கொஞ்சம் தமிழ்தெரியும். "நிமிக்கு சாப்படரீமா," "எலெ இடட்டுமா?" "நிங்களுக்கு பசிக்கிருங்களோ இல்லேமோ?" என்று பேசுவான். வியாழக்கிழமைதினமே இரண்டு வேளையும் பலர் போஜனஞ்செய்து போனர்கள். ராயர் ஒவ்வொருவருக்கும் தகுந்த மாதிரி உபசாரங்கள் செய்து ஸல்லாபமாகப் பேசிக்கொண்டிருந்தனர். வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு விவாகச்சடங்குகள் தொடங்கப்பட்டு பத்து மணிக்குள்ளாக வெகு நிஷ்கரிஷையாகவும், திட்டமாகவும், ஆசனையாகவும் பெண்ணின் கழுத்தில் திருமங்கல்யம் தரிக்கப்பட்டது. பிறகு செய்யப்படுவனவும் செய்யப்பட்டன. மந்திர கோஷம் உபாயமாக விருந்தாலும் பாண்டு என்னும் வாத்திய கோஷம் இருபத்திரண்டு பேரால் வாசிக்கப்பட்டு விவாகத்தை அலங்கரித்தது. வந்தவர்களுக்கெல்லாம் பாக்குப்பொடியோடு கூடிய வெற்றிலைக்கட்டும், சந்தனமும், புஷ்ப

மும் கற்கண்டும் கொடுக்கப்பட்டன. இரவில் சுமார் முப்பத்தைந்துபேர் வரையில் போஜனஞ்செய்தார்கள். போஜனத்தில் அனேகமாய் மிட்டாய், பழம் முதலியவைகளே அதிகம். மறுநாள் விவாகப்பூர்த்தி என்பதாகச் சில சடங்குகள் செய்யப்பட்டு கங்கண விசர்ஜ்ஜனஞ்செய்யப்பட்டது. ராயர் விவாக சமயத்திற்கு முந்தியே பெண்ணுக்கு சுமார் மூவாயிரம் பெறும்படியான பல நகைகளைக்கொடுத்து அணியச்செய்ததுமன்றி விவாக சமையத்தில் ஒவ்வொன்று நூறு நூற்றைம்பது பெறும்படியான நான்கு புடவைகளையும் உபயோகப்படுத்தினர்.

பத்மாவதிக்குண்டான இயற்கை யழகோடு செயற்கையழகும் உச்சிதமாய் செய்யப்பட்டபடியால் ராயருக்கு அவளுடைய பேரிலிருந்த அன்பும் ஆர்வமும் அதிகப்பட்டு, மணவறையிலிருக்கும் பொழுதே அடிக்கடி யவளிடம் பேசுவார். பத்மாவதியும் அதற்குத்தக்கபடி இனிமையாய்ப் பதிலளிப்பாள். இவர்களுடைய பேச்சு இன்னதென்றறியாத மற்றவர்கள் பேந்தப் பேந்த விழிப்பார்கள். தம் குமாரியிடத்தில் ராயர் அத்தியந்த பிரியமா யிருப்பதையும், அதிகநாள் பழக்கமுள்ளவர்கள் போல் அடிக்கடி பேசுவதையும் கண்ட தாதா சந்தோஷ சாகரத்தில் முழுகிக் கிடந்தார் என்று கூறவும் வேண்டுமோ? ஞாயிற்றுக்கிழமை முதல் யாதொரு ஆடம்பரமான நடவடிக்கையுமில்லை. பம்பாய் பட்டணத்திலுள்ள பற்பல இடங்களைப்போய்பார்த்து வருவதும், சமையல்காரன் செய்து வைப்பதைச் சாப்பிடுவதும் உறங்குவதுமாக எட்டுநாள் கழிந்தன. மறுநாள் புறப்பட்டு இரண்டு இரவும் இரண்டு பகலும் வண்டியிலேயே போஜனம் முதலியவைகளைச் செய்துகொண்டு நகரம் வந்து சேர்ந்தார்கள். ராயரை மரியாதை செய்து அழைத்துக்கொண்டு போக பலர் ஸ்டேஷனுக்கு வந்ததுமன்றி வீட்டுக்கும் வந்திருந்தார்கள்; யாவருக்கும் தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு, சந்தனம் முதலியவைகள் கொடுக்கப்பட்டன. ராயர் இரண்டு நாளைக்குப் பிறகு தமது வேலையை சார்ஜ் பெற்றுக்கொண்டு வேலைபார்த்து வந்தார். தாதாவும் யாதொரு கவலையுமின்றிச் சுகமாக காலங்கழித்து வந்தனர்.

இவர்கள் தன்மரண புரத்திலிருந்து வந்த பிறகு இவர்களுடைய பந்துக்கள், தாதாவின் குமாரரும் வஞ்சிகுளம் டிப்டிகலெ

க்டருமான காசிராவுக்கு இவர்களின் (முன்னறிவிக்கப்படாத) பிரிவைப் பற்றி எழுதினார்கள். அவரும் பற்பல விடங்களிலுள்ள தமது பந்துக்களை உசாவினர். யாதொன்றும் வெளிப்படவில்லை. கடைசியாக இவர்கள் காசியாத்திரை தான் போயிருக்கவேண்டுமென்று தீர்மானித்தார். தன்மரண புரத்திலிருந்த தமது சொத்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு பொறுப்புள்ள ஆசாமியை ஏற்படுத்தி காரியங்களை நடத்திவந்தார். நகரத்தில் ராயர் தமது மனைவியுடன் அதிக அன்பும் பக்ஷமுமாய் நடந்து வந்ததன்றி தாதா மாமனரையும் சொந்தப் பிதாவாக நினைத்து வந்தனர். தாதாவே வீட்டின் சகல காரியங்களையும் பார்த்துவந்ததன்றி முனிசீப் ராயர் கச்சேரிக்குப் போகும்பொழுது தானும் வண்டியிலேறிக்கொண்டுபோய் அவர் திரும்பி வருகிறவரையில் கோர்ட்டிலுள்ள பல குமஸ்தாக்கள், வக்கீல்கள் முதலியவர்களிடத்தில் பேசிக்கொண்டிருப்பார். முனிசீப் அவர்களின் மாமனாராதலால் பல வக்கீல்கள் தங்கள் தங்களுடைய வியாஜ்ஜிய வியவகாரங்களைப் பற்றியும் கூறி, "தங்கள் விசுவாசமுண்டானல் என் கக்ஷி ஜெயிக்கு" மென்றும் சொல்லுவார்கள். இவரும் சமயம் நேரும்போது தமது மாப்பிளையிடம் சில வியாஜ்ஜியங்களைப் பற்றி தமது கருத்தைத் தெரிவிப்பார். ராயரும் இவரது அபிப்பிராயத்தை முற்றும் அலக்ஷியம் செய்யமாட்டார்.

இப்படியிருக்க, ஒருநாள் ராயரும் மாமனருமாக குதிரைவண்டியில் கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, ஒரு யாசகப் பிராமணன், வண்டியில் முனிசீப்புக்கு எதிராக உட்கார்ந்துகொண்டு செல்லும் சங்கரராவ் என்கிற தாதாவைக்கண்டு வண்டியைத் தொடர்ந்து ஓடிவந்து, "சங்கரா! இங்கேயா இருக்கிறாய்? காசிக்குப் போகவில்லையா?" என்று கேட்டு, மறுபடியும் ஏதோ பிரஸ்தாபஞ் செய்யத்தொடங்கவே, "சீ, சீ, நாயே! ஓடிப்போ, கழுதைப்பயலே" என்று அவன் மார்பைப்பிடித்துத் தள்ளினார். அவன், "உன்னைவிட்டேனு" என்று சொல்லிக்கொண்டு போய்விட்டான். ராயர் தாதாவைப் பார்த்து "யாரது?" என்று கேட்க, தாதா! "யாரோ பயித்தியக்காரன்போல் தோற்றுகிறது, என் பெயரை மட்டும் எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறான். பழகினவனயிருந்தால் இந்த மாதிரியா மாட்டுக்காரனை யழைப்பதுபோலக் கூப்பிட்டுக்கொண்டு வண்டியைத் தொடர்வான்? தாங்களிருக்கிறது கூட

அவன் கண்ணுக்குத் தோற்றப்படவில்லை பாருங்கள்; முட்டாள், வீட்டண்டை வந்தால் அண்டவிட்டாமல் விரட்டியடிக்கவேண்டும்" என்றனர். மறுநாட்காலை தாதா கடைத்தெருவிற்கு எதோ காரியமாய்ச் சென்றிருந்தார். இந்த சமயத்தில் நாராயணசார் என்ற யாசகன் முனிசிப் வீட்டுக்கு வந்தான்.

"யாரையா?"

"நமஸ்காரம், நானிருப்பது தன்மரணபுரத்தை யடுத்த கொல்லன் குடி, குமாரனுக்கு வயது 12-க்கு மேலாய்விட்டது. உபநயனமாகவேண்டும், தங்களைப்போன்ற பிரபுக்களிடம் எதாவது கிடைக்கலாமென்று வந்தேன்; தாங்கள் அதிக தர்மகுணமுள்ளவர்களென்று வெகுதூரத்திலேயே கேள்விப்பட்டேன்."

"நீர்தாமோ நேற்று நமது வண்டியைத்தொடர்ந்தோடி வந்து சங்கரா! சங்கரா! என்று கூவினது?"

(அதிக பயபக்தியுடன் வாயின்பேரில் கையை வைத்துக்கொண்டு ஈனசுரத்துடன்) தங்களுடைய வண்டி என்று தெரியாது. தன்மரணபுரம் சங்கரராவைக் கண்டேன். ரொம்ப நாளத்திய விசுவாசம், மன்னிக்கவேண்டும்."

"நல்லது, அவருக்கு எத்தனை பிள்ளைகள்."

"அவருக்கு ஒரே குமாரன், காசிராவ், வஞ்சிகுளம் டிப்டி கலெக்டர். நல்ல புத்திசாலி அவனைப்படிப்பிக்க அதிக கஷ்டப்பட்டார். இவனைத்தவிர ஒரு பெண்ணுண்டு. அதையும் ஒரு லக்ஷப்பிரபுவின் குமாரனுக்குத்தான் கொடுத்திருந்தது."

"பிறகு."

"அந்தப் பிள்ளையாண்டான் அகால மரணமடைந்து விட்டான். பெண் அதிக சுந்தரமாயிருக்கும்."

"(சற்று நிதானித்து) அந்தப்பெண் பெயர் தெரியுமா உமக்கு"?

"அந்தப்பெண் பெயர் (யோஜித்து) பத்மாவதி, பத்து என்றுதான் கூப்பிடுவார்கள்."

"ஐயா இந்தாரும் எடுத்துக்கொண்டு போம்." என்பதாக ஒரு கடிதத்தில் நான்கணவை சுற்றி கொடுத்தார்; யாசகனும் பெற்றுக்கொண்டு வெளியில் வருகையில் நமது தாதாவும் கடைத்தெருவிலி

ருந்து திரும்பி வந்து எதிர்ப்பட்டார். இவரைக் கண்டதும் தாதாவிற்கு உடல் நடுக்கமெடுத்தது. "எதடா! இவன் நமது குட்டை வெளிப்படுத்தி யிருப்பானே. ராயர் கேட்டால் என்னவிதமாய்ச் சொல்லித் தப்பிப்பது என்று நினைத்துக்கொண்டே சரேலென்றுள்ளே நுழைந்தார். நாராயணச்சார், "என்னை தங்களுக்கு இன்னாரென்று தெரியவில்லையோ, நான்தான் நாராயணச்சார். இவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடக் காரணமில்லையே! சௌக்கியந்தானே" என்றனர்.

"தாதா.—நீ யார்? என்ன பிதற்றுகிறாய்? நேற்றும் இம்மாதிரி பேசினாய். இனி இந்தமாதிரி எதாவது பேசினாயானால் தகுந்தபடி பிரகாரம் கிடைக்கும், ஓடிப்போ."

"நல்லது; நீ செய்திருக்கிற புரட்டை இவ்விடத்தில் ஒருவரும் அறியார்கள். வீடுவீடாகச் சொல்லி உன் மானத்தை வாங்கிவிடுகிறேன். பொறு." என்று சொல்லிவிட்டு போய்விட்டான் யாசகன். தாதாவும் உள்ளே சென்றார். முனிசீப் ருத்ராகாரமாய் உட்கார்ந்துகொண்டு தாதாவையுற்றுப் பார்த்தார். தாதா நேராகப் பின் கட்டுக்குச் சென்று தன் குமாரத்தியைக் கண்டார். அவள் யாசகன் வந்ததையும், தங்களைப்பற்றிக் கூறியதையும் விவரமாய் சொன்னாள். "இனி எனக்கு யாதொன்றும் தோற்றப்படவில்லை. இப்பொழுதே நான் புறப்பட்டு தலமங்கலம் போய்விடுகிறேன். நீ தகுந்தமாதிரியாக நடந்துகொள். என் பேரில்தான் அவருக்கு அதிக வருத்தமிருக்கும். உன் பேரில் அவருக்கு கோபமுண்டாக நியாயமில்லை. இக்காலத்தில் இங்கிலீஷ் படித்தவர்களில் எவ்வளவோ பேர் விதவாவிவாகம் செய்துகொள்ளுகிறார்கள். அவருக்கு இது தெரியாததல்ல. நான் தாமதிப்பது உசிதமாகத் தோற்றவில்லை. இதோ என்னுடைய சோமன்களை யெடுத்துக்கொண்டேன். தைரியமாயிரு. தீராத கஷ்டமாயிருந்தால் எனக்கு கடிதம் எழுதியனுப்பு," என்று சொல்லிவிட்டு வெளியில் எட்டிப் பார்த்தார். முனிசீப் ஏதோ யோசனையினால் தமது படுக்கையறைக்குள் சென்று படுத்துக்கொண்டிருந்தார். பத்மாவதி அழ ஆரம்பித்தாள். "நீ அழாதே, தைரியமாயிரு. உனக்கு யாதொரு தீங்கும் வராது. நான் போய்வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே நடந்துவிட்டார். பத்மாவதி தொடர்ந்து கொண்டு

தெருவு வாசற்படி வரையில் சென்று தாதாவுக்கு ஜாடை செய்தாள். அவரும் காலடி சப்தமுண்டாகாமல் திரும்பி வந்தனர். "நீர் இந்த வூரைவிட்டு இன்னும் கொஞ்சநாள் வரையில் போகவேண்டாம். உருவமாறி இரும். நடுப்பகல் வேளைகளில் இப்படி வந்துவிட்டுப் போம். நடக்கும் சங்கதிகளைத் தெரிக்விகிறேன்" என்று பத்மாவதி கூறினள். அப்படியே நல்லது என்று சொல்லி விட்டு வேகமாய் நடந்துவிட்டார் தாதா.

பத்மாவதிக்கு மனத்தில் பலவித எண்ணங்கள் உதித்து வியாகூலத்தையுண்டாக்கினவென்றாலும், தனது கணவரிடத்தில் அதை காட்டிக் கொள்ளப்பிரிய மில்லாதவளாய், சற்று நேரம் பொறுத்து சமையலறையில் சென்றுபார்த்து சமையல் தயாராயிருப்பதையறிந்து, தனது கணவரிருக்கும் அறைக்குள் சென்று, "மணி ஒன்பதாய்விட்டதே, ஸ்நானஞ்செய்ய வேண்டாமோ?" என்றனள்.

"அடிபத்மாவதி! நீ எப்பொழுதும் உண்மையையே பேசுவாய். என்று நம்புகிறேன். உன்னைச் சில கேள்விகள் கேட்கிறேன் சரியாய் பதில் கூறவேண்டும்."

"நல்லது, என் வார்த்தையில் சந்தேகம் கொள்ளாமல் கேட்டு உண்மையைத் தெரிந்துக்கொள்ளப் பிரியப்படுகிறீரல்லவா? என்னை கைவிடுவதில்லை என்று உறுதியாக கூற உம்மால் முடியுமா?"

"எழுந்து உட்கார்ந்துக்கொண்டு, உன் தகப்பனர் எங்கே?"

"எங்கோ வெளியே போனர்."

"இப்பொழுதுதானே வந்தார், மறுபடியும் எங்கே போனர்? நல்லது. உனக்கு முந்தியே ஒரு தடவை கல்யாணம் நடந்ததுண்டா? இல்லையா?"

"அந்த சங்கதியை தங்களுக்கு என் தகப்பனர் சொல்லியிருந்தாலுமிருக்கலாம். நீங்கள் இப்பொழுது கேட்கிறதைப் பார்த்தால் அவர் அதை யொளித்திருக்க வேண்டுமென்று தோற்றுகிறது. ஆயினும் தாங்கள் விதவாவிவாகத்தில் விரோதமான அபிப்பிராயமுள்ளவரல்லவே! அப்படியிருக்க வியாகூலப் படுவானேன்."

"நீ யொருவிதமாய் சங்கதியை வெளிப்படுத்தினய். எனக்கு அவ்விஷயத்தில் பூரண சம்மதமிருந்தாலும் நானே அதற்கு முன்னி

ற்கக் கருதினவனன்று. என் விதியை நானே நொந்துகொள்ள நேரிட்டது. இனி நான் ஊர் அபவாதத்திற்குள்ளாக வேண்டும். சங்கதி வெளிப்படுவதற்கு முன், நீ வீட்டைவிட்டு வெளியே போய் விடு. அதுவே மரியாதை. இல்லாவிட்டால் நான் உன் தகப்பனர் மேல் வழக்குத்தொடர நேரும். அவைகள் பார்ப்பவர்களுக்கு அதிக ஆபாசமாகவிருக்கும். இன்று பகல் முழுவதும் நீ இவ்விட த்திலிருந்துவிட்டு இருட்டுமுன் வெளிக்கிளம்பி விடவேண்டும். நீ என்ன சொன்னபோதிலும் நான் அவைகளை கவனிக்கமாட்டேன். நான் இங்ஙனம் சீறுவதால் எனக்கு உன்பேரில் பிரியமில்லையெ ன்று நினைக்காதே. நீ அதிர்ஷ்டசாலி என்று எண்ணினேன், அஃதிருந்துபயோகமென்ன? அபவாதத்திற்குள்ளாக வேண்டுமே" என்று சொல்லிவிட்டு எழுந்து தம் வேலையை முடித்துக்கொண்டு கச்சேரிக்குச் சென்றார். பத்மாவதி.—"ஆ! இது என்ன கொடு மை. இனி யான் செய்வதென்ன? முந்திய கல்யாணத்தில் கண வனை இழந்தோம். பிந்தியதில் புருஷனால் தள்ளப்படுகிறோம். நம க்கு புனர்விவாகம் நடந்துவிட்டபடியால் விதவா ஜென்மம் போய் விட்டதென்றே எண்ணலாம்; இவரை எவ்விதத்தினாலாவது சொல் லி வசப்படுத்தவோ நம்மால் இயலாது, மணி சுமார் நான்கிருக்க லாம். நமக்கிட்டிருக்கிற நகை நட்டுகளுடன் நடந்துவிட்டால் பல விதமான கஷ்டங்கள் நேரும். ஆகையால் நகைகள் யாவற்றையும் வாங்கி யவர் வருவதற்கு முந்தியே தயார் செய்து வைத்துக்கொண் டிருந்து, வந்தவுடன் கொடுத்துவிட்டுப் போகவேண்டியதுதான். நமது தகப்பன் நாம் கேட்டுக்கொண்டபடி இவ்விடத்திலேயே இரு ந்தால் பாதகமில்லை. இல்லாவிட்டால் நம்ம கதி எப்படியாமோ. அறியவல்லார் யார்?"

ஐந்து மணிக்கே முனிசீப் கோர்ட்டிலிருந்து வந்துவிட்டார். இவருக்கு இதுவே விசாரமானபடியால் கோர்ட்டில் வேறுவேலை செய்யமுடியவில்லை. பத்மாவதியவர் வந்தவுடன் தன்னுடைய நகை களை எண்ணிக்கொடுத்து, "நான் நிரபராதி, என்னை வைத்துக்கொ ண்டிருப்பதில் உமக்கு யாதொரு அபவாதமும் வாராது; நீர் ஒருவரு டைய புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் கவலைப்படவேண்டிய ஸ்திதி யிலில்லை என்பது உமக்குத் தெரியாததன்று; என்னை எப்பொழுது தொட்டுத் தாலிகட்டிவிட்டீரோ அப்பொழுதே, என்னை காப்பா

ற்ற வேண்டியவராய் விட்டீர்; உம்முடைய கடமையை நீர் தவறிவி ட்டாலும் நான் எனது கடமையைச் செய்தே தீருவேன். அதாவது உமது ஆக்ஞையை செய்யப் பின் வாங்கேன். உமது கட்டளை க்குக் கீழ்ப்படிவதே எனக்கு நன்மை யளிக்குமென்பதை யொரு பொழுதும் மறக்கமாட்டேன். வெளியில் சென்ற தந்தை திரும்பி வாராததால் கைவிட்டாரென்று கருதினேன்" என்றனள்.

(முனிசீப் தமது கண்களில் நீர்ததும்ப துக்கம் தொண்டியில டைக்க) பத்மாவதி கையில் பத்து ரூபாய்களைக் கொடுத்து இர ண்டு புடவைகளையும் எடுத்துக் கொள்ளச் சொல்லி "செல்லலாம்" என்று சொல்லிவிட்டார். பத்மாவதி தனது கணவரை இரண்டு மூன்று தடவை திரும்பிப்பார்த்து யாதொரு பிரயோஜனமுமின்றி அஸ்தமன வேளையில் தெருவின் நெடுகச் சென்றாள். தகப்பனை எங்காவது சந்திப்போம் என்ற நம்பிக்கையால் இரவு எட்டுமணி வரை சிற்சில ஓட்டல்களிலும் சத்திரங்களிலும் நுழைந்து வெளிப் பட்டாள். கடைசியில் ஒரு வீட்டுத்தெருத் திண்ணையிலுட்கார்ந்து "என் தலைவிதியும் இங்ஙனமா" வென்று யோஜிக்கிறாள். இது பெண்கள் கற்பிக்கப்படும் காலேஜ் தலைமை உபாத்தியம்மையின் வீடு.

பகலில் வெளிப்பட்ட தாதா தமக்கு எவ்வித தொந்தரவுகள் நேருமோவெனப் பயந்து உடனே ரயிலேறி மறுநாள் அதிகாலை தல மங்கலம் என்ற ஊர்போய்ச் சேர்ந்தார். இவ்விடத்தில் இவரைத் தெரிந்த ஒருவரிருந்தபடியால் அவரிடத்தில் யாதொரு சங்கதிகளை யும் தெரிவிக்காமல் சிறிதுகாலமிருந்து தன் மரணபுரஞ் சென்று தம் குமாரி இறந்துபோய் விட்டதாகக் கூறி, தம் குமாரனுக்கு சங்கதிகளைத் தெரிவிக்காமலே காசியாத்திரை சென்றுவிட்டனர்.

பத்மாவதியின் புனர்விவாக சங்கதியை யாம் தீர்த்துவிட்டப டியால் இனி கதையை வளர்த்துவது சிலருக்கு இஷ்டமில்லாதிரு க்குமாயினும் பலருக்குப் பத்மாவதியின் பின் கதியை யறிய ஆவலிரு ப்பது சகஜமன்றோ. ஆதலால் ஒருவாறு கூறுவோம்.

முனிசீப் இனி விவாகம் செய்துகொள்வதில்லை என்று தீர்மா னித்து அந்த ஊரிலிருக்க இஷ்டப்படாதவராய் குந்தாபுரத்திற்கு மாற்றிக்கொண்டு போய் அவ்விடத்தில் நான்கு வருஷகாலம் முனி

சிப்பாகவிருந்து மாதம் 600 ரூபாய் சம்பளத்தில் சப்ஜட்ஜாக ராஜ வேலூருக்கு மாற்றப்பட்டுப் போய்ச்சேர்ந்தார். இந்த ஊர் இவருடைய தேகஸ்திதிக்கு ஒத்திருந்தபடியால் ஒரு பெரிய வீட்டை விலைக்கு வாங்கினதன்றி, பிரித்து மெத்தை வீடாகக் கட்டி, வீட்டைச்சுற்றி பலவித புஷ்பச்செடிகளையும் பழமரங்களையும் வைத்துப் பயிர் செய்து, யாதொரு கவலையுமின்றிக் காலங்கழித்துக் கொண்டிருந்தார். இவர் அடிக்கடி அப்பட்டணத்திலுள்ள முனிசிபல் வைத்தியசாலைக்குப்போய் வருவதுண்டு. அந்த வைத்தியசாலையில் ஒரு பெண் அபாதிகிரி இருந்தனள். அவளிடத்தில் நமது லக்ஷ்மி நரசிங்கராவ் ஏதாவது மருந்துகள் வாங்கிக்கொண்டு வருவதும், அவள் அடிக்கடி நமது ராயர் வண்டியிலேறிக்கொண்டு இவர் வீட்டுக்கு வந்துபோவதும் சாதாரணமாயிருந்தது. ஒருநாள் அந்த அபாதிகிரியானவள் தனது அறையில் சுமார் 35 ரூபாய் பெறுமான காஞ்சீபுரம் சேலையும், உடம்பில் சீனுபட்டு அங்கியும், கையில் பொன் காப்பு கொலுசும், கழுத்தில் வயிரக்கற்கள் பதித்த பதக்கத்தோடு கூடிய கடியார அட்டிகையும் முத்துமாலையும், காதில் வயிரக்கல் கம்மலும் விளங்க அதிக சுந்தரமாய் வைத்தியசாலையில் நின்று கொண்டிருக்கையில் நமது ராயரும் வைத்தியசாலையில் பிரவேசித்தார். லேடி அபாதிகிரி சப்ஜட்ஜ் ராயரை மரியாதையுடன் உபசரித்து நாற்காலியில் உட்காரவைத்து சமீபத்தில் ஏதோ விஷயமாய் ஆங்கில பாஷையில் பேசிக்கொண்டே நின்றிருந்தனள். ராயர் பேச்சில் சலிப்பில்லாதவராய் மேலும் மேலும் பல சங்கதிகளைப் பற்றி பேசிக்கொண்டே யிருந்தார். இந்த லேடி அபாதிகிரி அந்த பட்டணத்தில் அதித விசுவாசத்துடன் பலராலும் மதிக்கப்பட்டதற்கு அவளுடைய கற்பும் ஒழுக்கமுமே காரணமாயிருந்தது. ஆனபடியால் ராயரிடம் இந்த சுந்தரி பேசிக்கொண்டிருப்பதில் யாருக்கும் சற்றேனும் சந்தேகமுண்டாகவில்லை. ஆனல் சற்று நேரத்திற்குள் அந்த லேடி அபாதிகிரிக்கு இன்னது நேர்ந்ததென்று ஒருவரும் கூறமுடியாதபடி நாற்காலியிலுட்கார்ந்திருந்த ராயர்பேரில் திடீரென்று விழுந்து மூர்ச்சையுற்றதை வைத்தியசாலையிலிருந்த பலரும் கண்டார்கள். யாவரும் திகிலடைந்து அந்த ஸ்திரீயை எடுத்து உட்காரவைத்துத் தெளிவுண்டாகும்படி சில மருந்துகளையும்

கொடுத்தனர். சப்ஜட்ஜ் ராயர் இன்னது செய்கிறதென்று தோற்ருதவராய்ப் பிரமை பிடித்தவர்போல் திகைத்து நின்றனர்.

அபாதிகிரியாகிய ஸ்திரீ மூர்ச்சைதெளிந்து எழுந்தவுடன் சப்ஜட்ஜ் எங்கே என்று கேட்டனள். சப்ஜட்ஜியை ஒருவர் அழைக்க அவரும் அந்தப் பெண்மணி படுத்துக் கொண்டிருக்கும் அறைக்குள் சென்று "உனது மயக்கத்திற்குக் காரணமென்ன" வென்று கேட்டனர். லேடி அபாதிகிரி கண்களில் நீர்ததும்ப, தொண்டையில் துக்கமடைக்க "உம்மை யான் இன்னுரென்று அறிந்து கொண்டதே எனது மூர்ச்சைக்குக் காரணம்" என்றனள்.

ராயரும் அந்த லேடியை இன்னுரென்று தெரிந்துகொண்டு அப்பெண்மணியைத் தம் வீட்டுக்கு வரும்படி வருந்திக் கேட்டனர். அப்பொழுது அம்மாது ராயரைப்பார்த்து, "நீர் இப்பொழுது என்னை உமது வீட்டிற்கு அழைப்பது வீண் அபவாதத்திற்கு இடமேயன்றி மற்றப்படியன்று. அப்படி என்னை அழைக்கும்படி செய்தது என்னுடைய யௌவன வயதே. என்னிடத்தில் நீர் இந்த ஒன்பது மாதகாலமாய் பேசிப்பழகி வந்தும் உமக்கு மனக்கலக்கத்தை யுண்டாக்காமலிருந்தது எனது கற்பே. காமமென்பதற்கு கண்ணில்லையென்று கூறுவது பொய்யோ? இப்பொழுது நீர் எனது யௌவன பருவத்தில் புத்தியை செலுத்திவிட்டபடியால் என்னிடத்துள்ள பூர்வகுற்றங்களைக் கவனிக்க மாட்டீரென்பது திண்ணமாயினும், எவ்வித காரணத்தினுலாவது மறுபடியும், என்னிடத்திலுள்ள பூர்வகுற்றத்திற்காகக் கைவிடமாட்டேனென்று நீர் உறுதி கூறினுலன்றி உமது விருப்பத்தின்படி நடக்கச் சம்மதியேன்" என்றனள்.

சப்ஜட்ஜ் சற்றுத் தர்மதித்து "இனி என் பிராணனுள்ள வரையில் உன்னைக் கைவிடேன். என்னை நம்பு" என்று கூறினர்.

மிஸ் பத்மா அதற்கு மௌனமாயிருப்பதைக் கண்ட ராயர் உடனே அவளைத் தன் கைசேர்டுத்துக் கூட்டிக்கொண்டு வண்டியேறி வீட்டுக்குச் சென்ருர். பிறகு மிஸ் பத்மா அவர் வீட்டிலேயே இருந்து கொண்டு வேலை பார்த்து வந்தனள்.

ஊரில் சப்ஜட்ஜ் லக்ஷ்மி நாரஸிங்கராவ் அபாதிகிரி மிஸ் பத்மாவைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருக்கிருரென்று பிரஸ்தாபமுண்டாய் விட்டது. லேடி அபாதிகிரியைப் பற்றிய சமாசா

ரம் டாக்டருக்கு எட்டிற்று. டாக்டர் லேடி அபாதிகிரியை ஒரு நாள் விசாரித்தார்.

"மிஸ் பத்மா உன்னுடைய நடத்தையில் சந்தேகிக்கிறேன்."

"ஆம், சந்தேகத்திற்கு இடமில்லாமற் போகவில்லை. ஆனால் என் சொந்த புருஷன்தான் அவரென்று உங்களுக்கு நான் சொன்னாலொழியத் தங்களுக்குச் சந்தேகம் தீர நியாயமில்லையே."

"சப்ஜட்ஜ் லக்ஷ்மி நரசிங்கராவை நீ உன் சொந்த புருஷனென்பது எப்படி?"

"என்னை அவர் நகரத்திலிருக்கும்பொழுது விவாகம் செய்து கொண்டார். பிறகு என் தகப்பனாருக்கும் அவருக்கும் நேர்ந்த மனஸ்தாபத்தால் என்னை 14 வயதிலேயே விலக்கிவிட்டார். நான் மகாராணி காலேஜில் சேர்ந்து படித்து அந்த காலேஜ் அதிகாரிகளின் சிபார்சினால் வைத்தியசாலையில் சேர்ந்து பாஸ் செய்து இந்த வேலைக்கு வந்தேன். அவரை இப்பொழுது நான் நேரில் காணவே எனக்கு அவரிடம் இயற்கையாயுள்ள அன்பு மேலிட்டது போலவே அவரும் என்னிடம் அன்பு பாராட்டினார். ஆகையால் சேர்ந்து கொண்டோம். நீர் இனிச் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை."

"நான் சந்தேகம் கொண்டாலும், உன்னை வேலையிலிருந்து நீக்கலாமே யன்றி உங்களுடைய அன்பைக் கவரவாவது, உங்களைப் பிரிக்கவாவது என்னால் முடியுமோ? அதுவும் செய்ய நான் துணியவில்லை. ஆயினும் நீ, உனது பெற்றோர்களையும் பந்துக்களையும் இவ்விடத்திற்கு வரவழைத்து ஒரு விருந்து நடத்தி ஊர் ஜனங்களுக்குள்ள ஒரு சந்தேகத்தைப் போக்குவாயானால் மிகவும் சந்தோஷமாயிருக்கும்."

"நல்லது, தம்பதிகளாகிய நாங்களும் இந்த விஷயத்தில் யோஜித்துக் கொண்டே யிருக்கிறோம். சீக்கிரத்தில் நடத்துவதன்றித் தங்களையும் அச்சந்தோஷக் கொண்டாட்டத்திற்கு அழைக்க நினைத்திருக்கிறோம்."

"நீங்கள் அப்படிச் செய்து ஊர் ஜனங்களுடைய சந்தேகத்தை தீர்க்கவேண்டு மென்பதே எனது கருத்து; உங்களை கடவுள் ஆசீர்வதிக்கட்டும்."

பிறகு காசியிலிருக்கிற சங்கரராவுக்கும், வஞ்சிகுளம் டிப்டி கலெக்டர் காசிராவுக்கும் தந்தி கொடுக்கப்பட்டது; அவர்களும் வந்து சேர்ந்தார்கள். கங்கா சமாராதனை என்பதாக ஒரு பெரிய விருந்து செய்யப்பட்டது. ஊர் பிராமணர்கள் எல்லாரும் அழைக்கப்பட்டார்கள். பிராமணர்களுக்கு யோக்கியதைக்குத் தக்கபடி ஒரு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் வரையில் தக்ஷிணை கொடுக்கப்பட்டது. இரவில் ஜட்ஜ், கலெக்டர், டாக்டர் முதலிய ஐரோப்பியர்களுக்கும் விருந்து செய்யப்பட்டது.

ராஜவேலூர் பிராமணர்கள் தக்ஷிணை உனக்குக் குறைவு, எனக்கு அதிகம் என்று பேசிக்கொண்டிருந்தார்களே யன்றி ராயருடையவும் மிஸ் பத்மா இப்பொழுது மிஸ்ஸிஸ் லக்ஷ்மி நரசிங்கராவினுடையவும் பூர்வோத்தரங்களை விசாரிக்கவில்லை. வஞ்சிகுளம் டிப்டி கலெக்டர் மிஸ்டர் காசிராவ் தமது தங்கையின் அதிர்ஷ்டத்தையும் அவளிப்பொழுதிருக்கும் நிலைமையையும் கண்டு மகிழ்ந்திருந்தாரே யன்றித் தமது தகப்பன் செய்த சூழ்ச்சிக்காக வருந்தவில்லை.

பத்மாவதிக்கு இரண்டு புத்திரர்களும் ஒரு புத்திரியும் பிறந்தார்கள். விதி எழுத்தைக் கிழித்துவிட்ட குறையைத்தொட்டு அங்கம் பரவசமடைந்து ஆநந்தமாயிருந்தனள்.

டி. சி. வேங்கடரமணய்யர்.

கம்பன்.

அடுத்த திவ்ய தேசமாகிய திருவேங்கடத்தைச் சிறப்பிக்குமிடத்து;

வடசொற்குந் தென்சொற்கும் வரம்பாகும் நான்மறையு மற்றை [நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய் நல்லறத்துக் கீறாய் [வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்யேபோற் பூத்து [நின்ற
உடைசுற்றுந் தண்சார லோங்கியவேங் கடத்திற்சென் றுறுதி [மாதோ.

என்று எவ்வளவழகாய் வரைந்துள்ளார் பாரீர்.

மேலும் இப்பாவின் முதலடியின்கண் தம் சித்தாந்தத்தை வெளியிட்டவரு மாகின்றாரன்றோ நம்புலவர்.

“வடசொற்கும் தென்சொற்கும் வரம்பாகும் நான்மறையும் மற்றை நூலும், இடைசொற்ற பொருட் கெல்லா மெல்லையதாய்” என்னும் இதில் ‘திருவாய் மொழியை’ திராவிடவேதமாகக் கூறும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் காட்டுகின்றாரன்றோ? அத்திவ்ய பிரபந்தத்தின் மூலமாக ஆழ்வார்கள் பன்னிருவரில் இருவர் நீங்கலாக மற்றை யாழ்வார்களால் வாசாமகோசரமாகப்பாடப்பட்டுள்ள திவ்யதேசமன்றோ இது என்றும் எடுத்துக்காட்டுகின்றார். இதைக் காட்டினும் இவரை வைஷ்ணவர் என்று துணிவதற்கு வேறு ஆதாரம் அவசியமோ

அறிகிலேன். எனினும், தம் மதக்கோட்பாட்டின் தீர்மானத்தை வெளியிடுவான் கருதி நப்புலவர் பெருமான் வெகுவாய் அங்கங்கே கூறியருளிய பாடல்களை ஒருங்கே திரட்டுதல் அசாத்திய மாயினும் நமது கவனத்தை விட்டு நீங்கச் செய்யாது பிணித்து வைக்குமியல்பினவான இரண்டொருபாடல்களையும் காட்டி நிறுத்துவாம். நாகபாசப் படலத்தில், இவ்வுலகை இருள் சூழ்ந்த அழகை வருணிக்குமிடத்து.

வாழிய வேத நான்கும் மனுமுதல் வந்த நூலும்
வேழ்வியும் மெய்யும் தெய்வ வேதியர் விளைவு மஃதே
ஆழியங் கமலக் கையா னுதியம் பரம னென்னு
ஏழைய ருள்ள மென்ன விருண்டன திசைக ளெல்லாம்.

என்று பரப்பிரும்ம சொரூபி ஸ்ரீமந் நாராயணனே என்று கேட்போர் செவிடுபடும்படி அங்கங்கே மறித்து மறித்துக் கூறுநிற்கும் நம் தெய்வப்புலவரை 'சைவர்' என்றும், 'அத்வைதி' என்றும் ஏனோ கூறுகிற்பார்? மேலும் மீட்சிப்படலத்தில் சதுர்மறையோன் கூற்றாகத் தமது மதக் கோட்பாட்டை வெளிப்படுத்துகிறார் நம்புலவர் பெருமான். பிரணவப் பெருமான் நம் நாராயணன், அப்பிரணவத்தின் பெருமையை அறிந்தோர் நம்பெருமானை அறிதல் கூடுமென்றும் கூறுநிற்பர்.

ஓங்காரப் பொருடேறுவோர் தாமுன்னை யுணர்வோர்
ஓங்காரப் பொருளென்றுணர்ந்திரு விளையுகப்போர்
ஓங்காரப்பொருளாமன்றென்றூழி சென்றாலும்
ஓங்காரப்பொருளே பொருளென்கிலா வாவோர்.

மேலும் கங்கையினது வரலாற்றை வருணிக்குமிடத்து, அவளது பாரத்தைச் சிரசில் இவ்வுலக ரக்ஷணார்த்தம் வகித்த பரமசிவனது சௌலப்யத்தை வியந்து மிகவும் விமரிசையாக வால்மீகி பகவான் ஸ்தோத்திரித்திருக்கவும், நம்புலவர் பெருமான், அக்கங்காதேவி 'அவ் வகில

மன் றளந்த-புண்டரீகமென் பதத்திடைப் போந்துபூ மக ஞர், கொண்ட தீர்த்தமா யரன்கொளப் பகீரதன் கொணர, மண்ட லத்துவந் தடைந்தது' என்று தன் வைஷ்ணவாபி மானந்தோன்ற, பரம வைஷ்ணவர்களான திவ்யகவி பிள் ளைப் பெருமாளையங்கார், ஆழ்வாராதிகளைப் போலவே கூறியுள்ளார். நம்புலவர் பெருமான் வைஷ்ணவரல்லர் எனின் இங்ஙனந் துணிந்து கூற இணங்குவரோ? என்ப தைச் சைவர்கள் உற்று நோக்குவாராக.

மேலும் சிறப்புப்பாயிரத்தில்

"முத்தமிழ்த் துறையின் முறைபோகிய
உத்தமக் கவிகட்கொன்றுணர்த்துவேன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ."

என்று, 'சாதாரணகவியாகிய நீர் எங்ஙனம் துணிந்து இராமாயணம் பாடியுள்ளீர்' என்று வினவும் உத்தமக் கவிகட்குச் சமாதானம் கூறியருளுகின்றார். இப்பாவின்கண் நம்புலவர் பெருமான் தம்மை 'ராமபக்தனுகவே' கூறியுள் ளார். உண்மையாகவே 'பரம ராமபக்தன்' இவர் என்பது இவரது நூலைப்படிக்கத் தெள்ளிதிற் புலப்படும். இங்ங னம் இவரது வாயாலேயே கூறியுள்ள சாக்ஷியம் நமக்கு அங்கையி னெல்லியங்கனியாய் நிற்கவும் இவரை 'சைவர்' என்றும் 'அத்வைதி' என்றும் கூறல் சால்புடைத்தோ பா ரீர். ராமபக்தன் சைவனுயிருத்தல் அசம்பாவிதமன்று என்று அன்னுர் கூறுவார்போலும்.

மேலும் இவரது இராமாயணம் அரங்கேற்றப் படுங் காலை வைஷ்ணவாசாரியர்களில் முதன்மையாய் வீற்றிருக் கும் ஸ்ரீமந் நாதமுனிகள், சபையின்கண் எழுந்தருளியி ருந்து இவரது அமிழ்தனைய பாடல்களைத் திருச்செவி சார்த்தித்திருவுள்ள முகந்ததோடு, இவரதுஸ்தோத்திரங்

களில் வெளிப்படும் தத்வார்த்தங்களையும் தீர்மான வைஷ்ணவ பக்தியையும் மனத்தில் எண்ணிக்குதூகலங்கொண்டனர் என்பர். ஆனதுபற்றிச் சபையிலிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களால் அங்கங்கே ஆக்ஷேபங்கள் ஏற்படுங்காலை ஒருதலையாய் நின்று ஸ்ரீமந்நாதமுனிகளே அவைகட்குச் சமாதானம்சாதித்தனர் என்பர். கம்பர் வைஷ்ணவரல்லரெனின் ஸ்ரீமந்நாதமுனிகள் அவரது நூல் அரங்கேற்றப்படுங்காலை அங்குவிஜயம் செய்யச்சம்மதிப்பரோ என்பதையும் சைவர்கள் உற்று நோக்குவாராக. மேலும் அன்னார் நம்புலவரை 'சைவரே' என்று சித்தாந்தப் படுத்துமுன்னர் 'அவரது' சடகோபரந்தாதியைச் சற்று நுட்பமாய்ப் படிப்பார்களாக.

இந்த சந்தர்ப்பத்தின் கண் 'சடகோபரந்தாதி' என்னும் கம்பரது வேறொரு நூலைப்பற்றி இரண்டொன்று கூறி மேற்செல்வாம். கம்பரது இராமாயணம் அரங்கேற்றப்படுமுன்னர், ஸ்ரீரங்கநாதன் அர்ச்சகர் முகமாக 'நஞ்சடகோபனைப் பாடினையோ என விஞ்சிய வாதரத்தாற் கேட்ப "தன்யோஸ்மி" என்று பதில் கூறி நம்புலவரும் அந்நூலைப்பாடி எம்பெருமானது திருவுள்ளத்தை உகப்பிக்கச் செய்தனர் என்பர். தமிழ்ப்பாவின் இலக்கணம் தெரிந்த ஒருவனும் இந்நூல் கட்டாயத்திற்காகப் பாடப்பட்டது என்று கூறத்துணியான் என்று கூறும் வைஷ்ணவர்களது கூற்றில் எவ்வளவோ உண்மையுளது என்றதை மட்டும் காட்டி நிறுத்துவாம். வேதத்திற்கும், மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர் கேர்தற்ற ஞானக்கொழுந்திற்கும் தென்படாது நிற்கும் 'தொல்லை மூலப்பரஞ்சுடர்' தென் குருகூர்ப்புனிதன் கவியோர் பாதத்தின்முன் செல்லுமோ? என்று ஈடுபட்டு முதற்பாவின் கண் கூறுநிற்பர் கம்பநாட்டாழ்வார். திருவாய் மொழியின் சிரேஷ்டத்

த்தையும் பெருமையையும் கருதி அதைப் பின்தொடர்ந்து செல்லாநிற்பன் எம்பெருமான், இவனை வேதம் காணமாட்டாது பரிதபித்துப் பின்தொடராநிற்கும். ஆனதுபற்றி உத்ஸவங்களில் எம்பெருமான் வீதிகண்டருளுங்காலை, 'இயல்' என்ற திருவாய்மொழி இவனுக்கு முன் சேவிக்கப்பட்டும், 'வேதம்' பின்னர்ப் பாராயணம் செய்யப்பட்டும் வருகிறது. இக்கருத்தையமைத்தே முதற்பாடல் எழுதியுள்ளார்.

"வேதத்தின் முன் செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர்
கோதற்ற ஞானக் கொழுந்தின் முன் செல்க குலவிளக்காம்
போதக் கடலெங்கள் தென்குரு கூர்ப்புனிதன் கவியோர்
பாதத்தின் முன்செல்லு மோதொல்லை மூலப் பராஞ்சுடரே."

'எங்கள் மாதவன்' 'எங்கள் கோவே' என்று கூறும் வில்லி புத்தூராரைப்போலவே தம் வைஷ்ணவ அபிமானமும், அவ்வைஷ்ணவ சம்பிரதாயத்தில் தமக்குள்ளசம்பந்தமும் தோன்ற, நம்கவியும், எங்கள் தென்குருகூர்ப் புனிதன் என்றும் கூறியருளுகிறார்.

தனமாஞ் சிலர்க்குத் தவமாஞ் சிலர்க்குத் தருமநிறை
கனமாஞ் சிலர்க்கதற் காரண மாஞ்சிலர்க் காரணத்தி
னினமாஞ் சிலர்க்கதற் கெல்லையுமாந் தொல்லை யோர்வகுள
வனமாலை யெம்பெரு மான்குரு கூர்மன்னன் வாய்மொழியே.

என்ற பாடலையுங்காட்டி மேற்செல்வாம். திவ்யப்பிரபந்தம், இராமாயணம் இவைகளைக் காலக்ஷேபஞ் செய்து மதாபிமானங்களை நீக்கி ஒருவன் பார்த்தானேயெனின் யாம் கூறியது ஒப்புக்கொள்ளற் பாலதே என்று கூறிச் செல்வான்.

அத்வைதிகளுக்கு மட்டும் ஓரே சமாதானங்கூறி மேற்செல்வாம். இதன்கண் நீடித்து நிற்றல் நம்மவர்களுக்கு அவ்வளவு திருப்திகரமாயிராதாதலின். அரனதிகனுலகளந்த வரியதிகனென்றுரைக்குமறிவிலார்க்குப், பரக

திசென் றடைவரிய பரிசேபோல்' என்று கூறியருளிய கம்பரது நோக்கம் என்ன? எனின், ஸ்ரீமந்நாராயணனையும், பரமசிவனையும் தம் வழிபடு கடவுளாக முறையே மனத்தில் எண்ணிப் பிரவர்த்திக்கும் ஒவ்வொரு வைஷ்ணவனும் சைவனும், தன் வழிபடுகடவுள் 'ஒப்பாரை மிக்காரையில்லாய' தேவதேவன் என்று மனத்தில் நிச்சயித்து அத்தேவதேவனை உபாசிக்கிறதற்கேற்ற பக்தி மார்க்கத்தையாவது சிரபக்தி மார்க்கத்தையாவது அநுஷ்டித்து மோக்ஷ சாம்பிராஜ்ஜியம் அடைய எத்தனிக்க வேண்டுமேயன்றி, தன் வழிபடுகடவுள் தேவாதிதேவனோ அன்றோ என்று மனத்தின்கண் ஐயமுற்று, அவ்வையத்தைத் தவிர்ப்பான் றொடங்கவும், மோக்ஷ ஸாம்பிராஜ்ஜியத்திற் கேற்ற தீர்மான ஞான பக்திவைராக்கியங்கள் தொலைந்து விபரீத சந்தேக ஞானங்கள் பிடிபட்டு அச்சந்தேகத்தால் 'அரனதிகன்' 'உலகளந்தவரியதிகன்' என்று தாவாப்பட்டு மனத்தின்கண் ஒரு நிச்சய புத்திவராது மோக்ஷ சாம்பிராஜ்ஜயத்தை அடையாது பிரமித்து நிற்கின்றனர் என்பார் 'அரனதிகன் உலகளந்த அரி அதிகன் என்றுரைக்கு மறிவிலாருக்குப் பரகதி சென்றடைவரிய பரிசேபோல்' என்றார் இதனால், அரனையும் அரியையும் ஒப்ப நினைக்கும் அத்வைதி என்று கொள்ளற்பாலதன்று.

(இன்னும் வரும்)

வி. வி. ஸ்ரீநிவாஸாசாரியன்
பி.எ. பி.எல்.

பெண்மணி.

பெண்மணியின் விவாகக்கொண்டாட்டம் மூன்றாவது நாளிலும் ஊஞ்சல், ஔபாசனம், நலங்கிடல் கிரமமாகக் கொண்டாடப்பட்டன. காலை விளா, மத்தியானம், சாயங்காலபோஜனங்களும் முதல் நாள் நடந்ததிலும் பத்துப்பங்கதிகமாக நடத்தப்பட்டன.

மூன்றாவது நாளில் நடந்த விசேஷம் தோழிப்பெண்கள் (வழக்கத்தில் தோழிப்பொங்கள் என்று வழங்கப்படுகின்றது) ஊர்கோலந்தான். இதைக் கலியாணப்பெண்ணின் தாயாருடன் பிறந்த அம்மான் தான் வெகுசிறப்பாக ராத்திரியில் தீவர்த்திகள் மத்தாப்பு வாணவேடிக்கையுடனும் நாகசுரம் பரதநாட்டியங்களுடனும் நடத்துவிப்பது வழக்கம்.

கலியாணப்பெண்ணுக்குப் புருஷவேஷம்போட்டு உருமாலை நெடுஞ்சொக்காய் ஆரம் முதலியவைகளால் அலங்கரித்து அப்பெண்ணின் தோழிகளின் நடுவில் பல்லக்கில் வைத்து வீதியில் ஊர்கோலம் செய்விப்பதுதான் இங்கே நாம்சொல்லும் தோழிப்பெண் ஊர்கோலம்.

பெண்மணிக்கும் இப்படி ஊர்கோலம் செம்மையாகவே நடத்தப்பட்டது. பெண்ணுக்கு விவாகமுகூர்த்தம் நிறைவேறின பிறகு அவள் யஜமானி ஆகிறாளென்பதை அவளது தோழிகள் கண்டுகளிப்

பதற்கும் தோழிகளுக்கும் இப்படியேவிவாகமுகூர்த்தம் நிறைவேறி யஜமானியாகும் நிலைநேரிடவேண்டுமென்பதை ஊராரும் பெண்களின் தாயார் தகப்பனர் பந்துக்களும் பார்த்துக்களிப்படைவதற்குமே இந்தத் தோழிப்பெண்கள் ஊர்கோலம் நடந்தேறிவருகின்றது. இதனால் விளையாட்டுப் பெண்ணாயிருந்தவள் விவாகம் நிறைவேறி ஒருவீட்டில் யஜமானியாக வருவதைச் சுட்டித்தான் இது செய்யப்படுகின்றது. ஒருவன் விவாகமில்லாதவனாக ஒருவீட்டிலிருந்தால் அந்த வீடு அதிதி பூஜைக்கு யோக்கியமானதன்று. அவன் விவாக முறையாக ஒருபெண்ணைக்கைப்பிடித்தமேல்தான் அவன் வீடு கிரகமெனப் படுகின்றது. கிரகிணீ யில்லாதது கிரகமன்று என்பது நமது நாட்டு வழக்கு.

"இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை."

என்கின்றபடியே இல்வாழ்பவனுக்குத்துணையாகநின்றுஇல்லை ஆள்பவள்தாள் இல்லாள். ஆதலால் இல்லறம் வழுவாது நிறைவேற முக்கிய சாதனமாயுள்ளவள் கலியாணப்பெண்ணேயாம். அப்பெண்ணிற்குப் புருஷனைக்காட்டிலும் உயர்வாகியநிலை ஏற்படுவதால்தான் கலியாணப்பெண்ணிற்குப் புருஷவேஷம் போடப்படுகின்றது. வீட்டையலங்கரித்துச் சுத்தமாய் வைத்துக்கொண்டு கணவன் வரவை எதிர்பார்த்துத் தின்பண்டம் முதலியவைகளைச் சித்தமாக்கிவைத்துக்கொண்டு தன் வீட்டு நிர்வாக ஸாமர்த்தியத்தால் வீட்டை இன்ப நிலயமாகச் செய்விப்பதில் விவாகமாகி வந்த பெண்தான் தலைமையாக விளங்குகின்றாள். வீட்டின் வெளிவேலைகளில்மட்டும் புருஷன் யஜமானனாகிறானேயன்றி வீட்டின் உள் காரியங்களாம் நிர்வாகமெல்லாம் மனையாளின் தலைமையினாலேயே நடைபெறுவதை நாமெல்லோரும் தினந்தோறும் நமதனுபவத்தில் காண்கிறோம்.

"மனைக்கு விளக்கம் மடவார்" என்பதும் இதுபற்றிவந்ததாம். பெண்ணினும்பெரியதொன்றில்லையென்பது திருவள்ளுவர்கருத்து; அதுவும் கற்பின் திண்மையால் வந்ததாம்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின்."

இவ்வாறு கற்பெனும் பயிர் விளைந்து பலமுதவப் பெண்மணியின் விவாகமுகூர்த்தத்தில் மூன்றாவது தினத்தின் கொண்டாட்டம் கண்டார்க்கும் கேட்டார்க்கும் களிப்புண்டாக்கக் காரணமாயிற்று.

பெண்மணியின் விவாகத்தில் நாலாவதுநாளின்குதூகலத்தை நேராகப் பார்த்தவர்களுக்கேயொழிய அதைப்பற்றி எழுதுபவர்களுக்கும் பேசுபவர்களுக்கும் அந்தக்கண்காட்சியும் அதனால் விளைந்த ஆநந்தமும் உள்ளதுஉள்ளபடியே கண்டு ஆனந்தித்ததாகாது. காலையில் ஊஞ்சலும் ஔபாஸனமும் கிரமம்போல நிறைவேறின. மத்தியானத்தில் சம்பந்திகளுக்குத் ததீயாராதனம் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. பக்ஷணவகைகளும், புளியோதனம் ததியோதனம் முதலியவைகளும் அக்காலத்தைய வழக்கம்போல் சீராகவே பலதரம் பந்தி விசாரணை செய்து பரிமாறப்பெற்றுச் சம்பந்திகளும் ஊராரும் பந்தக்களும் மற்றையோரும் வெகு திருப்தியாகப் புசித்துக்கைகால் கழுவிக் கொண்டு வீதிப்புறம் திண்ணையிலும் பந்தலிலும் எள்ளுப்போடவும் இடமில்லாமல் வந்துநெருங்கி உட்கார்ந்தபேர் சிலர்; சிரமம்பொறுக்காமல் சயனம் கொண்டபேர் சிலர்; தாழ்வாரத்தைப் பிடித்துக்கொண்டு நிற்பவர் சிலபேர்; இடமில்லாமையால் ஒருவர்மேலொருவர் உட்காருவதும் கைபோடுவதுமாய் மயங்குவர் பலர்; இவர்கள் நடுவில் பிரகஸ்பதி சந்தனம் வெற்றிலை பாக்கு புஷ்பம் சோபன அக்ஷதை பன்னீர்ச்செம்பு இவைகளுடன் வழிவிலக்கிக்கொண்டு திண்ணைமீது இரத்தினகம்பளத்தில் உட்கார்ந்தார். பக்கங்களில் இருபுறத்திலும் பிரப்பம் பாய்களும் கம்பளிகளும் பரப்பப்பட்டிருந்தன. வைதிகர்களாய், வேதம் ஓதவல்லவர்களெல்லாரும் திண்ணையில் இரண்டு வரிசையாக வாயிற்படிக்கு இருபுறத்திலும் உட்கார்ந்தார்கள். சந்தனம் வெற்றிலைபாக்குக் கொடுத்துப் பன்னீர் தெளிக்கப்பட்டது. தாம்பூலம் கொடுக்க ஆரம்பித்தபோதே வேதகோஷம் ஆரம்பித்தது. அக்காலத்தில் வேதமோதுதல் கிராமங்களில் வெகுமுக்கியமாதலால் கிராமம் எவ்வளவு சிறிதானாலும் ஒருகலியாணப் பந்தலில் ஆசீர்வாதம் செய்ய வேதபிராமணர்கள் பலர் கூடுவார்கள்.

அக்காலத்திலிருந்த வேத கோஷம்போல் இப்போது நாம் கேட்கவேண்டுமானால் முதல் முதலில் கிராமங்கள்தோறும் வேத

பாராயணத்திற்குப் பாடசாலைகளை ஏற்படுத்தி வேத மோதும் படி பத்து வருஷகாலம் செய்வித்தபின்பு கேட்பது ஒருவாறு சாத்தியமாம். சோபனுக்ஷதையும் வேதபாராயணஞ் செய்தோர்கையில் பிரகஸ்பதியால் கொடுக்கப்பட்டது. கலியாணப்பெண்ணும் பிள்ளையும் சந்தனம் மாலை புஷ்பம் தரித்துக்கொண்டு கிழக்குமுகமாக நின்றார்கள். ஆசீர்வாதம் செய்து எல்லோரும் பிள்ளையும் பெண்ணும் தண்டன் சமர்ப்பித்தபோது சோபனுக்ஷதையை அவர்கள் மேல் தூவினார்கள். இச்சமயத்தில்பிரகஸ்பதி ததீயாராதனத்தின் சிறப்பைப் பலதொடர்வாக்கியங்களால் ஒரு நாழிகைப்போது ஒன்றின்மேலொன்றாய்ப் பெருக்கிக் கேட்பவர்கள் நாக்கில் ஜலம் ஊறும்படி கனிரென்று சொல்லிமுடித்தார். விவாக காலத்தில் வேதமந்திரங்களில் இரண்டொன்று ஞாபகப்பிசகாக விட்டுவிடப் பட்டாலும் இந்தத்ததீயாராதனைப்பக்ஷிய பலவர்க்கங்களின் ஜாபிதாவை ஒப்பிப்பதில் தமிழ் நாட்டில் பிரகஸ்பதிகள் வெகுசமர்த்தர்.

இந்த தினத்தில் கிராமத்தாரில் ஒருவரையும் விட்டுவிடாது எல்லாரையும் ஒருதரமும் பலதரமுமாய்ப்போய் அழைத்து வந்து, வரவேண்டியவர்களில் யாரும் பாக்கியில்லையென்று யஜமானன் தெரிந்துகொண்டு பிறகு ஸதஸில் ஆசீர்வாதம் செய்யஆரம்பிக்கலாமென்று எழுந்து நின்று சபையோரை நோக்கிப்பிரார்த்திப்பது வழக்கம். ஒருகுஞ்சு வராதிருந்தாலும் ஆசீர்வாதம் ஆரம்பமாகாது. மனஸ்தாபங்கள் கிராமப்பொதுக் காரியங்களிலோ அல்லது வேறு வியவகாரங்களிலோ ஏதாவது நேரிட்டிருந்தால் வீட்டின் எஜமானன் தான் நேரிற்போய் அதற்காக மன்னிப்புக்கேட்டுக்கொண்டு; வராது ஒதுங்கினவர்களை அழைத்துவருவதுண்டு. அவ்வகை மனஸ்தாபம் தீரவேண்டுமென்றே சிலர்பலதரம்கூப்பிட்டும்வாராமலிருந்து யஜமானன் நேரிற் போய் மன்னிப்புக்கேட்டுக்கொண்டமேல் வருவார்கள். பகலில் இருபது நாழிகை வேளையில் பெண்மணியின் விவாகபூர்த்திக் கறிகுறியாக ஆசீர்வாதம் சீராக நிறைவேறியது.

பந்தலில் கலியாணப்பெண்ணும் பிள்ளையும் எதிரெதிராகப் பட்டுப்பாயின்மீது உட்கார்ந்துகொண்டார்கள். பெண்பக்கத்திற்கு ஒருத்தியும் பிள்ளையின் பக்கத்திற்கு ஒருத்தியும் வாத்தியார்களாக ஏற்பட்டார்கள். நலங்கிடுவதற்குள்ள கண்ணாடி, அப்பளம், மஞ்சள்

முதலியசாமான்கள் படிக்கு அருகில் இரண்டு பக்கத்திலும் வைக்கப்பட்டிருந்தன. சோபனசுஷதையை வதூவரன் கையில் கொடுத்து நலங்கிட அழைத்தாள். பிறகு சிரசிற்குநேரே அப்பளம் உடைத்தல் காவில் மஞ்சள் பூசல், கண்ணாடி காட்டல் இவைகள் முதலில் வரனுக்கு நடத்தப்பட்டபிறகு வரனால் வதூவுக்கு நடத்தப்பட்டன. பிறகு தேங்காய் உருட்டலும் பூச்செண்டு உருட்டலும் நடத்தப்பட்டன. பிறகு பெண்மணி தன் புருஷனைச் சுட்டி ஒரு பத்தியம் பாடினாள்.

ஆயிரநாட்டபசிருந்து அயோத்திமா நகராளும்
அபிராம ராமருக்கு மாலை யிட்டேன்
சகத்திற் கதிபதியாஞ் சீராம சந்திரற்குச்
சுபத்துடனே அதிசுபமாய் மாலை யிட்டேன்
கனபிரியத் துடன்வந்த கலியாண குணசீல
காகுத்த ராமருக்கு மாலை யிட்டேன்
எதிரொருவ ரில்லாத இக்ஷ்வாகு வம்சகுல தீர ராமா
சரியொருவ ரில்லாத சவுபாக் கியதீர பட்டாபி ராமா
நிகரொருவ ரில்லாத நீலமேகச் சாம ராம ராமா
சரியான என்றனுக்கு மாலையிட்ட சகலகல் யாண ராமா.

இது பழம் பாட்டு. கேட்டபடியே இங்கு எழுதப்பட்டது. சங்கீதம் வல்லவர் இசையையும் தாளத்தையும் நாடிச் சீராகப்பாடிக் கொள்ளவேண்டும்.

பிறகு கலியாணப்பிள்ளை பெண்ணைப்பார்த்து ஒருபத்தியம் பாடினான்.

சனகன் குமாரியே சிங்கார ரூபியே
என்சித்தத்திற்குச் சரி யான ரத்னமணியே
சனகன் குலத்தியே சீதசூடாமணியே
திவ்யசந்தர பிம்பமே என்றன் ரதியே
புதுமையாய்ப் பெற்றெடுத்த பூர்ணகங்கை நதியிலே
புஷ்பந்தனி லவதரித்த பூர்ண கிருபையே
மறுவற்ற மாணிக்க வச்ரவை டூர்யமே
வாடாத செம்பொனே வாழும் பொருளே.
தெளிவுற்ற ஞானமே திவ்யரூப மானசுந்தரமேயென்

அளவற்ற பாக்கியந்தனிலாள வந்த அற்புதமே
குறையாத செல்வந் தனிற்பிறந்த கோகிலமே
மறவாத என்றனுக்கு மாலை யிட்ட மாணிக்கமே.

மாப்பிளை சங்கீதம் வல்லவராதலால் இப்பாட்லைநன்றாகச்சாரீரசம்பத்துக் கொழிக்கும்படி பாடினார்; பெண்மணியும் மற்றுமுள்ள பெண்களும்அவர்களின் தாய்மாரும் சொக்குப்பொடிபட்டவுடனே மயங்கி விழுவதுபோல் பத்தியம் பாடியதைக்கேட்டு மயங்கிப் பிரமைகொண்டார்கள். பக்கத்திலுள்ள பெண்களும் அவர்கள் தாய்மாரும் பின்வருமாறு புகழ்ந்தார்கள். அடி கோமளம் பெண்மணிக்கு ஒரு கிழவன் கை பார்த்து முன்னே சொன்னபடியே கண்மணி ஒரு புருஷன் வாய்த்தான் பார்த்தாயோ அடி, மாப்பிள்ளை குரலுக்கு மாமனார் ஆஸ்தி முழுதும் கொடுத்தாலும் போராதே. அடி மாப்பிளை கறுப்பு என்று வாய் கூசாதே சொன்னேமோ,பாட்டைக்கேட்டப்புறம் கிருஷ்ணன் கறுப்பு, ராமனும் கறுப்பு, மன்மதனும் கறுப்புத்தானே என்று மனவில் தோணறது. என்ன ஆச்சரியம் அடி! நம்ம ஊர்பண்ணினபாக்கியமே பாக்கியம். அலமேலுவுக்கும் அவள் ஆத்துக்காருக்கும் இந்தமாப்பிளை எங்கே போனாலும் ஆப்படுமோ? அடிபெண்மணி! என்னைப்பாரடி, இனிமேல் எண்டி என்னோடே பேசமாட்டாயோடி, அடியென்னை மறக்காதே அடி, நான் உன் இணைபிரியாததோழியடி, என்று இப்படிப் பலவிதமாய்ப்புகழ்ந்தார்கள்.

பிறகு வைஷ்ணவ சம்பிரதாயத்தையொட்டி, பெண்வர்க்கத்தார் பிள்ளைவர்க்கத்தார் சீரைப் பாட ஆரம்பித்தார்கள். இதற்குப் பச்சை சாத்தல் என்றொருபேருண்டு; அதாவது பச்சை மஞ்சளை நாயகன் கிடைக்கவேண்டித் தரித்துக்கொள்ளல். ஸ்ரீகோதை நாச்சியாராம் ஆண்டாள் மஞ்சளைத் தரித்துக்கொண்டு ஸ்ரீகண்ணனையே நாயகனாகவரித்தபோது அவன் சொப்பனத்தில் தோன்றித் தன் கையிற் காப்புக்கட்டித் தீவலஞ்செய்து அம்மி மிதித்துப்பொரியிட்டுக் கைத்தலம்பற்றி வாத்தியம் முழங்க விவாகம் செய்யக்கனாக் கண்டதைத் தன் தோழியோடு கூறியது முதலாயிரத்து வாரணமாயிரம் என்றது முதலாகப் பதினொரு கலிவிருத்தப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கோதை நாச்சியாருக்குக்கண்ணன் நாயகனாய் நேர்ந்தது போலவே வதூவரர்களுக்கும் விவாகம் நேர்ந்த

தென்று காட்ட மஞ்சளை நெய்யிற் குழைத்து வைத்துக் கொண்டு மேலே சொன்னபாடல்களைப் பாடி நாச்சியாருக்குச் சம்பாவனை செய்தபின் அந்த மஞ்சளை வதூவரர்கள் நெற்றியிலும் தோளிலும் தரிப்பித்துவிட்டு இரண்டு வருக்கத்தார்கள் பெயரையும்சொல்லி சீர் பாடுதல் வழக்கம். இப்பாடல்கள் பாடிமுடிந்த மேல் பின்வரும் பாடல்கள் பாடப்படுகின்றன. அப்பாடல்கள் வாய்மொழியாகமட்டும் வழங்கிவருகின்றன.

தோழிநான் கண்ட கனவெல்லாம் நற்கனவு
தோழிநீ சொல்லாய்நீ ராகக்கண்ட நற்கனவு
ஒரா லிலையில் ஒடுங்கி வளர்ந்தோனை
ஊரா விரணிய னுடலைப் பிளந்தோனை
கூராழி சங்கம் தரித்தோனை மாயோனைச்
சீரானைப் பாடித் தளிர்பண் படிப்போமே.

இதன்படியே இவ்விவாகத்திலும் சீர்பாடப்பெற்றது. இந்தப் பச்சை சாத்திக்கொள்ளுதலை நாயகனுகிய லாபத்தைப்பெற உபயோகிக்கும் மூலிகையென்றும் சிலர் சொல்வார்கள். அம்மூலிகையின்பயன் நாயக சித்தியேயாம். ஆசீர்வாதம் நடந்தபோது ஆசாரியர் சம்பாவனை, தீக்ஷா சம்பாவனை வித்வத்சம்பாவனைகளும் செய்யப்பட்டன. சம்பாவனை என்பது வெற்றிலைபாக்குடன் சில்லரை கால் அல்லது அரைக்கால் ரூபாய் வைத்து வெகுமதியாகக் கொடுப்பது தான். சுபகாலங்களில் தங்கள் தங்கள் ஆசாரியர்கள், தீக்ஷிதர்கள், அந்த அந்த ஊரிலுள்ள பெருமாள் இவர்களுக்கு வேதமோதிக்கொண்டே எல்லோரும் பந்தலில் எழுந்து நின்றுகொண்டு பயபக்தியுடன் செய்யும் வழிபாடு தமிழ் நாடெங்கும் நெடுநாளாய் நடந்தேறிவருகின்றது. தெய்வத்தையும், வேதமுணர்ந்த பெரியோர்களையும், ஆசாரியர்களையும் இல்லறத்திலுள்ளார் தங்கள் க்ஷேமத்தின் பொருட்டு நினைந்து சுபகாலங்களில் சொற்பம் தங்கள் நிலைக்குத்தக்கபடி பணம் செலவு செய்தல் ஸ்த்விநியோகமேயாமன்றோ.

இந்த தினம் ராத்திரியானதும் ஊஞ்சல் நடத்தப்பட்டது. வழக்கம்போல் பெண்டுகளும் பெண்களும் லாலி எசல் மங்களம் பாடிக்கழித்தார்கள். திருக்குடந்தையிலிருந்து வந்திருந்த பழனிக்

குஞ்சு என்பவனும் நடுவில் நடுவில் நாகசுரத்தில் அப்பாடல்களை வெகு விசித்திரமாக வாசித்தான். முகவீணையிலும் சில பாடல் வாசித்தான். தவுல்காரனும் வெகு சமர்த்தன். மேளவாத்தியத்தைக் கேட்டு எல்லோரும் களித்தார்கள். சீக்கிரமாக எல்லோரும் இராச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு ஊர்கோலமானதால் சொல்பநேரமாவது கொஞ்சம் தலைசாய்ப்போமென்று கூறித்தூங்கினார்கள். இராத்திரி முதல் ஜாமமான உடனே பூப்பல்லக்கு திருக்குடந்தையிலிருந்து விசித்திர அலங்காரத்தோடு வந்து சேர்ந்தது. அக்காலத்தில் பாண்டுவாத்தியம் வாசிக்கும் வழக்கமில்லையாகையால் மேளவாத்தியமட்டும் சித்தமாயிருந்தது. வீதியில் இருபுறத்திலும் இருபது கஜங்களுக்கு ஒரு வாழைமரம் வீதம் நடப்பட்டிருந்தது. அந்த மரங்களின்மேல் பெரிய அகல்கள் வைத்து நிறைய விளக்கெண்ணெய் விட்டுப் பருத்திக்கொட்டையை நசுக்கிப் பொட்டணங்கள் கட்டி அவைகளை எண்ணெயில் தோய்த்துத் திரிபோல் வைத்துப் பொருத்தினார்கள். வீதி ஒரு கூப்பிடு தூரம் தான். ஒரு பக்கத்திற்கு ஐம்பது வாழைமரங்கள் நடப்பட்டிருந்தன. இதில்லாமல் கைத்தீவட்டி பெரிய தீவட்டிகளும் பக்கத்திற்கு ஒரு டஜனுக்குக் குறையாமல் சித்தமாயிருந்தன. ஊரெங்கும் வீதியெல்லாம் பகல் போல் வெளிச்சமாக இருந்தது. கலியாணப்பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஆடை அணி புஷ்பமாலை சுகந்தம் இவைகளாலலங்கரித்துக் கலியாணப்பந்தலில் கொண்டுவந்து நிறுத்தினார்கள். பல்லக்கில் அவர்கள் ஏறினார்கள். நாலைந்து சிறு குழந்தைகளையும் பல்லக்கில் உட்கார்த்தினார்கள். ஊர்கோலப் பல்லக்கு அக்கிரகாரத்திற்கு மேற்கிலுள்ள ராமன் சந்நிதிபோய்க் கிழக்கு முகமாகத் திரும்பியது. இருபுறத்திலுமுள்ள வீட்டின் பெண்டுகள் மஞ்சள் நீர் சுற்றித் திருஷ்டி தோஷம் போக்கிச் சந்தனம் தாம்பூலம் பெற்றுக்கொண்டார்கள். இந்த ஊர்கோலவாத்திய விநோதத்தையும் பல்லக்கின் அலங்காரத்தையும் இரண்டு பக்கத்திலும் பெண்டுகள் புருஷன்மார் நல்ல ஆடையுடுத்தி அடைக்காய் போட்டுக்கொண்டும் பன்னீர் தெளித்துக்கொண்டும் ஒருவர்தவருமல் சந்தனம் தாம்பூலம் கொடுத்துக்கொண்டும் இவ்விதமாகத் தெருவின் கிழக்குக் கோடிவரையிற் சென்று மறுபடி கலியாணப் பந்தலுக்குத் திரும்பி வந்துசேர்ந்தபோது விடிய ஒரு ஜாமந்தானிருந்தது. ஊரிலுள்ள ஜன

ங்களெல்லாம் தங்கள் தங்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு கலியாண ஊர்கோலத்துடன் வந்து கலியாணப்பந்தலில் நின்றார்கள். குடியானவர் தெருவிலுள்ள பெண்பிள்ளைகள் குடியானவர்கள் கூட்டத்திற்கும் குறைவேயில்லை. ராயர் கிராமாதிகாரியாதலால் அவர்பேத்தியாம் பெண்மணியின் ஊர்கோலம் வெகு சிறப்பாய் நடந்ததென்பதை எல்லோரும் அக்கால வழக்கப்படி தங்கள் தங்கள் சொந்தக் கலியாணம் போல வந்துகூடிக் கொண்டாடினார்கள். இனிச் சேஷ ஓமம் பலதானம் கொடுத்தல் இவைகள் சூரிய உதயம்வரை நடத்தப்பட்டன. இவ்வாறு நான்காம்நாள் கலியாணக்குதூகலமும் நிறைவேறியது. சேஷ ஓமம் என்பதை ஸ்மார்த்தர்கள் நாகபலி என்று வழங்கிவருகின்றார்கள். நாகப்பிரதிஷ்டை செய்வதையாரும் நமது நாட்டிலறிவார்கள். ஸந்ததியுண்டாக ஸர்ப்பதோஷம் நீங்கவே அதைச் செய்கிறார்கள். இந்தத்தோஷம் நவக்கிரக சம்பந்தமாய் எழுதப்படும் ஜாதகத்தில் ராகு கேதுக்களின் நிலையையும் ஐந்தாமிடத்தோன் அங்குள்ளோர்களின் சுபாசுப நிலைகளையும் நாடி நிதானிப்பதுண்டு. சேஷன் நாகம் ஒருபொருள் கொண்ட மொழிகள். அக்கினியில் ஓமம் செய்து நாகதேவதைக்குத் திருப்தி செய்தால் ஸந்ததி வாழையடி வாழைபோல் ஓங்குமென்பது நம்மவர் கொள்கை.

பலதானமென்பது, கலியாணப்பெண்ணும் மாப்பிள்ளையும் மாமனார் மாமியார் மற்ற பந்து வர்க்கத்தாரைப் பிரணமம் செய்துவிட்டுத் தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கைத் தக்ஷிணையோடு கொடுத்து அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதேயாம்.

சம்பந்திகளுக்குப் பிரயாணத்திற்கென்று கூடையில் ஸாதம் சித்தமாக்கிக்கொண்டுபோய் அவர்கள் ஜாகையில்வைப்பதைத்தான் நம்மவர் கூடை ஸாதம் என்கின்றார்கள். இது, கலியாணம் நிறைவேறின ஐந்தாநாள் மத்தியானம் செய்யப்படும். கூடத்தில் கூடைகளில் பக்குவம் செய்த பிரஸாதவகைகள் வைக்கப்படிருக்கும். ஊரார் வந்துபார்பார்கள். அவர்கள் முன்னிலையில் கூடை ஸாதம் வைத்ததற்கு நான்கு ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் ஸம்பாவனை செய்வது தென்னாட்டு வழக்கம். இதன்படியே ஐந்தாநாள் கூடை ஸாதம் வைக்கப்பெற்று ஸம்பாவனையும் செய்யப்பட்டது. இனிப்

பாலிகையைக் கொண்டுபோய்க் குளத்தில் சேர்த்துவருவதைப் பற்றியோவெனில் கலியாணப்பெண் மாப்பிள்ளைகளை அலங்கரித்து வாத்தியகோஷத்துடன் மங்களகீதமும் பாடிக்கொண்டு குளத்தருகேபோய்க் கலியாணப்பெண் மாப்பிள்ளை இருவரையும் அரசமரத்தடியில் உட்காருவித்துச் சுருக்கமாய் நலங்குவைத்துப் பாட்டுப்பாடிப் பாலிகைகளை எடுத்து முளைகளையும் மண்ணையும் குளத்தில் சேர்த்து விடுவார்கள். பிறகு மண்பாலிகைகளை மட்டும் தாம்பாளத்தில் வைத்துக்கொண்டு வாத்தியகோஷத்துடன் விவாக கிரகத்திற்கு வந்து வீட்டின் உள்புறம் பந்தலில் நடுவில் அதை வைத்துப் பெண்டுகள் எல்லோரும் குதித்துக் கைகொட்டி அதைச் சுற்றிவந்து பாடுவார்கள். பிறகு மண்பாலிகைகளை ஒரு கயிற்றில் கோத்து வீட்டின் உட்புறமாகக் கட்டித் தொங்கவிடுவார்கள். இங்குக் காட்டியபடியே பாலிகைவிடுதலும் நிறைவேறியது.

பிறகு சம்பந்தி மாப்பிள்ளை எல்லோரும் வண்டியிலேறி ராயர் கொஞ்சதூரம் வந்து வழியனுப்பப் பந்து வர்க்கத்தோடு ஆராவமுதன் க்ஷேத்திரமாம் திருக்குடந்தைபோய்ச் சேர்ந்தார்கள்.

இவ்விதமாகப் பெண்மணியின் விவாகமுகூர்த்தம் சீரும் சிறப்புமாக நிறைவேறியது.

தி. வேங்கடராம ஐயங்கார்.



கொடியாலம் வாஸுதேவஐயங்கார்.

வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
யுரையும் பாட்டும் உடையோர் சிலரே.

இவ்வுலகத்தில், நாள்தோறும் லக்ஷக்கணக்காய்ப்பிறந்து வாழ்கின்ற மக்கட் பரப்பில், நன்மக்களது புகழ்மொழிக்கும் பெரும்புலவர் தம் ஸ்தோத்திர ரூபமான பாடல்களுக்கும் விஷயமாக விளங்குவோர் மிகச்சிலரே. நிலவுலகில் நிலைநின்ற நீண்ட புகழினைப் பெற்றார்க ளெவர்களோ அவர்களே பின்னர்த் தேவர்களாய்ப் பொன்னுலகம் புகுந்து ஆங்குள்ள இமையவர் கணங்கள் போற்றிப் புனைந்து புடைசூழ்ந்துநிற்கப் பெருவாழ்வு பெறுவார்க ளென்பதும் சாஸ்திர சித்தமானதே. "நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப்—போற்றாது புத்தேளுலகு." எனவும், "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்—வலவனேவா வான வூர்தி-யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்து." எனவும் பெரியோர் கூறியிருக்கின்றார்கள். இங்ஙனம், இம்மையிலும் மறுமையிலும் மிக்க மேம்பாட்டை யளிப்பதாகிய இப் புகழ் என்னும் பொன்றாத



பொருளை லோகோபகாரமாகப் பலபல காரியங்களைச் செய்து பெற்ற பெரியோர்களது சரித்திரத்தைக் கற்பதனால் நம்மவர்கள் குற்றங் குறைகள் நீங்கி ஒருவாறு சீர்திருத்தம் பெறக்கூடும். அத்தூயோர்களது அனுஷ்டானத்தை முன்மாதிரியாகக்கொண்டு கூடியவரையி லந்நெறியிலேயே ஒழுக முயன்று நம்மவர்கள் மேம்பாடடையவுங் கூடும்.

நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பது நன்றே-நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

ஆதலின் நாம் இங்கே அங்ஙனம் புகழ்படைத்த பெருந்தகை மக்களில் ஒருவராகிய நம் கொடியாலம்-ஸ்ரீமாங்-வாஸுதேவ ஐயங்காரது விஸ்தாரமான புகழ்ச்சரிதத்தை ஒருவாறு சுருக்கமாகக் கூறுவோம்.

புருஷ ரத்னமாகிய நம் ஐயங்கார், பண்டைக்கால முதற்கொண்டே பரம்பரையாய்த் தங்கள் குலத்தாலும், கல்வி பொருள் என்கின்ற இருவகைப் பெருஞ் செல்வத்தாலும், வாய்மை பொறை முதலிய உயர் குணத்தாலும், முக்கியமாய்க் கைம்மாறு கருதாது மேகம் போல வழங்கி வந்த தங்கள் பெருங் கொடையாலும் இத்தமிழ்நாடெங்குமே மிகப் பிரசித்திபெற வாழ்ந்துவந்த ஒரு உத்தம வமிசத்திற் பிறந்தவர். இவரது பிதாவாகிய ரங்கஸாமி ஐயங்கார் என்பவர் "உண்டியளித்தோ ருயிரளித் தோரே" என்றபடி விசேஷமாக அன்னதானஞ் செய்து பலவுயிர்களைத் தந்தவ ராவார். ஓர் தீட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லுமாக விற்ற தாது வருஷப் பஞ்சத்தில் இந்த ரங்கஸாமி ஐயங்கார் என்பவர் ஏனைக் குடித்தனக்காரர்களைப்போல நெல்விற்றுப் பெரும்பொருள் திரட்

டக் கருதாமல் தமது நெல்லையெல்லாம் சுவற்ப விலைக்கு விற்றும், விலையின்றிக் கொடுத்தும் செய்துள்ள மகோபகாரம் ஒருநாளும் மறக்கற் பாலதன்றும். "அற்றார் அழிபசி தீர்த்த லஃதொருவன்—பெற்றான் பொருள்வைப் புழி." என்னும் அருமைத் திருக்குறளுக்குச் சிறந்த நிதர்சனமாக விளங்கிய அக்காலத்து மகாபுருஷர்களில் இவரும் ஒருவரே.

இவருக்குப் பொன்னும், புகழும், ஏனைச் செல்வங்களும் பூரணமாயிருந்தும் "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த—மக்கட்பே றல்ல பிற." என்றபடி யெல்லாவற்றிலும் மேலாகக் கருதத்தக்க நற்புத்திரப்பேறு ஒன்று இல்லாதிருந்தது ஓர் பெருங்குறையாகவே காணப்பட்டது.

"கல்லா மழலைக் கனியூறல் கலந்து நெஞ்சஞ்
சொல்லா லுருக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்து விளையாடு மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வி னின்ப மென்னும்."

என்றபடி மைந்தரில்லாத இல்லறவாழ்க்கை உண்மையில் பயனற்றதேயாம். இக்குறையை நிவர்த்திக்கவேண்டி இவர் அழகிய மணவாளப் பெருமாளை யல்லும் பகலு மனவரதமும் அன்புருகித் தோத்திரித்து வருவாராயினர்.

இவரது பிரார்த்தனைக் கிரங்கிப் பத்துடையடியவர்க் கெளியவனான பெருமானும் கடாக்ஷித்தருள, இவரது மனைவியார் கருத்தரித்து நமது கதா நாயகராகிய புண்ணிய புருஷரை அக்ஷய வருஷம் ஆனிமீ 12-ம் தெய்தியன்று நல்ல சுபமுகூர்த்தத்திலே பெற்றனர். பிறந்த குழந்தை நல்ல லக்ஷணமுள்ளதாய்த் தகதகவெனத் தங்கப்பதுமைபோ லிருக்கக்கண்டு பெற்றோர்கள் அளவிடற்

கரிய ஆனந்தஸாகரத்தில் மூழ்கினவர்களாய் விசேஷ தான தர்மங்களைச் செய்தார்கள்.

குழந்தையும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவரப் பிதாவும் உரிய காலத்திலேயே ஜாதகன்மம் நாமகன்மம் சௌளம் உபநயனம் முதலிய வற்றை முறைப்படி செய்வித்துக் கல்விகற்கும் பருவம் வந்ததும் குழந்தையைக் கலாசாலைக்கு அனுப்பினர்; பாடசாலையில் நமது இளங்குமாரர் வீண்போது போக்காமலும், துஷ்டப்பிள்ளைகளோடு இணங்காமலும் உபாத்தியாயர்களது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஒழுகி அவர்கள் கற்பிப்பனவற்றைக் கருத்தாகக் கேட்டு யாவரும் தம்மை நல்லபிள்ளை யென்று சொல்லும்படி நடந்து வந்தார். பெற்றோர்களிடத்தில் நமது புத்திர சிகாமணியார்க்கு மிகுந்த பயபக்தி விசுவாசமுண்டு; அவர்களது வார்த்தைகளை வேதவாக்கியமாகக் கருதி யவற்றின்படி நடந்து வந்ததால் இவரைக்கண்ட எல்லோரும் "இவன் றந்தை யென்னோற்றான்கொல்" என்று சொல்லிப் புகழ்வார்கள்.

நம் கதாநாயகர் படிப்படியாகப் படிப்பில் முதிர்ச்சியடைந்து தமது பதினைந்தாவது வயதில் பிரவேசபரிக்ஷை யென்னும் மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் தேர்ந்து மத்தியதர பரிக்ஷைக்குப் படிக்கத் தொடங்கும்போது இவர் பிதா பரமபதம் அடைந்து விட்டார்; என்றாலும் இவர் தம் காலேஜுப் படிப்பை யந்தமட்டோடு நிறுத்தவில்லை. குடும்ப விஷயமான காரியங்களை யெல்லாம் தம் சகோதரியின் புருஷரும் மாதுலரும் வகித்துப் பார்த்துக்கொண்டபடியால் இவர் குடும்பக்கவலை சிறிதுமின்றிப் படித்துக் கொண்டிருந்தார். மத்தியதர பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறி பீ. ஏ. பட்ட பரீக்ஷைப் படிப்பை முடித்தவுடன் நமது ஐயங்கார் தாமே தமது எஸ்டேட்டுக்களை

யெல்லாம் ஒப்புக்கொண்டு யாரும் அதிசயித்துப் புகழும் படியாக மிக்க நன்றாகப் பரிபாலிக்க வாரம்பித்தார்.

பொது ஜனோபகாரமான நற்காரியங்களைச் செய்து அதனால் விசேஷமான பேரும் பிரதிஷ்டையும் பெறவேண்டுமென்ற நல்லெண்ணம் எப்போதும் மனத்தில் குடிகொண்டிருந்ததால் நமது உத்தம குணசீலராகிய ஐயங்கார் சமயம் வாய்க்கும்போதெல்லாம் தவறாமல் தம்மால் இயன்ற உதவியைச் செய்துகொண்டே வந்தார். படிப்பு விஷயமானாலும் சரி, வியவசாய விஷயமானாலும் சரி, ராஜாங்க விஷயமானாலும் சரி, மற்றெந்த விஷயமானாலும் சரி அவைகள் நல்விஷயமாகமாத்திர மிருக்குமானால் அவற்றில் நமது ஐயங்காரின் சம்பந்தம் ஒருபோதும் இல்லாமலிராது; எதிலும் தாமே முன்னின்று பாடுபட்டுக் காரியங்களைச் சாதிக்கவேண்டி யதற்கான முயற்சிகளிற்சிறிதுங் குன்றாது பொருட்செலவு செய்தும் தேகசிரமப் பட்டும் இவர் செய்த மஹோபகாரங்கள் பல.

கல்வி விஷயத்தில் நமது வாஸுதேவ ஐயங்காருக்கு இருந்த பிரியத்திற்கு ஓர் எல்லையில்லை. பற்பல பாஷைகளிலுமுள்ள அருமையான நூல்களைச் சேகரித்துப் படிப்பதும், பிரசங்கங்கள் செய்வதும், படிப்பிலாசையுள்ள மாணாக்கர்களுக்குத் திரவியசகாயஞ் செய்வதும், நன்றாய்த் தேர்ச்சியடைந்த மாணாக்கர்களுக்குப் பரிசளிப்பதும், பண்டிதர்களை யுபசரித்துச் சன்மானஞ் செய்வதுமாகிய இத்தகைய பல வழிகளாலும் இவர் கல்வியைத் தம்மாலானமட்டும் விருத்திக்குக் கொண்டுவந்திருக்கின்றார். திரிசிராப்பள்ளியிலுள்ள நாஷனல் ஹைஸ்கூல் என்னும் சுதேச பாடசாலையை இவ்வளவு அபிவிர்த்தியான நிலைமைக்குக் கொண்டுவந்த புருஷோத்தமர் இவரே. இவருடைய பூரணமான உதவி மாத்திர மில்லாதிருக்குமாயின் இக்

கலாசாலைக்கட்டடம் நாற்பத்தையாயிரம் ரூபா செலவில் இவ்வளவு அழகாக ஒருநாளுங் கட்டிமுடிந்திராது.

கொடியாலத்தில் வருஷந்தோறும் இவர் நடத்தி வந்த மகோற்சவ வைபவத்தை யென்னென்று கூறுவோம். ஸீதாதேவியின் ஸௌந்தர்யத்தை வர்ணிக்கப் புகுந்த சூர்ப்பணகை, "தோளையே சொல்லுகேனோ சுடர்முகத் துலவு கின்ற—வாளையே சொல்லுகேனோ அல்லவை வழுத்து கேனோ—மீளவும் திகைப்ப தல்லால் தனித்தனி விளம்ப லாற்றேன்—நாளையே காண்டி யைய நானுனக் குரைப்ப தென்னோ?" என்று கூறியவண்ணமேதான் நாமும் கூறவேண்டியிருக்கின்றது. வைஷ்ணவர் ஸ்மார்த்தர் என்கின்ற இவ்வித வீணான வேற்றுமையைப் பாராட்டாமல் பலவிடங்களிலிருந்தும் இவரால் வரவழைக்கப்பட்ட சிறந்த பண்டிதர்களெல்லாரும் ஒரு பெருஞ்சபையாகக் கூடி தர்க்கம், வியாகரணம், மீமாம்ஸை, வேதாந்த முதலிய சாஸ்திரங்களை யாராய்ச்சிசெய்கின்ற அழகைச் சொல்லுவோமா, வேத பிராமணர்கள் கோஷ்டியாகவிருந்து வேத கோஷஞ்செய்கின்ற விமரிசையை விளம்புவோமா, சங்கீத வித்வான்கள் திவ்யமான சாரீரத்தோடு பட்டமரமும் பாகா யுருகும்படி பாடுகின்ற பான்மையைப் பகருவோமா, பாகவதர்கள் ஹரிகதா காலக்ஷேபஞ்செய்கிற நேர்த்தியை நிகழ்த்துவோமா, ஸ்ரீவைஷ்ணவர்கள் தமிழ்மறையை யோதுகின்ற உயர்ச்சியைத் தான் உரைப்போமா, மேளம் முதலிய மங்கள வாத்தியங்கள் முழங்குகின்ற மேன்மையைச் சொல்லுவோமா, ஷட்ரஸோபேதமாகப் பஞ்சபக்ஷிய பரமான்னத்தோடு செய்யப்படுகின்ற சமாராதனச் சிறப்பை வருணிப்போமா, இவ்வளவு சம்பிரமங்களோடு எம்பெருமான் வீதியி லெழுந்தருளுகின்ற காம்பீர்யத்தைப் புகழுவோமா, எதைத் தான் நாம் முற்றிலும் எடுத்து மொழியக் கூடும்? நேரிற்கண்டு அனுபவித்தவர்

களுக்குத் தான் அப்பிர்ம்மானந்தமான உற்சவத்தின் குதூகல கோலாஹலங்களனைத்தும் நன்றாய்த் தெரியும். அக்கம்பக்கங்களில் 10-மயிலுக்குட்பட்ட ஊரிலுள்ளவர்கள் ஒருவர் தப்பாமல் அவ்வுற்சவம் பத்து நாளும் கொடியாலத்திலேயே குடியாயிருப்பார்கள். வந்துள்ளவர்களையெல்லாம் விசாரித்து உபசரிப்பதில் நம் ஐயங்கார்க்குக் கரைகடந்த பிரீதியுண்டென்பதை நாம் சொல்லவேண்டுவது அநாவசியமாம். வருவிருந்தை யுபசரிக்கும் விஷயத்தில் தமக்குள்ள பிரீதி மற்றெதிலும் இல்லையென்பதை இப்பெருமைவாய்ந்த புருஷர் தம் அரிய நண்பர்களிடத்தில் பன்முறை சொல்லியிருப்பதை நாம் அறிவோம்.

இவ்வாறு பரோபகாரமான காரியங்களைச் செய்வதும், படிப்பைப் பலவழியாலும் பரவச்செய்வதும், ஏழை எளியார்க்கீவதும், பிரசங்கங்கள் புரிவதும், மேதாவிகளான பெரியோர்களது நட்பைப்பெற்று அவர்களோடு பற்பல விஷயங்களைப்பற்றிப் பேசுவதுமாய்த் தமது அரிய வாழ் நாளைப் பயன்பெறச் செலுத்திவரவே இவரதுபுகழ் எங்குங் கொழுந்தோடிப்படர ஆரம்பித்தது.

நாட்டார்க்கு நல்லனவற்றைப் புரிந்து நடுநாயகமாய் விளங்கி வந்த இப்புருஷ சிரேஷ்டரது மாசற்ற ஒழுக்கத்தையும், சிறந்த விசாலமான அறிவையும், மேலான நல்ல எண்ணங்களையும், குடிபடைகளிடத்து அன்புடையவராக நடந்துகொண்டு தமது எஸ்டேட்டைப் பரிபாலித்து வரும் சாமர்த்தியத்தையுங் கண்டு, இராஜாங்கத்தார் இவரைப் பெரிதும் நன்குமதித்து, இத்தமிழ் நாட்டிலுள்ள பிரபுக்களிலெல்லாம் இவரையே பிரதானமானவரென்று கொண்டு, குடிகளுக்கு ஆகவேண்டிய காரியங்களையெல்லாம் இவர் மூலமாகவே கேட்டுத் தெரிந்து செய்து வந்தார்கள். குடிகளும் தங்களுக்குள்ள குறைகளை யிவர் மூலமாகவே இராஜாங்கத்தார்க்குத் தெரிவித்து வந்தார்

கள். இப்படி இராஜாங்காத்தாருக்கும் குடிகளுக்கும் வேண்டியவராகவே, ஜில்லாபோர்டு தாலூகா போர்டு முனிசிபாலிடி, தேவஸ்தானம் முதலிய எல்லாவற்றிலும் இவர்க்கு மெம்பர்ஸ்தானம் தானாகவே கிடைத்தது. இவரும் மேற்கூறிய ஸ்தானங்களிலிருந்து செய்த நன்மைகள் அளவிடற்கரியவாம்.

காங்கிரஸ் மகாசபை யென்று சொன்னால் போதும். கேட்டமாத்தரத்தில் தம்மை யறியாமலே இவர்க்கு உற்சாகம் கிளம்பிவிடும். ஒவ்வொரு வருஷமும் இச்சபை விஷயமாக இவர் எடுத்துக்கொண்ட கவலைக்கும் பிரயாசைக்கும் கணக்கில்லை. தனித்தனியே ஒவ்வொருவரிடத்தும் போய் இச்சபைக்காகத் திரவியம் சேர்க்க இவர் பட்டபாடும் அனந்தம். இவற்றை யெல்லாம் ஒவ்வொன்றாகச் சிந்திக்கும்போது இம்மறுவிலா மாணிக்கத்தைக் கை தவறவிட்ட நாம் இப்போது சிறகிழந்த பக்ஷிபோலாய்விட்டோமென்பதிற் றடையில்லை.

இச்சுந்தர புருஷர் இவ்வாறு அளப்பரிய நன்மைகளை யெல்லாம் லோகோபகாரமாகச் செய்துகொண்டு ஜனங்களுக்கெல்லாம் ஒரு கண் போலச் சிறந்து விளங்கிக் கொண்டிருந்தார். இங்கிலையில், சென்னைச்சட்ட நிரூபண சபையில் குடிகளுக்குப் பிரதிநிதியாக ஒரு மெம்பரை நியமிக்க வேண்டுமென்னுங் கருத்துக்கொண்டு மாக்ஷிமை தங்கிய கவர்னவர்கள் அந்த ஸ்தானத்திற்குத் தத்கவர் யார் என்று விசாரிக்கையில் நமது ஸ்ரீமாங் வாஸுதேவ ஐயங்காரே எல்லாப்படியாலும் ஏற்றவரென்று சொல்ல, உடனே அந்த ஸ்தானத்தை வகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கவர்னவர்கள் ஐயங்காருக்குக் கடிதமெழுதினார்கள். நமது பெருந்தகையாரும் அக மகிழ்ச்சியோடு அந்த வேலையை யொப்புக்கொண்டார். இவர் சட்ட நிரூபண சபையில் மெம்பராயினார் என்ற

சமாசாரம் எட்டியதும் இவருக்கு அங்கங்கே பற்பல விடங்களிலுமுள்ள பெரிய மனிதர்களிடத்திலிருந்தும் நண்பர்களிடத்திலிருந்தும் வந்த தந்திகளும் கடிதங்களும் எத்தனையென்று சொல்வோம்! இக்கடிதங்களிலெல்லாம் டாஸ்மேனியாவிலிருந்து வந்த கடிதமே மிகவும் மேலானது. இது முன்னம் இச்சென்னையில் கவர்னராயிருந்த ஸர் ஆர்தர் ஹாவ்லக் என்பவர் எழுதியதாம். இதில் அக்கவர்னரவர்கள் ஐயங்காரை எனது அரிய நண்ப என்றும், கையெழுத்துப் போடும்போது அந்தரங்க நேசன் ஆர்தர் ஹாவ்லக் என்றும் எழுதியிருக்கின்றார்கள். இதனால் ஐயங்காரிடத்தில் அக்கவர்னரவர்கள் வைத்திருந்த பக்ஷமும் விசேஷ கவுரவமும் இப்படிப்பட்டதென்று நன்றாய்த் தெரிகின்றதல்லவா? ஒவ்வொருவரும் தங்களுக்கே அவ்வேலை கிடைத்ததாக நினைத்து ஆனந்தித்தார்கள். முன்னம் எத்தனையோ பெயர்கள் பார்த்துவந்த வேலைதானே, இவருக்கு அவ்வேலை கிடைத்த விஷயத்தில் ஜனங்களுக்கேன் இவ்வாறு அடங்காத மகிழ்சியுண்டாக வேண்டும்? என்று சிலர் கேட்கலாம். அதற்குச் சமாதானங் கூறுவதற்காகவே நாம் தலைப்பில் ஒரு படத்தைக் காண்பித்திருக்கிறோம். சட்ட நிரூபண சபை மெம்பரானதும் நமது வாசுதேவ ஐயங்காரைக் கொண்டாடுவதற்காக ஸ்ரீரங்கத்திற் சபை கூடியபோது எடுக்கப்பட்டது இப்படம். உற்றுநோக்கின் இப்படத்தில் வியாபாரிகளும், வியவசாயிகளும், மிராசுதார்களும், உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும, உத்தியோகஸ்தர்களும், வைதிகர்களும், வினைத்தெரியாத சிறுபிள்ளைகளும், பெரிய பண்டிதர்களுமாகப் பலரிருப்பதைக் காணலாம். எங்கே கூட்டங் கூடினாலுஞ்சரி அக்கூட்டத்தின் கருத்திற்கேற்ப ஒருவகையான ஜனங்களே வந்து சேருவது இயற்கை. இங்கே யவ்விதங் காணோம்; பற்பல துறைகளிலுமுள்ளவர்களாகக் காணப்

படுகிறார்கள்; ஏனெனின், சபை கூடிய நோக்கத்தை இன்னதென்று தெரிந்துகொண்டு அதற்காக வரவில்லை இங்குள்ளவர்கள். ஸர்வஜன சுகிர்த்தாகிய நமது ஐயங்காரை யுத்தேசித்தே வந்தவர்கள். இதனால் எவ்வழியாகவோ நமது ஐயங்காரிடத்தில் சிறு குழந்தைமுதல் விருத்தர்களீறாகவுள்ள எல்லாவித விருத்தியி லுள்ளவர்களுக்கும் விசேஷ கவுரவமும் விசுவாசமும் உண்டென்று நன்றாகத் தெரிகின்றதல்லவா?

ஸ்ரீரங்கத்திற் கூடிய அச்சபையின் பெருமையை யாம் என்னென்று சொல்வது! ஒவ்வொருவரும் அடங்காத மகிழ்ச்சிகொண்டு நமது வாசுதேவ வள்ளலை மனங்குழைந்து பற்பலவிதமாக வாழ்த்தினார்கள். வியவசாயிகள் கஷ்டம் விடிந்ததென்றும், வியாபாரம் விர்த்தியாகுமென்றும், வைதிக மார்க்கம் வளம்பெறுமென்றும், வித்தியாசாலைகள் விளங்குமென்றும், குடிகள் கொழிக்குமென்றும், அரசாங்கம் அழகுபெறுமென்றும், நாடெல்லாங் கேடின்றிக் கிளருமென்றும் இவ்விதம் அவ்வவர்களும் தங்கள் தங்கள் மனோரதத்திற் கிணங்கச் சொல்லிப் பாராட்டினார்கள். இந்தச்சபையில்தான் ஜனங்கள் அபிப்பிராய பேதமில்லாமல் ஏகமன முடையவர்களாய் வந்திருந்து சந்தோஷித்துச் சென்றதை நாம் முதன்முதலாகக்கண்டோம். கொடையாற் சிலரும், கல்வியாற் சிலரும், அறிவாற் சிலரும், ஒழுக்கத்தாற் சிலரும், செல்வத்தாற் சிலரும், வீரத்தாற் சிலரும், லோகோபகாரத்தாற் சிலரும் புகழ்பெறுவதை நாம் கண்டிருக்கின்றோம். சிலரிடத்தில் இரண்டு மூன்று நன்மைகள் அமைந்திருப்பது முண்டு. ஐயங்காரைப் போல எல்லா நன்மைகளுமொருங்கே பொருசிராக அமையப்பெற்றுப் புகழ்பெற்றவர்கள் மிகவுஞ்சிலரே. இதனாலன்றோ எல்லா மக்களும் இவரைக் கொண்டாடலானார்கள்.

ஐயங்காரும் சட்ட நிரூபணசபை மெம்பர் ஸ்தானத்தை யாரும் மெச்சும்படி செவ்வையாகவே வகித்துப் பார்த்துவந்தார். முதன்முதல் இவர் சபையில்பேசவேண்டிய விஷயம் இச்சென்னை மாகாணத்தின் வரவு செலவுக் கணக்கைப் பற்றியதாயிருந்தது. எல்லாவற்றிலும் இது மிகவும் முக்கியமான விஷயம். நீண்டநாள் சாவகாசத்தில் நன்ருக ஆராய்ந்து பார்த்தவர்க்கன்றி மற்றையோர்க்கு ஒன்றும் புலப்படாது. இவ்விஷயத்தை நமது ஐயங்கார் தமக்கு வேலை கிடத்த இரண்டு வாரத்திற்குள் கூடிய சபையில் மிக அழகாகவுஞ் சாதுரியமாகவும் எடுத்துப் பேசினர்களென்ருல் இவரது புத்திவிசாலத்தைச் சொல்லவும் வேண்டுமோ? மற்றும் அச்சபையிலுள்ள மெம்பர்களெல்லாரும் இவ்வளவு பெரிய விஷயத்தை இந்தச் சிறிய சாவகாசத்தி லாராய்ந்து அநேக நாள் பரிசிரமப்பட்டுத் தெரிந்து கொண்டவர்போலப் பேசினது மிகவும் ஆச்சரியமானதே என்று ஐயங்காரது புத்தி நுட்பத்தைப்பற்றிப் பெரிதும் பாராட்டி யுரைத்தார்கள். சபைகூடுகின்ற ஒவ்வொரு முறையிலும் இவர் இங்ஙனமே யேனைய மெம்பர்களால் புகழப்படத் தக்கவரானுர். "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை—வெல்லுஞ்சொ லின்மை யறிந்து." என்று நாயனுர் கூறியபடி பிறர் மறுத்துக்கூற இடமில்லாமல் விஷயங்களை நிரந்து இனிமையாகவும் கம்பீரமாகவும் எடுத்துப்பேசி நன்மை புரிவதில் நம் வாஸுதேவ ஐயங்கார் எல்லாரினும் மேலாக விளங்கினுர். குடிகளுக்குள்ள குறைகளையெல்லாம் மிக்க அனுதாபத்தோடு எடுத்துக்காட்டி அவைகளை நிவர்த்திக்கவேண்டிய மார்க்கம் இன்னதென்பதையும் தெரிவித்து ஒவ்வொரு சமையத்திலும் இவர் புரிந்த பிரசங்கங்களால் விளைந்த நன்மைகளுக்கு எல்லையில்லை.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்—

வேட்ப மொழிவதாஞ் சொல்." என்றபடி யாரும் விரும்புமாறு சொல்லவல்ல இவரது கல்வித்திறத்தையும் வியவசாய விஷயத்திலிவர்க்குள்ள மிக்க அநுபவஞானத்தையும் கண்டு மாக்ஷிமை தங்கிய கவர்னரவர்கள், திரும்பவும் இவரையே மேற்கூறிய ஸ்தானத்திலிருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அவ்வேண்டுகோட் கிணங்கியிரண்டாவது முறையும் அவ்வேலையை யொப்புக்கொண்டு இவர் முன்னிலுந் திர்ப்திகரமாகவே பார்த்துவந்தார்.

ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட மெம்பராயிருந்தும் இவர் அவர்களது அபிப்பிராயத்தை மட்டுமே தழுவிப்போகாமல் குடிகளுக்குச் சார்பாகவேயிருந்து அரசாங்கத்தாரது அநீதிகளைக் கண்ணோட்டமின்றி யெடுத்துக் காட்டி யெத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கின்றார். மேலும், இவர் கவர்னர் கலெக்டர் முதலிய பெரிய உத்திபோகஸ்தர்களைத் தனியாகச் சந்திக்க நேரும்போதெல்லாம் குடிகளுக்கு ஆகவேண்டிய காரியங்களை யொவ்வொன்றாக எடுத்துச்சொல்லி விளைவித்த மகோபகாரங்களும் மிகப்பலவாகும்

இக்கருணை வள்ளலார் ஒருபோதும் பிறர் துயரங் காணச் சகிக்கமாட்டார். அரிய நண்பர்களாயினும் நெருங்கிய உறவினர்களாயினும் அவர்கள் நோய் முதலிய வற்றால் வருந்தக் கேட்டால் இவர் தூரவிருந்து வேண்டிய உதவிகளைச் செய்வது வழக்கமேயொழிய நேரிற்போய்ப் பார்ப்பது இல்லை. பிரீதி யின்மையினாலோ வெனின், அன்று, அன்று. அத்துன்பத்தைக்கண்டு சிறிதும் சகிக்க மாட்டாத அவ்வளவு இளகிய மனமுடைமையே இதற்குக் காரணமாகும். "அல்லல் அருளாள்வார்க் கில்லை." என்று நாயனார் கூறியபடி யிவர் யாவர்மாட்டும் அருளுடையரா யிருந்தமைபற்றியன்றோ இவர் தம் அரிய வாழ்நாள் முழுதிலும் துன்பமென்பதையே யறியாமல் இன்ப

முற வாழ்ந்து வந்தார்.

இவரிடமிருந்த உத்தம கலியாண குணங்கள் எல்லாவற்றுள்ளும் மிகவும் மேம்பட்டது இவரது ஒப்புயர்வற்ற வைதிக சிரத்தையே. எச்சமயத்திலும், எந்த விடத்திலும் இவர் வைதிக நெறியைவிட்டுச் சிறிதும் வழுவினரல்லர். ஜில்லா கலெக்டராக விருந்த ஒரு ஆங்கிலேயரை ஒரு சமயம் இவர் பார்க்கப் போயிருந்தபொழுது அவர் மிகவும் ஆதரவுடன் நமது ஐயங்காரை வருந்தியழைத்துச் சாப்பிடும்படி கொடுத்த சில பழவகைகளைக்கூட இவர் அவ்வதிகாரிக்கு வருத்தமுண்டாகுமென்று தெரிந்தும் அருந்தமாட்டோமென்று மறுத்ததும், தேக அசௌக்கியமாயிருந்த காலத்தில் யாதுகாரணம் பற்றியும் அநாசாரமான மருந்துகளை யுட்கொள்ளச் சம்மதியாததும், 'தமக்குரித்தான வர்ணாச்ரம தர்மங்களை எவ்வளவு சங்கடமான காலத்திலும் கைவிடாமற் காப்பாற்றுவதே எல்லாவற்றிலுமேலானது' என்னும் இவரது உறுதியான கொள்கையை நன்றாக வலியுறுத்துகின்றன வல்லவா?

சுருங்கச்சொல்லின், இவர், "அன்புடையா—ரென்புமுரியர் பிறர்க்கு" என்பதையும் "ஒல்லும்வா யெல்லாம் அறவினை யோவாதே—செல்லும்வா யெல்லாஞ் செயல்" என்பதையும் கடைப்பிடியாகக்கொண்டு தம்முடல் பொருளாவியை யெல்லாம் உலகிற்காகவே தத்தஞ்செய்த தயாநிதி.

பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்.

பழிக்குப்பழி.

மறு நாள் சந்திரவதனன் புகை வண்டியி லேறிச் செல்வதைக் கண்டேன். என்னைப் பார்த்ததும் சிறிது மனவருத்த மொழிந்தான். கையில் ஒரு மஞ்சணிறமுள்ள கடிதம் போட்ட புத்தகத்தை வைத்துக்கொண்டிருந்தான்.

அது என்ன புத்தகமென்றேன். "வினைத்தது விளைந்தது" என்று வாசித்தான்.

"அது நீ அவசியம் வாசிக்கவேண்டிய புத்தகமே. நன்று செய்தாய், கவனமாய் வாசிக்கக்கடவாய்." என்றேன்.

புகைவண்டி புறப்பட ஆரம்பித்தது. உடனே என்னை அருகிலழைத்து,

"நான் சொல்லியதை ஞாபகத்தில்வைக்கவேண்டும். அவளைச் சாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டும்."

"முன்னர் நீ பாதுகாத்தவண்ணம் நான் காக்கிறேன். பயப்படவேண்டாம்." என்று இருபொருள்பட உரைத்தேன். மறுநிமிஷம் நான் மாத்திரம் தனியே நின்றேன்—நான் நினைத்ததைச் செய்யலாம்—என் மனைவியை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். பிரியப்பட்டால் அவளைக் கொலையும் செய்யலாம். ஒருவரும் தடைசெய்யார்கள். நான் இன்னனென்பதை இன்றை சாயங்காலமே போய்ச்சொல்லி அவளைக்கொல்லலாம். இராஜாங்கத்தாரும் என்மீது குற்றம் பாராட்டார்கள். நான் என் இவ்விதம் செய்யவேண்டும்? கொலைகாரன் என்றபெயரை என் அடையவேண்டும்? நான் முதலில் நினைத்தவண்ணம் அவளைத்

தண்டனைசெய்வேன்—நிதானத்துடன் செய்யவேண்டும்—ஆம்—நிதானமாக இருப்பது கடினமே; ஆயினும் திருப்தி யடைய வேண்டுமானால் சாவதானமாக வேலையை நடத்தவேண்டும். இவ்விதம் நான் எண்ணிக்கொண்டு அடிமேல் அடிவைத்து நடந்து கொண்டிருக்கையில் என் வேலையாள் எதிரே வந்தான்.

"என்ன விசேஷம்?" ஒருகடிதத்தைக்கொடுத்தான்.

"கல்யாணி கஷ்டப்படுகிறாள். உடனே வரவேண்டும். பிரியமுள்ள ஹேமாங்கினி" என்று எழுதியிருந்தது.

மிகவும் அவசரமாய் (என்?) வீட்டையடைந்தேன். என்னைக் கண்டதும் கல்யாணி விம்மி அழ ஆரம்பித்தாள். மிகவும் வருத்தமடைந்தேன். அணையும் விளக்கு பெருஞ்சுடர் விட்டொழிவதைப் போலக் கல்யாணி இறைவன் திருவடியை யடைந்தாள். திரும்பி என் மனைவியையுங் கவனியாமல் என் இருப்பிடத்தையடைந்தேன். மனவருத்தம் என்னை ஒன்றும் செய்யவிடவில்லை. கடைசியில் ஒருவாறு தேறி அவள் இறந்ததே நலம் என்று எண்ணினேன். கடைசியாக யோசிக்க யோசிக்க அவள் இறந்ததாக எனக்குத் தோற்றவில்லை. என் அருகினில் அவளை என் கண்மணி கல்யாணியைப்பெற்றதாகத் தோன்றியது—ஆம். பின்னர் என்ன நடக்குமோ ?—எவருக்குத் தெரியும் ?—அவள் வயதுற்ற ஸ்திரீயாவாள்—பிறகு என்ன? நல்ல ஸ்திரீகளும் என்ன அடைவார்கள்?—துக்கமும், துன்பமும், கஷ்டமும் அடையப்பெறாத விருப்பமும், சுயேச்சையின்மையையுமே—ஏ! மாந்தர்காள்!—உங்களுக்கு விரோதமாகத் தோற்றினும் தோற்றலாம்—புருஷர்களிலும் பெண்கள் தாழ்ந்தவர்களே!—அவர்கள் வலியுங் குறைந்தவர்கள். உலகத்திற்கு யாதொரு நன்மையும் புரியச் சக்தியற்றவர்கள். இக்காரணங்களால் ஸ்திரீ ஜன்மமே நம் பரிதாபத்திற்கு ஏற்றதாகிறது. அவள் நல்லவளாயிருந்தால் தன் நாதனின் பிரியமும், காப்பும், துணையும் அடைகிறாள். தீயவளாயின் ஏற்றதையடைகிறாள்—அவனிரக்க மின்மையையும் மரியாதையின்மையையும் அடைகிறாள். இவைகளுக்கெல்லாம் பாத்திரையாகாமல் என் அருமைக் கல்யாணி இறந்ததைக் குறித்துச் சந்தோஷமடைந்தேன்—ஆம். என்னை இரக்கமற்ற பாவி என்று சொல்லாதீர்கள்—(என்?) மனைவிக்கும் எனக்கும்இருந்தஅன்பின் அறிகுறியாயிருந்தகண்மணியை

இறைவனே பிரித்துவிட்டான். அவள் வேறு. யான் வேறு. மோக மும் பொய்மையும் சேர்ந்த சங்கிலியின்க ணிருந்த ஒருவுண்மை யான பாகம் நீங்கிவிட்டது. கல்யாணி இறந்தது எனக்குச் சந் தோஷமா வருத்தமா? என்னும் கேள்வி நூறு விசை எனக்குள் கேட்டுக் கொண்டேன். உண்மையை ஒப்புக் கொள்கிறேன். எனக்குச் சந்தோஷமே அவளிறந்தது. ஆம். சந்தோஷமே ஆம். என்குழந்தை இறந்ததுசந்தோஷமே—ஒருகால் இரக்கமற்ற பாவி என்று நினைப்பீர்கள்—நான் ஏன் அவ்விதம் நினைத்தேன் என்று கேட்பீர்கள்? அவள் உயிருடன் இருந்தால் மிகவும் துன்பத்தை அனுபவிப்பாள். இப்பொழுது இன்பத்தை யடைவாள். அவளுக் காகவேனும் இந்த ஹேமாங்கினியைக் கொலை செய்யாதொழி யேன். என் கவுரவத்திற்கு நேரிட்ட கொடுமையைச் சகித்து ஒரு க்ஷணமேனும் வாழ்ந்திரேன். மேலைத்தேயத்தவரையொப்ப இவ் விஷயங்களுக்கு நியாயஸ்தலத்தின் உதவியை நாடி மகிழ்ச்சியடை யேன். சிலர்க்கு மேன்மையானதென்று தோன்றினும் தோன்றும். தன் கவுரவத்தில் ஒருவனுக்கு இருக்கும் மதிப்பே ஒழிந்துவிடும். இருவரையும் நியாயஸ்தலம் பிரித்துவிடுகிறது—பலர் நகைக்கும் ஏமாந்தநாயகன் குறியாகிறான். அம்மாதிரி யான் செய்யவிரும் பேன். அது எனக்குத் திருப்தியைத் தரமாட்டாது. அவ்விதம் நியாயாதிபதியால் பிரிக்கபட்டவர் திருப்தி யடைகிறார்களா? ஒரு காலும் அடையமுடியாது. மனத்துயரம் மாணவனிடமிருந்து ஒழியவே ஒழியாது. எந்த ஏமாந்த புருஷன் தன் எதிரிக்கு மனை வியை இன்பமுடன் அளிப்பான்? ஒரு கால் ஒரு புருஷன் தன் மனைவியினிடம் சந்தேகம் கொண்டு தள்ளிவைத்தான். அவள் எண்ணில்லாத புருஷ ரத்தினங்களைச் சேர்ந்து யாவராலும் கவு ரவப்பட்டிருந்தாள். சிலகாலமானதும் அவள் மணவாளனே அவள்மீது அன்புற்று மறுபடியும் சேர்த்துக்கொண்டான். அந்தப் புருஷன் யாவராலும் இகழப்படுகிறான். ஆனால் அந்தப் பெண் மணியோ சாணையில் தீட்டலும் ஒளிருகின்ற மணியென விளங்கு கிறாள். ஆம். தற்காலத்தைய கற்பு இத்தகைத்து. அவன் அவளுக் கேற்ற புருஷனல்லன் என்று தற்காலத்தில் அநேகர்சொல்வதைக் கேட்கின்றோம். யான் அவ்விதம் அவர்கள் சொல்ல இடங் கொடேன்.

ஸ்திரீகளை எக்காலத்திலும் நம்பக்கூடாது. அவள்சொல்லும் இனியமொழிகளினல் ஏமாறக்கூடாது. தெரியாமல் செய்தேன் என்று கண்ணீர் விடுவது அவர்கள் வழக்கம். மனிதன் இரக்கத்தை யடையும்பொருட்டு அவர்கள் வைத்திருக்கும் ஒரு கருவி. எந்த தீமைக்கும் பெண்களே காரணம். மோக்ஷவாசற்படியை யடைக்கும் தாள் ஸ்திரீகள். பெண்களின் கொடுமையினலேயே அநேக மனிதர்கள் இறக்கின்றனர். ஆம். இறத்தலென்ருல் என்ன? பேசாமையே இறத்தல். அவ்விருளைக்கண்டு சிலசமயம் நாம் பயப்படுகிருேம். சில சமயங்களில் ஆச்சரியமும் அடைகிருேம். இறத்தல் உயிருட னிருத்தலினுமோ தீது?

கல்யாணி இறந்து பத்துத்தினங்களாயின. பிறகு அனேக நாள்களில் பகற்பொழுதெல்லாம் என் மனைவியுடன் கழித்துவந்தேன். என்னைக் கண்டபொழுதெல்லாம் சந்தோஷமாக இருப்பாள். தன் அழகை நாளுக்கு நாள் விளங்கக் காட்டிக்கொண்டாள். தான் அழகி என்பதை யுணர்ந்தவளாகையால் என்னை மயக்கப்பிரயத்தனப்பட்டாள். நான் அன்றைச் சாயங்காலத்திற் போல ஏமாறவில்லை. அழகின் பயனை முற்றுமடைந்தேன். சூடுண்ட பூனை நெருப்பையணுகுமோ? நான் அவளழகைச் சிறிதும் கவனிக்கவில்லை. என்னை அவள் காதலிக்க ஆரம்பித்தாள்! நான் மௌனத்துடன் ஏற்றவனைப் போலத் தோற்றினேன். அவளுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுதும் 'ஸ்ரீ வாணி விலாஸினீ' யைப்போன்ற இனிய புத்தகங்களை வாசித்துக் கொண்டிருப்பவனைப் போலத் தோற்றுவேன். அவள் மேகவர்ணப் புடவையினலும் சிரிய திலகத்தினலும் மயக்க மடையவில்லை.

எங்களிருவர்க்கும் மதுரையினின்று சந்திரவதனன் அடிக்கடி கடிதங்கள் எழுதுவான். கல்யாணி இறந்ததைக்குறித்து மிகவும் வருத்தப்படுவதாக எழுதியிருக்கிருன் என்று ஹேமாங்கினி சொன்னுள். என்னுடைய கடிதத்தில் அது விஷயத்தை வேறு விதமாகச் சொல்லியிருக்கிருன். "நான் கல்யாணி இறந்ததைக் குறித்து மிகுதியும் விசனப்படவில்லை. ஏனெனின் அவள் உயிருடன் இருந்தால் புஷ்பமித்திரனின் ஞாபகம் அடிக்கடி எனக்கு வருகிறது. அவன் ஞாபகம் எனக்கு வரலாகாது என்று நினைப்பேன். இது விஷயத்தில் இறைவன் எனக்குத்துணை செய்தான். அவள் எங

சன் வழியினின்றும் விலகினதைக் குறித்துச்சந்தோஷப்படுகிறேன்" என்று எழுதியிருக்கிருன். உண்மையாக இவர்கள் வழியினின்றும் விலகின விஷயத்தில் எனக்கும் சந்தோஷமே. அதே கடிதத்தில் "என் பெரிய தகப்பனுர் இறக்குந் தருணத்தையடைந்திருக்கிருர். வழிதிறந்திருந்தும் சாவதானமாகப் போக மனமிலாதிருப்பதைப் போலக்காண்கிருர். அதிக தாமஸம் ஆகாது என்று வைத்தியர்கள் சொல்லிவிட்டார்கள். எவ்விதத்தும் இங்கு அதிக நாள் தங்கி இரேன். யான் அவர் இறந்த பிறகு அடையக்கூடிய செல்வமனை த்தையும் இழப்பினும் இங்கு அதிக தினங்கள் தங்கியிரேன். என் பிரியமுள்ள ஹேமாங்கினியை விட்டுத் தனியே தங்கியிரேன். தாங்கள் பிரியமுடன் பாதுகாத்திருப்பினும் அவளைப்பற்றிய ஞாப கமே என்னைத் துயரப்படுத்துகிறது. என் செய்வேன்?"

இந்த இரண்டு பாகங்களையும் அவன் கடிதத்தினின்றும் என் மனைவிக்கு வாசித்துக்காட்டினேன். அவள் முகத்தைக் கவனத் துடன் பார்த்து நின்றேன். சிறிது வருத்தமடைந்தாளேனும் சாமர்த்திய சாலினியாகையால் சிரித்துக்கொண்டு,

"என்ன மூடனுக இருக்கின்ருன்? என்னைப்பற்றிய கவலை இவனுக்கு என்னத்திற்கு? ஏதோ என் பிராணநாதரின் நண்பனெ ன்று சிறிது மரியாதை வைத்திருந்தேன். அந்த மரியாதையைக் காதலாக மயங்கித் தடுமாறுகின்றனனன்ருே?" என்று கொடுமை யாகச் சொன்னுள்.

"ஏ! ஹேமாங்கினி! சந்திரவதனன் உண்மையாக உன்னிடம் காதல் கொண்டிருக்கிருன். உன் புருஷன் நண்பனுயிருந்தவன் மணவாளனுக நினைத்திருக்கிருன்."

ஆ! ஆ! என்ன நாடகம்? பெண்களைத்தான் நடர்களாக நாடக சபையோர் ஏற்படுத்தவேண்டும். சிறிதேனும் நான் சொல்லிய மொழியால் தடுமாற்றமடையாமல் பரிகாசச் சிரிப்புச் சிரித்து "என் னமூடன்? அவன் எண்ணங்களெல்லாம் வீணுகப்போகின்றன. என்னையா அப்பேதை மணக்க நினைக்கிருன்?" என்று சொல்லிக் கொண்டு என் அருகில் உட்கார்ந்தாள்.

"ஆம். என்னிடம் அவ்விதம் சொன்னுன்."

"சரி. அவனை மணப்பது மிகவும் சவுரவமே. சித்திரந்தீட்டு மவனைத்தானு மணக்கவேண்டும்? நன்ருக நினைத்தான்." என்று

அவள் சிரித்தாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கு ஆச்சரிய முண்டாயிற்று. என்னமோசம்? அவ்வளவு பிரியத்துடன் அவனைக்கட்டியணைத்ததும், தந்திநிற்கும் முத்தங்களும், பிரியேனென்ற உறுதி மொழியும், கொஞ்சும் வார்த்தைகளும் இவ்வளவு பயன் படாமலா போயின? இவைகளெல்லாம் நீர்மேலெழுத்தைப் போலவா மறைந்தொழிந்தன? சந்திரவதனனைக் குறித்து யான் இரக்கமடைந்தேன். என் விதியைப் போலவே அவன் விதியும் அவளாலாயிற்று. இது என்ன ஆச்சரியம்? நான் என் இரக்கமடைய வேண்டும்? நான் இவைகளை யெல்லாம் முன்னமேயே எதிர்பார்க்கவில்லையா? என் பழிக்குப்பழியின் பாகம் இதுவுமொன்றேயல்லவா?

"புருஷோத்தமரே! நீரே யோசித்துச் சொல்லும். நான் அவனை விரும்புவேனோ?

"என்? விரும்பினாலென்ன? அவனை மணப்பதுதான் நேரானது. அவன் சிறுவயதினன். அழகுடையவன். அவன் சிறிய தந்தை இறந்ததும் செல்வவந்தனாவான்—இவைகளைத்தவிர உனக்கு என்ன வேண்டும். ஸ்திரீகள் விரும்பும் அழகு, இளமை, செல்வம் ஆகிய மூன்றும் அவனிடமிருக்கின்றன. மேலும் அவன் உன் முன்னைய நாயகனின் நண்பன்———"

"அதற்காகத்தான் அவனை நான் மணக்கமாட்டேன். அவனிடம் எனக்குப் பிரியமிருந்தாலும் (எனக்கு அவனிடம் சிறிதேனும் பிரியமில்லை.) உலகத்தார்க்காகவும் யான் அவனை மணக்கமாட்டேன்."

"அம்ம! நீ சொல்வது எனக்கு நன்ருய்த் தெரியவில்லை."

"என் நாயகனின் நண்பனை நான் மறுபடியும் மணந்தால் உலகத்தார் எங்களிருவர்க்கும் தகாத நேசம் முன்னமேயே இருந்ததாக நினைப்பார்கள். அந்தப் பழிச்சொல்லை யான் கேட்க மாட்டேன்."

இன்னும் வரும்.

சருக்கை இராமசாமி ஐயங்கார் பி. ஏ.



இச்சஞ்சிகையில் இத்தகைய ஓர் பிரிவை ஏற்படுத்திய இரண்டாவது மாதத்திலேயே இதில் ஆனரபிள் கொடியாலம் வாஸுதேவ ஐயங்காரவர்கள் மரணத்தைக் குறித்து எழுதவேண்டி வருமென்று ஸ்வப்னத்திலும் நாம் நினைக்கவில்லை. இவர் உடம்பு அஸௌக்கியமாயிருந்த சமயத்தில் இவரை நாம் பார்த்தபொழுது கூட இவருக்கு இவ்வளவு சீக்கிரத்தில் முடிவு வருமென்று எண்ணுவதற்கிடமில்லாமலே யிருந்தது. இந்தப்பெருமைவாய்ந்த புருஷன் இவ்வளவு பால்யத்தில் இறந்தது நமது தமிழ் நாட்டைப் பிடித்த பெருத்த துர்ப்பாக்கியமே. இவரிலும் தனிகர்களாகவும், படித்தவர்களாகவும் உள்ளவர்கள் பலரிருப்பினும் எவ்வாற்றானும் மேம்பட்டவர் இத்தென்னிந்தியாவில் இவரொருவரே. இவருக்கு ஆயுஸ் ஒன்று தவிர வேறொன்றிலும் குறையில்லை. இவரது ஔதார்யமும், காம்பீர்யமும், பூததயையும், வாத்ஸல்யமும், ஆசாரமும், அனுஷ்டானமும், வைதிகசிரத்தையும், தெய்வபக்தியும்,

பெருந்தகைமையும் உரைக்கற்பாலதன்று. சுருங்கச்சொல்லுமளவில் ஸமஸ்தவிதமான நற்குணங்களுக்கும் இவர் ஒரே இருப்பிடமாயிருந்தார். இவருக்குச்சிறிது முன் கோப முண்டென்று சிலர் கருதக்கூடுமாஞலும் 'விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே, சீரொழுகு சான்ருேர் சினம்' என்றபடி உடனே உண்டாகும் பச்சாத்தாபத்தால் அது நொடிப்பொழுதில் விலகிவிடும். யாருமே இவரை நல்லவரென்று கொண்டாடுகிருர்களே யன்றி ஒருவரேனும் வேறு எவ்வித வார்த்தையும் சொல்வதற்கிடமில்லை. இவருக்கு விலாஸினீ யிடமிருந்த அபிமானத்துக்கும் நம்மிடமிருந்த நேசத்துக்கும் ஒரெல்லையில்லை. ஆதலால் இவரை விட்டுப் பிரியும்படி நேர்ந்ததில் நமக்குண்டாயிருக்கும் துக்கத்திற்கு ஒருவிதத்திலும் ஆறுதலில்லை. அதிக துக்கத்தால் நமக்கு வேறென்றும் எழுதத்தோன்றவில்லையாதலால் நமது நேயர்களை இந்த ஸஞ்சிகையில் பிரசுரித்திருக்கும் இவரது சரித்திரத்தை நன்கு வாசித்துப் பயனடையவேண்டுகிருேம். இவரது அருமைப்புதல்வர்வளுக்கு நாம் என்ன சொல்லவிருக்கிறது. இத்தகைய தந்தையின் அங்யாதிருசமான குணங்களைப் பின்பற்றி ஒழுகுவதே மேன்மை பயக்குமென்பதில் தடையில்லை.

கீழ் பெங்காளத்தின் அமளி இன்னுமடங்கவில்லை. தெருக்களில் 'வந்தே மாதரம்' என்று சொல்லக்கூடாது என்னும் உத்தரவை ரத்து செய்ததாகச் சொன்னுர்கள். ஆனல் ஸர். பி. புல்லரும் இவ்வாறு ஜனங்கள் வார்த்தைக்கு இணங்குவரோவென்று நாம் ஸந்தேகித்தோம். அதற்கேற்ப அவ்வுத்தரவு மீண்டும் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்பட்டு விட்டதெனக் கேள்விப்படுகிருேம்.

162006

இதுவே ஸரி. பள்ளிக்கூடத்துப் பையன்களை உபத்திரவிப்பதும், வந்தே மாதரம் சொல்லுமவர்களைப் பிராஸிகூஷன் செய்வதும், அதை ஹைகோர்டு ஜட்ஜ்கள் விசாரணை செய்யும் காலத்தில் அவர்கள் "இதென்னது இது: பள்ளிக்கூடத்துப் பையன்களை இவ்வாறு தொந்தரை செய்வது மிகவும் அஸந்தர்ப்பமாயிருக்கிறது. எங்கே பார்த்தாலும் பையன்கள் இத்தகைய காரியங்கள்தான் செய்வார்கள். ஆனால் ஒருவரும் அவைகளை ஒருபொருட்டாக நினைக்கமாட்டார்கள். உலக முழுமையும் பையன்கள் பையன்கள்தானே" என்று மொழிந்ததைக்கூடக் கவனியாமலிருப்பதும், இந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் பேதத்தை உண்டாக்கிக் கலகத்திற்கு இடம் கொடுப்பதும், ஸர் பி. புல்லர் கம்பெனியாருக்குத்தான் தகும். இது விஷயத்தால் நமக்குப் பெரிய நன்மையுண்டாயிற்று என்பதில் சற்றேனும் ஐயமில்லை. ஜனங்களெல்லோரு மொருங்கு சேர்ந்து சுதேசியத்தைக் கொண்டாடுவதும், அந்யதேசத்திலுண்டான சரக்குகளை வாங்குவதில்லை யென்று பிரதிஞ்ஞை செய்துகொள்வதும், பெருந்தகைமை பொருந்திய முதன்மையானவர்கள் ஒருவரேனும் புல்லரின் சட்ட நிரூபண சபையில் அங்கத்தினராக வரமாட்டோமென்று மறுப்பதும், அவ்வேலைகளுக்கு கவுரவத்தையுண்டாக்குவதற்கென்று வைத்துக்கொண்டிருந்த வேலைகளையும் ராஜீனமா செய்வதும், சுதேசியக்கலாசாலைகளையும், கைத்தொழிற் சாலைகளையும் ஏற்படுத்த வெகு ஊக்கத்துடன் முயற்சி செய்வதும், இன்னுமிவைபோன்ற தேசத்திற்கு நன்மை பயக்கக்கூடிய பற்பல காரியங்களும் இச்சமயமின்றி வேறெக்காலத்திலும் ஸாத்தியமானதன்று. இவ்வளவு நன்மைக்கும் காரணமாயிருக்கும் ஸர். பி. புல்லர் கம்பெனியாருக்கு நாம் யாது கைம்மாறு செய்யப் போகி

றோம். அவர்களுக்கு இந்த உஷ்ண பூமியான இந்தியா வில் வீணே கிடந்து நன்றியில்லா ஜனங்களுக்கு உழைக் கும் தொந்தரையின் நிச்சிக்கிரத்தில் ஸ்வதேசமாகிய இங்கி லாண்டுக்குப் போய் ஸ்வஸ்தமா யிருக்கும்படி மிஸ்டர் மோர்லி செய்யவேண்டுமென்று ஸர்வேசுவரனைப் பிரார்த் திப்பதே நமது இன்றியமையாத கடமையாயிருக்கிறது.

ஃ ஃ ஃ

பாரோடா ஸமஸ்தானத்துக் கதிபதியாகிய ஸயாஜி ராவ் கய்க்வாரவர்கள் மிகவும் பிரஸித்திபெற்ற கல்வித்தி றமையுள்ளவரென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷ யமே. இவரது ஸமஸ்தானத்திற்குத் தான் தற்காலத்தில் ரோமச சந்தரதத்தர் திவானுகை வேலைபார்த்து வருகிறார். இவர் இங்கிலீஷ் ராஜாங்கத்தார் பின்பற்றத் தக்கதான அநேக முக்கியமான நல்ல சீர்திருத்தங்களை யெல்லாம் இந்த ஸமஸ்தானத்தி லேற்படுத்தி யிருக்கிறார். கல்வி விஷயத்தில் இவர் நாடெங்கும் சம்பளம் முதலிய யா தொரு செலவுமின்றிப் பிரைமரி பள்ளிக்கூடங்கள் ஏற்ப டுத்தும்படி தீர்மானித்திருப்பது மிகவும் சிலாக்கியமா னதே. கல்வியை விற்பது பெரும்பிழை யென்றும், குடி களுக்குக் கல்வி கற்பிப்பது அரசனது கடமையென்றும் நமது சாஸ்திரங்கள் கூறியிருப்பதை இவர் நன்கறிந்து இத்தகைய முயற்சிசெய்வது வியக்கற்பாலதே. இதை மற்றைய அரசர்களும் பின்தொடருவார்களென்று விரும் புகிறோம்.

ஃ ஃ ஃ

ஸ்பெயின் தேசத்தரசனுகிய அல்பான்ஸோவுக்கும் நமது சக்ரவர்த்தியின் ஸஹோதரியின் புத்திரியாகிய ஈனு என்னும் ராஜகுமாரத்திக்கும் மிகச்சிறப்புடன் விவாக மஹோற்சவம் நடந்து ஊர்வலமாய் இருவரும் கோவிலி லிருந்து தங்களரண்மனைக்குத் திரும்பிவரும் மார்க்கத்

தில் ஒரு மஹாபாதகன் பாம்ப் என்று சொல்லப்படும் வெடிக்குண்டை யோர் புஷ்பச்செண்டில் மறைத்து ஒரு மாளிகையின் நான்காவது மாடியிலிருந்து ராஜதம்பதிகளின் வண்டியின்மேல் எறிந்ததாகக் கேட்க எல்லோருக்கும் ஆச்சரியம் மேலிடுகிறது. நல்லவேளையாய் ஈசுவர கிருபையால் ராஜதம்பதிகளுக்கோர் வித தீங்கும் நேரிடவில்லையாயினும், அவர்கள் ஸவாரி வந்த வண்டியும் குதிரைகளும் ஸாரதிகளும் சின்னாபின்னமாய்ப் போய்விட்டமை ஹிந்துக்களாகிய நமக்கு அமங்களமாகத் தோற்றுமென்பதில் தடையில்லை. அந்த மகாபாபி இத்தகைய கொடிய செய்கைக்கு இச்சமயத்தைத் தானா தேர்ந்தெடுக்கவேண்டும்? மேற்கு தேசங்களெல்லாம் நாகரிகம் மிகவும் ஜாஸ்தியென்பதற்கு இதுதானா நிதர்சனம்? இவன் செய்த காரியம் ஈசுவரனுக்கே ஸம்மதமில்லாததால் இவன் உடனே கண்டு பிடிக்கப்பட்டுத் தானே சுட்டுக்கொண்டிறந்தான். இந்த இருபதாவது நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட செய்கைகள் நடத்தல் ஸாத்தியமென்பதைக் காண நமது மனம் பதறுகிறது. இவ்வாறு கல்யாணமான நாளிலேயே தெய்வவசத்தால் தப்பிப் பிழைத்த ராஜதம்பதிகள் நீடூழிகாலம் ஸுகித்து வாழ வேண்டுமாய்ப் பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

புத்திசாலிகளான மூன்று புத்திரர்கள்.

முடிகொண்டான் என்னும் கிராமத்தில் கிருஷ்ணமூர்த்தி என்னும் பெயருடைய ஒரு பிராம்மணர் இருந்தார். அவருக்கு ராமன், த்ருவன், மார்க்கண்டன் எனப் பெயருள்ள மூன்று குமாரர்களுண்டு. இவர்களில் மூத்தவனான ராமனென்பவன் தன் பெயருக்குத் தக்கபடி மிக்க நல்லொழுக்கமுடையவனாகவும் தகப்பனாரது சொல்லைத் தட்டாதவனாகவும் விசேஷ தெய்வபக்தியுடையவனாகவும் இருந்தான். இளையவனான த்ருவன் என்பவனும் தன் பெயருக்கேற்றபடியே நடந்து வந்தான். சரீரப் பாடுபட்டால் எவனும் உயர்ந்த பதவிக்கு வரலாமென்பது இவனது கொள்கையாயிருந்தது. மூன்றாவது பையனான மார்க்கண்டனோ விதியையும் மதியால் வெல்லலாம் என்ற கோட்பாட்டையுடையவனாய் எவ்வளவு பெரிய காரியத்தையும் தன் சூக்ஷ்மமான புத்தியைக்கொண்டு சுலபமாகச் சாதித்து வந்தான்.

எல்லாம் 'என்னையாளும் ஈசன் செயல்,' என்று கொண்டு நடப்பதும், 'முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்' என்றெண்ணி

யொழுகுவதும், 'யாஅ ருபாயத்தின் வாழாதார்' என்று தேர்ந்து செல்வதும் ஒவ்வொரு வழியாகப் பார்க்கும்போது நியாயமாகவே காணப்பட்டபடியால் பிதாவும் தம் குமாரர்களை யவரவர்கள் போனவழியிலேயே விட்டுவிட்டார். குமாரர்களும் தங்கள் நெறியில் ஐயமுள்ளவர்களாகவே வாழ்ந்து வந்தார்கள்.

இப்படியிருக்க, ஒருநாள் கிர்ஷ்ணமூர்த்தி சாஸ்திரியார் தம் மூன்று புதல்வர்களையும் அருகிலழைத்து, "பிள்ளைகளே, எனக்கோ நிரம்பவும் வயதாகிவிட்டது. வாசற்படி வரையிலுங் கூட எழுந்து போய்வரச் சக்தியில்லை. இன்னும் ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோதான் நான் உயிருடன் இருப்பேன். மரணம் அதிசமீபத்தில் வந்துவிட்டதாக எண்ணுகிறேன். ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லுகிறேன்; கேளுங்கள். நான் உங்களுக்காக அதிகமாகப் பொருளொன்றுஞ் சேர்த்துவைக்கவில்லை. நீங்கள் தலையெடுத்துத்தான் எப்படியாவது பிழைக்கவேண்டும். கைப்பெட்டியில் ஒரு காகிதத்தில் நீங்கள் நடக்கவேண்டிய மாதிரியைப் பற்றி மாத்திரம் ஒன்றையெழுதிவைத்திருக்கிறேன். அந்த விதமே நீங்கள் நடப்பீர்களானால் உங்கள் வாழ்நாள் முழுதும் கஷ்டமென்பது கொஞ்சங்கூட இல்லாமல் சுகப்படுவீர்கள்." என்று அன்போடு சொன்னார். பிள்ளைகளும் 'தந்தைசொன் மிக்க மந்திர மில்லை' யென்ற எண்ணமுடையவர்களாகையால், "அப்படியே நடக்கிறோம். உங்கள் அமிர்த வாக்கியத்தை நாங்கள் கடப்போமா?" என்று சொல்லிப்பணிந்து சென்றார்கள்.

சில நாளுக்குள் பிதா காலஞ்சென்றுவிட்டார். குமாரர்கள் மூவரும் மிக்க வருத்தத்தை யடைந்து ஒருவாறு தேறி, செய்யவேண்டிய பிதிர்க்கடன்களை யொழுங்காகச் செய்து முடித்துவிட்டுப் பெட்டியிலிருக்கும் கடிதத்தில் என்ன எழுதியிருக்கின்றது பார்ப்போமென்று சொல்லி யக்கடிதத்தை யெடுத்து வாசித்தார்கள். அக்கடிதத்தில் "பாணி, கால், ஆவி முதலியவற்றை ஈசுவரன் உங்களுக்குக் கொடுத்திருக்கின்றான். அவற்றை நன்றாக உபயோகப்படுத்தத் தெரிந்துகொள்ளுங்கள்; சுகம் பெறலாம்." என்று வரைந்திருந்தது. பார்த்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஒழுக்கத்திற்கு இசையப் பொருள் செய்பலானார்கள்.

மூத்தவன் சொல்லுகிறான்:—"தெரிந்தீர்களா பிதாவின் கருத்தை. உயிருடன் இருக்கும்போது சொன்னால் மூத்தபிள்ளையின் மேல் அபிமானங்கொண்டு சொன்னான் என்று நீங்கள் சண்டையிடுவீர்களென்று கருதிச் சொல்லாம விருந்துவிட்டதாகத் தெரிகிறது. கை கால் முதலான அவயவங்களையும் உயிரையும் ஈசனுக்கே அர்ப்பணஞ்செய்யவேண்டும். மலர்பறித்து அர்ச்சனைசெய்தும், ஆலயத்தைப்பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தும் பிராணனை அவன் வசமாகச் சமர்ப்பிப்போமானால் நாம் மோக்ஷசுகத்தை யடையலாம்." என்று வேதாந்த ஸாரமான இந்த வாக்கியத்தை யெழுதியிருக்கின்றார். ஆகையால் நீங்களிருவரும் தந்தைசொல்லை யிகழாமல் என்னுடன் சேர்ந்து ஈசுவரனைப் பஜியுங்கள். க்ஷேமம் பெறலாம்."

இளையவன் சொல்லுகிறான்:—"அண்ணா என் தப்பபிப்பிராயம் பண்ணுகின்றீர்? அப்படியா நம் பிதா எழுதிவைப்பார்? பஜனை பண்ணிக்கொண்டிருந்தால் பசி தணியுமா? கையும் காலும் கொடுத்திருக்கின்றான் பகவான். ஆகையால் மெய்வருந்தி வேலைசெய்து சுகமாய்ப் பிழையுங்கள். யாசித்தும், ஊழியஞ்செய்தும், சுதந்தரத்தை யிழந்தும் பிழைக்கும் பிழைப்பு சுகமானதன்று. என்பதல்லவோ நம் தந்தையின் கருத்தாகக் கொள்ளவேண்டும். தர்ம சாதனமான சரீரத்தைக் காப்பாற்ற வழிதேடிக்கொண்ட பின்னல்லவா மோக்ஷத்திற்கு வழிதேடவேண்டும். புழைக் கடையில் வாழைகிடந்து காய்கிறது. தண்ணீர் இறைத்துப் பாய்ச்சுவோம் வாரும்."

மார்க்கண்டன் சொல்லுகிறான்:—சகோதரர்களே! நீங்களிருவரும் செய்தபொருள் சரியானதன்று. மகாபுத்திமானான நமது பிதா சாதாரணமான இந்தப் பொருள்கொண்ட வாக்கியத்தையா எழுதிவைப்பார்? அப்படிக்கிருந்தால் இதைப் பெட்டில் வைத்துப் பூட்டுவரோ? யோஜித்துப் பாருங்கள். ஆழ்ந்த பொருளுள்ளதாக நான் நினைக்கிறேன். பாணி-கால்-ஆவி-என்னும் பதங்களுக்கு முறையே நீர்-காற்று-நீராவி யென்று பொருள். நீரின் சக்தியைக்கொண்டும், காற்றின் சக்தியைக்கொண்டும், நீராவியின் சக்தியைக்கொண்டும் இயந்திரங்கள் செய்யக் கற்றுக்கொண்டால் எத்தனையோ அற்புத காரியங்களைச் செய்து பொருள்குவித்துக் குபேரனாக வாழலாம். 'நன்றாக உபயோகப்படுத்தி' யென்ற தன் கருத்து

இதுவாகத்தான் இருக்கவேண்டும். என் சொல்லை யிகழாமல் தயைசெய்து கேட்பீர்களானால் எத்தனையோ சீரும் சிறப்புமாக வாழலாம். வாருங்கள்; நீரைக்கொண்டு ஒரு இயந்திரம் செய்ய முயற்சிப்போம்.

இப்படி, அவரவர்களும் தங்கள் தங்கள் கருத்தின்படியே செய்வது நலம் என்று தீர்மானித்துக்கொண்டு பிரிந்தார்கள். அநேக நாள் வரையில் இவர்களைப்பற்றிய சமாசாரம் ஒன்றுந் தெரியவில்லை. இப்போது விசாரிக்கும்போது, மூத்தகுமாரனான ராமனென்பவன் (ஏகவசனமாகச் சொல்லக்கூசுகின்றது) ஸ்ரீராம பரமஹம்ஸர் என்னுந் திருநாமத்தோடு அநேக சிஷ்யர்கள் தம் அடிபணிய ஞானமூர்த்தியாக விளங்குகின்றாரென்றும், இளைய புதல்வன் த்ருவன் நூறு ஏர் பயிர்ச்செலவு வைத்துக்கொண்டு இப்போது பெரிய சீமானாகச் செழிக்கின்றானென்றும், மார்க்கண்டனென்பவன் அச்சியந்திர மொன்றைப் புதிதாகக் கண்டுபிடித்து ஒரு நாழிகை நேரத்தில் 10000-புத்தகங்களை அச்சிட்டு லோகோபகாரமாக வெளியிட்டுக்கொண்டு, உலகத்தார்கள் கிர்ஷ்ணமூர்த்தி சாஸ்திரியாரின் கடைசிக் குமாரனானதால் தன்னை பாலகிர்ஷ்ணனென்னும் மறுபெயராலழைக்க மார்க்கண்டன் போலவே சிரஞ்சீவியாக வாழ்ந்து வருகின்றானென்றுங் கேள்விப்படுகிறோம்.

இதனால் நாம் கற்றுக்கொள்ளக் கூடிய நீதி யென்னவெனில் ஸ்ரீ கிர்ஷ்ணபகவான் அவரவர்கள் ஞானபக்குவத்துக்கேற்பப் பொருள்படும்படி ஸ்ரீ கீதையை யருளிச்செய்திருக்கிறான். எவ்விதமாகப் பொருள்கொண்டு நடந்தாலும் க்ஷேமமுண்டாகும். ஆகையால் என்மதந்தான் உயர்வு என்மதந்தான் உயர்வு என்று நமக்குள் நாமே சண்டையிடலாகா தென்பதாம்.

குப்புசாஸ்திரி:—"ஐயா பத்திராதிபரே! "குப்புசாஸ்திரி இருக்குமிடத்தில் புஸ்தகங்களை வைத்துப் போவது தவறு. அவர் ஒரு பெரிய குருடர்" என்று தங்கள் பத்திரிகையில் என் வெளியிட்டீர்கள்?"

பத்திராதிபர்:—“அவ்வாறு பதிப்பிக்கப்பட்டதற்காக நான் மிகவும் விசனப்படுகிறேன். அப்படி அச்சுக்கோத்த கம்பாஸிட்டரையும் நான் உடனே வேலையினின்றும் விலக்கிவிட்டடேன்.”

துப்புசாஸ்திரி:—“அப்படியா, தங்களுக்குத் தெரியாமலேயா அவ்வாறு பதிப்பிக்கப்பட்டது? அதற்காகப் பச்சாத்தாபப் படுகிறீர்களோ?”

பத்திராதிபர்:—ஆம்! மிகவும் பச்சாத்தாபப் படுகிறேன். திருடர் என்று நான் நன்றாக எழுதிக்கொடுத்திருக்கவும் அந்த முட்டாள் பையன் குருடர் என்று கோத்துவிட்டான்.”

சிப்பாய்:—“மகாராஜா! நான் நேற்றையுத்தத்தில் நூறு பேருடைய கைகளையும் கால்களையும் வெட்டித் துண்டு துண்டாக வெறிந்துவிட்டேன்.”

மகாராஜா:—“அப்படி யானால் நீ நல்ல வீரன்தான். நீ யேன் ஒருவருடைய தலையையாவது வெட்டவில்லை.”

சிப்பாய்:—“மகாராஜா! அது என்பேரில் குற்றமில்லை. வெட்ட வேண்டுமென்றுதான் எண்ணியிருந்தேன். ஒருவருக்காவது தலையில்லையே. பட்டிமகன் யாரோ வெட்டி விட்டான்போலிருக்கிறது.”

ஒரு குக்கிராமத்தில் சம்ஸ்கிருத பள்ளிக்கூடம் போட்டிருந்த அந்தரான ஒரு உபாத்தியாயர் ஒருநாள் தம் மாணாக்கர்களுக்கு வியாகரண பாடத்தின்போது “லளயோ ரபேதகா” என்ற ஸூத்திரத்தைச் சொல்லிக் கொடுத்திருந்தார். இப்படியிருக்க ஒருநாள் சாயங்காலம் ஒரு பெரும்புலி எங்கிருந்தோ பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடி வந்தது. அதைக்கண்டதும் ஒரு பையன் உபாத்தியாயரிடத்தில் “ஐயா! புளி வருகிறது” என்று சொன்னான். உபாத்தியாயர் “எத்தனை தூக்கு” என்று கேட்டார். “ஒரே தூக்குத்தான்” என்று சொல்லிவிட்டுப் பையன் ஓட்டம்பிடித்து விட்டான். புலியும் தனியாயிருந்த உபாத்தியாயரை யொரே தூக்காகத் தூக்கிப் பக்கத்திலுள்ள ஒரு சாட்டிற் கொண்டுபோய்ப் போட்டுவிட்டது. உபாத்தியாயரும் சிறிது காயத்தோடு தட்டித் தடுமாறி வீடு வந்து சேர்ந்தார்.